# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"


15 APR



பழநியாண்டவர்.

மாலை 10] பிலவங்க - பங்குனி - ஏப்ரல், 1968 [மணி 7

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



கோவிலூர் ஸ்ரீ மந்திரபுரீசுவரர் தேவஸ்தான,
அலுவலகக் கட்டிடக் கால்கோள் விழா. (15—2—68)

## பொருளடக்கம்


1. அடியார்க்கு நல்ல பெருமாள்
2. கந்தர் கலிவெண்பா
3. திருப்பாவைச் செழும் பொருள்
4. மகாபாரதம்
5. குரங்கும், குரங்காட்டியும்
6. உய்விடம்
7. சீவ—சிவ ரகசியம்
8. ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாகம்
9. புருஷசூக்தமும், அதன் பொருட்சிறப்பும்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 10] பிலவங்க - பங்குனி - ஏப்ரல், 1968 [மணி 7

# "அடியார்க்கு நல்ல பெருமாள்"

**முன்னுரை :**

"அடியார்க்கு நல்ல பெருமாள்" என்னும் தொடர் முருகப் பெருமானைக் குறித்து அருணகிரிநாதர் அருளிச் செய்ததாகும். இஃது அவர் இயற்றியருளிய 'கந்தர் அலங்காரம்' என்னும் செந்தமிழ்த் துதி நூலில் வருகின்ற, ஓர் அரும்பெரும் சொற்றொடர்!

**கந்தர் அலங்காரம் :**

முருகனின் துதி நூல்கள் பலவற்றில், கந்தர் அலங்காரம் முதன்மைச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வதொன்று.

" சலங்காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார்;
யமன் சண்டைக்கு அஞ்சார்;
துலங்கா நரகக் குழி அணுகார்;
துட்ட நோய் அணுகார்;
கலங்கார் புலிக்கும் கரடிக்கும்
யானைக்கும்; கந்தர் நன்னூல்
அலங்கார நூற்றுள், ஒரு கவிதான்
கற்று அறிந்தவரே."

எனப் பெரியோர்கள், இந்நூலின் சிறப்பினை இனிது தெடுத்துரைத்துப் போற்றியுள்ளனர்.

**தாயுமானவர் :**

தமிழகத்தில் தாயுமானவ அடிகளின் அருமை பெருமைகளை அறியாதார் எவரும் இலர். 'வேதாந்த சித்தாந்த சமரசஞான வித்தகச் சான்றோர்' என, அறிஞருலகம் அவரை விதந்து வியந்து போற்றுகின்றது. அத்தகைய தாயுமான சுவாமிகள் தாமும், கந்தர் அலங்காரத்தினைக் கனிவு மிகப் பல்கால் காதலித்து ஓதி இன்புற்றார்; அதன் சொற்பொருட் சுவை நலங்களில் அழுந்தித் திளைத்து அகம்மிக மகிழ்ந்தார்!

யான்தான் எனும்சொல் இரண்டும்
கெட்டாலன்றி, யாவருக்கும்
தோன்றாது சத்தியம்; தொல்லைப்
பெருநிலம் சூகரமாய்க்
கீன்றான் மருகன், முருகன்
க்ருபாகரன் கேள்வியினால்
சான்றுஆரும் அற்ற தனிவெளிக்கே
வந்து சந்திப்பதே.

எனவரும் கந்தர் அலங்காரக் கவிதையினைத் தாயுமானவர் கற்றுச் சுவைத்துக் களிப்புற்றார். அதன் பயனாகவே,

" யான்தான் எனல் அறவே
இன்பநிட்டை என்று அருணைக்
கோன்தான் உரைத்தமொழி
கொள்ளாயோ நன்னெஞ்சே"

(2) அடிமையாகியதொண்டுபுரிவோர்கள் 'அடியார்' எனப் படுவர். 'என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ' என்பது உணர்ந்து, இறைவனுக்கு 'மீளா அடிமை' பூண்டு, நாம் அனைவரும் பணிசெய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

"அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே"

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். நாம் இறைவனுக்கு அடிமை பூண்டு அன்புப் பணிகள் செய்து வந்தால் தொகுவினை (சஞ்சிதம்), நுகர்வினை (பிராரத்தம்,) வளர் வினை (ஆகாமியம்) என்னும் தீவினைகள் நம்மை நலிவுறுத்த மாட்டாவாய் அகன்றொழியும்.

(3) 'அடியார்' என்பது, இறைவனின் திருவடிக்கண் ஆர்ந்தவர்களையும் குறிக்கும். ஆர்தல் பொருந்துதல். 'அடி ஆர்பவரே அடியவர் ஆமால்' என்பது திருமூலர் திருமந்திரம். 'அடியேன் எனச் சொல்வது அல்லால் நின்தாள் அடைந்தவரைக் கண்டு துடியேன்' என்பர் இராமலிங்கர். அடிஆர்தல் ஆகிய அரும்பெறற்பேறு, உடல் ஒழிவின்கண் மறுமை நிலையில் மட்டுமே அடையப்பெறுவது ஒன்றன்று.

"ஊனில் ஆவி உயிர்க்கும் போதெலாம்
நான் நிலாவி இருப்பன் என் நாதனை"

என்றபடி, உடம்பொடுகூடி உயிர்வாழும் போதே, இறைவனின் திருவடிகளில் நாம் ஆர்ந்திருத்தல் கூடும். அத்தகையவர்களையே, சீவன்முத்தர்கள் என்பர்.

"தவம்செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான
ஆறுசெல் வருத்தம் அகல நீக்கி"

என இங்நிலையினைப் "பொருநர் ஆற்றுப் படை" என்னும் சங்கப் பாடலும் குறித்திருத்தல் காணலாம். தன்னை அடைந்தவர்களுக்கு, ஈசன் எந்தை இணையடி நீழல், மாசில்வீணையும் மாலைமதியமும், வீசு தென்றலும், வீங்கிளவேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்று விளங்கும்.

(4) 'அடியார்' என்பது இறைவனின் திருவடியை ஆர்த்தவர்கள் எனவும் பொருள்படும். ஆர்த்தல் கட்டுதல். 'அத்தாஉன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்; அருள் நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்' எனத் திருநாவுக்கரசர் பாடுதல் காணலாம்.

"இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்"
"வாழினும் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்"

என்னும் உறுதிமிக்கவர்களாய், நின் 'சரண் அல்லால் சரண் இல்லை' என்று, இறைவன் அடிகளையே நம்பிச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளும் அன்பர்களே, அடியார் எனப் படுவர்.

"சித்தம் எனும் திண்கயிற்றால்
திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல்
விளங்குதில்லைக் கண்டேனே"

—மணிவாசகர்.

"எட்டினோடு இரண்டு எனும்
கயிற்றினால் மனம்தனைக்
கட்டி வீடிலாது வைத்த
காதல் இன்பம் ஆகுமே"

—குலசேகரர்.

"அடியார்க்கு நல்லவன் முருகன்" என்பதனை அருணகிரியார் தமது வாழ்விற் பல்கால் நன்கினிது அனுபவித்து அறிந்தவர்; நம்மைப்போன்று, பெரியோர் பலர் சொல்லக்கேட்டோ, நூல்களின் வாயிலாகக் கற்றோ மட்டும், அதனை அறிந்தவர் அல்லர்! கவிஞர்களின் அரிய அனுபவங்களே அவர்தம் கவிதைகளில் பெரும்பாலும் வெளிப்படுதல் இயலும். 'நெஞ்சின் மிக்கதுவே வாய்சோரும்' என்பது பழமொழி. அருணகிரியார்பால் முருகப் பெருமான் காட்டிய அருட்டிறங்கள் மிகப் பல. முருகனின் அருள் நலனை முழுவ

(2) அடிமையாகியதொண்டுபுரிவோர்கள் 'அடியார்' எனப் படுவர். 'என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ' என்பது உணர்ந்து, இறைவனுக்கு 'மீளா அடிமை' பூண்டு, நாம் அனைவரும் பணி செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

"அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே"

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். நாம் இறைவனுக்கு அடிமை பூண்டு அன்புப் பணிகள் செய்து வந்தால் தொகுவினை (சஞ்சிதம்), நுகர்வினை (பிராரத்தம்,) வளர் வினை (ஆகாமியம்) என்னும் தீவினைகள் நம்மை நலிவுறுத்த மாட்டாவாய் அகன்றொழியும்.

(3) 'அடியார்' என்பது, இறைவனின் திருவடிக்கண் ஆர்ந்தவர்களையும் குறிக்கும். ஆர்தல் பொருந்துதல். 'அடி ஆர்ப வரே அடியவர் ஆமால்' என்பது திருமூலர் திருமந்திரம். 'அடியேன் எனச் சொல்வது அல்லால் நின்தாள் அடைந்தவரைக் கண்டு துடியேன்' என்பர் இராமலிங்கர். அடிஆர்தல் ஆகிய அரும்பெறற்பேறு, உடல் ஒழிவின்கண் மறுமை நிலையில் மட்டுமே அடையப்பெறுவது ஒன்றன்று.

"ஊனில் ஆவி உயிர்க்கும் போதெலாம்
நான் நிலாவி இருப்பன் என் நாதனை"

என்றபடி, உடம்பொடுகூடி உயிர்வாழும் போதே, இறைவனின் திருவடிகளில் நாம் ஆர்ந்திருத்தல் கூடும். அத்தகையவர் களையே, சீவன்முத்தர்கள் என்பர்.

"தவம்செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான
ஆறுசெல் வருத்தம் அகல நீக்கி"

என இங்ஙிலையினைப் "பொருநர் ஆற்றுப் படை" என்னும் சங்கப் பாடலும் குறித்திருத்தல் காணலாம். தன்னை அடைந்தவர்களுக்கு, ஈசன் எந்தை இணையடி நீழல், மாசில்வீணையும் மாலைமதியமும், வீசு தென்றலும், வீங்கிளவேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்று விளங்கும்.

(4) 'அடியார்' என்பது இறைவனின் திருவடியை ஆர்த்தவர்கள் எனவும் பொருள்படும். ஆர்த்தல் கட்டுதல். 'அத்தாஉன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்; அருள் நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்' எனத் திருநாவுக்கரசர் பாடுதல் காணலாம்.

"இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்"
"வாழினும் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்"

என்னும் உறுதிமிக்கவர்களாய், நின் 'சரண் அல்லால் சரண் இல்லை' என்று, இறைவன் அடிகளையே நம்பிச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளும் அன்பர்களே, அடியார் எனப் படுவர்.

"சித்தம் எனும் திண்கயிற்றால்
திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனர் விளையாடல்
விளங்குதில்லைக் கண்டேனே"
—மணிவாசகர்.

"எட்டினோடு இரண்டு எனும்
கயிற்றினல் மனம்தனைக்
கட்டி வீடிலாது வைத்த
காதல் இன்பம் ஆகுமே"
—குலசேகரர்.

"அடியார்க்கு நல்லவன் முருகன்" என்பதனை அருணகிரியார் தமது வாழ்விற் பல்கால் நன்கினிது அனுபவித்து அறிந்தவர்; நம்மைப்போன்று, பெரியோர் பலர் சொல்லக்கேட்டோ, நூல்களின் வாயிலாகக் கற்றோ மட்டும், அதனை அறிந்தவர் அல்லர்! கவிஞர்களின் அரிய அனுபவங்களே அவர்தம் கவிதைகளில் பெரும்பாலும் வெளிப்படுதல் இயலும். 'நெஞ்சின் மிக்கதுவே வாய்சோரும்' என்பது பழமொழி. அருணகிரியார்பால் முருகப் பெருமான் காட்டிய அருட்டிறங்கள் மிகப் பல. முருகனின் அருள் நலனை முழுவ

தும் பெற்றுத் துய்த்துணர்ந்தவர் அருண கிரியார். முருகனின் திருவருட் பெருங் கடலில் மூழ்கிக் குளித்துத் திளைத்துக் களித்தவர்களுள், அருணகிரியார் தலை சிறந்தவராவர்.

"காளைக் குமரேசன் எனக்கருதித்
தாளை பணியத் தவம் எய்தியவா"

"அமரும் பதிகேள் அகமாம் எனும்இப்
பிமரம் கெடமெய்ப் பொருள் பேசியவா"

"சொல்லுகைக் கில்லைஎன் றெல்லாம் இழந்து
சும்மா இருக்கும்
எல்லையுட் செல்ல எனை வழிவிட்டவா"

"அறிவினுக்குள் என்னை நெறியில்
வைக்க வல்ல
அடியவர்க்கு நல்ல பெருமாளே"

எனப்பல இடங்களிலும், முருகப்பெருமான் தமக்குச் செய்த திருவருட்டிறத்தினை அருணகிரியார் புகழ்ந்து போற்றியிருத்தல் காணலாம்.

**சொற்பொருள் வகைகள் :**

கவிஞர்கள் தமது கவிதைகளில் பயன் படுத்தும் சொற்களின் பொருள் நுட்பங்கள் பலவகைப்படும். சில சொற்களின் பொருள், உலகவழக்கு நூல்வழக்கு என்னும் வழக்காறுகளை ஒட்டி அமையும் (Semantic meaning); சில சொற்கள் அவற்றைக் கூறுவோனுடைய விருப்பு வெறுப்பு முதலியவற்றின் விளைவாக வெளிப்படும் ஒலிக்குறிப்புகளுக்கு ஏற்றபடி பொருள் தரும் (Phonetic meaning); ஒரு சில சொற்கள் தம்மீது கவிஞன் புதிது படைத்துத் தனது புலமையாற்றலால் ஏற்றிவைக்கும் பொருள்களைப் புலப்படுத்தும் (Intentional meaning); சில சொற்கள் சிறியனவும் எளியனவுமாக இருப்பினும், கவிஞனின் உணர்ச்சிப் பெருக்கத்தின் விளைவாக, இன்னதென்று வரையறுத்து அளவிட்டுக்கூற இயலாத பல திறப் பொருள் நுட்ப மாட்சிமைகளை உடையனவாகத் திகழும் (Emotional meaning). இவ்வுண்மையினை இலக்கியத் திறனாய்வாளர்கள் யாவரும் இனிதறிவர்.

"அடியார்க்கு நல்லவன் முருகன்" என அருணகிரியார் அனுபவித்து உணர்ந்து அருளிச் செய்ததும், இத்தகையதோர் உணர்ச்சிப் பெருக்கப் பொருள் நலம் உடையதே ஆகும். 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' எனத் தொல் காப்பியர் பணித்தருள்வர். இவ்வடிப் படையை உணர்ந்து இனிது ஆராயும் போது, 'நல்ல' என்னும் அடைமொழியின் பொருள் நுட்பம், எல்லையின்றிப் பரந்து விரிந்து செல்கின்றது.

**நல்ல :**

(1) அடியார் என்னும் சொற்குறிப்பினால், தலைவன் அல்லது எசமானன் ஒருவன் உளனாதல் பெறப்படும். அன்பர்களாகிய நாம் அனைவரும் அடியவர்கள். முருகப் பெருமான் நம்மனோர் எல்லார்க்கும் தலைவன். நாம் நம் உலகியல் வாழ்விற் காணும் பலவகைத் தலைவர்களுக்கும், முருகனாகிய தலைவனுக்கும் இடையே பல திற வேற்றுமைகள் உண்டு. உலகத்தில் தலைவர்கள் ஏவலர் பலரை அமர்த்திக் கொள்வது, தங்களுடைய நலனும் வசதியும் கருதியே ஆகும். ஆனால் முருகன் அடியவர்களை ஆட்கொள்வது, அவர்களுக்குப் பல நலமும் விளைவித்தற் பொருட்டே அன்றி, இழிந்த சுயநலம் கருதியன்று! முருகன் தன் அடியவர்க்கு இம்மை மறுமை நலங்களை எல்லாம் முற்றக் கொடுத்தருள்கின்றான்.

"முருகா எனஉனை ஓதும்
தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்;
வியாதி அடைந்து நையார்;
ஒருகாலமும் துன்பம் எய்தார்;
பரகதி உற்றிடுவார்;
பொருகாலன் நாடு புகார்;
சமராபுரிப் புண்ணியனே"

—சிதம்பர சுவாமிகள்.

(2) அடியார்க்கு எளியவன் முருகன். முருகன்பால், நாம் அவனது அருளை எளிதாகவும் விரைவாகவும் பெறலாம். 'குழந்தையின் கையிலுள்ள பொற்கிண்ணத்தினைப்போல' மிகவும் எளிதில் அடை



திருமுருகன்

எட்டிகுடி.

அன்பளிப்பு:
"லிப்கோ"
சென்னை-17.

யத்தக்கவன் முருகன்! முருகனின் திருவடிகளில் அடைக்கலம் புகுந்தால், எத்தகைய கொடியவர்களும் திருந்தி, நலம் பல பெற்று உய்வர். சில தெய்வங்கள் தம்மை எதிர்த்த அசுரர்களை அறவே அழித்தொழித்ததாக நாம் நூல்களினல் அறிகின்ருேம். ஆனல் தன்னை எதிர்த்து நின்ற கொடியவனுகிய சூரபதுமனையும் கூட, முருகப்பெருமான் நல்லவனுக்கித் திருத்தி ஆட்கொண்டு காத்தருளினன்.

தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்ருல்,
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை,
ஆயவும் வேண்டும் கொல்லோ ?
அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்ருே,
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான் ?

—கந்தபுராணம்.

தம்மை அடைந்தவர்கள் தவறு செய்யின், நாம் உலகியலிற் காணும் தலைவர்களுள், தலையாயினர் பிழையை உட்கொண்டு அமைதலும், இடையாயினர் அவரைத் துறத்தலும், கடையாயினர் அவரைக் கெடுத்தலும் செய்யக் காண்கின்ருேம். இம்மூவகையும் செய்யாது இரங்கிக் காத்தருள்பவன் இறைவன். (கோவை—65).

(3) உலகத்தில் தலைவர்கள் தங்களுக்குப் பலதிறப் பணிவிடைகளைச் செய்வதற்கென்றே, ஏவலர் பலரை அமர்த்திக் கொள்வது வழக்கம். ஆனல் முருகனே, தன் அடியவர்களிடத்துத் தானே வலிந்து சென்று, பலவகைப் பணிவிடைகள் செய்வதில் இன்பம் காண்கின்ருன்.

" பணியா என வள்ளி பதம்பணியும்
தணியா அதிமோக தயாபரனே "

—கந்தர் அநுபூதி.

கண்ணபிரான் பாண்டவர்களுக்குத் தூது போனன்; பார்த்தனுக்குச் சாரதியாக அமர்ந்து பணியாற்றினன். சிவபிரான் சுந்தரர் பொருட்டுப் பிச்சை எடுத்துழன்றதும், பரவையார்பால் தூது சென்றதும், பாணபத்திரர்க்காக விறகு சுமந்ததும், வந்தி அம்மையின் கூலியாளாய் மண் சுமந்து அடிபட்டுப் புண் சுமந்ததும் போன்ற வரலாறுகள், இங்கு எண்ணி இன்புறுதற்குரியன.

(4) எசமானர்கள் இருக்கும் இடத்தைத் தாம் தேடிச் சென்று, அவர்கள் இடும் கட்டளைகட்கு இணங்கக் குற்றேவல் புரிவது, உலகத்தில் பணியாளர் இயல்பு. ஆனல் முருகனே, தன் அடியவர்கள் இருக்கும் இடத்தைத் தான் தேடிச் சென்று, அவர்களுக்கு அருள் புரிகின்ருன்.

" எங்கே என்னை இருந்திடம் தேடிக்கொண்டு
அங்கே வந்து அடையாளம் அருளினர்"

—அப்பர்.

" எங்கேனும் இருந்துன் அடியேன் உனை
நினைந்தால்
அங்கேவந் தென்னெடும் உடனுகி
நின்றருள்வாய்"

—சுந்தரர்.

(5) எசமானர்களின் மூட்டை முடிச்சுகள் ஆகிய பாரங்களைத் தூக்கிச் சுமந்துகொண்டு உடன் செல்லுதல், உலகத்து வேலைக்காரர்கள் வழக்கம். ஆனல் முருகனே, 'வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் என்னிடத்தில் வாருங்கள்! நான் உங்களுடைய பாரத்தைச் சுமந்துகொண்டு, உங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றேன்' (1) என்று, தன் அடியவர்களின் பாரங்கள் பலவற்றையும் தானே வலிந்து வந்து ஈர்த்து ஏற்றுச் சுமந்து கொள்கின்ருன்.

" வீரமும் பூண்பர் விசயனேடு ; ஆயதோர்
தாரமும் பூண்பர் ; தமக்கு அன்பு பட்டவர்
பாரமும் பூண்பர் ; நற் பைங்கண் மிளிர்அரவு
ஆரமும் பூண்பர் அரநெறி யாரே "

—அப்பர்.

" கிடைக்கத் தகுமோநற் கேண்மையர்க்
கல்லால்
எடுத்துச் சுமப்பானை இன்று "

—திருவருட்பயன்.

(6) உலகத்தில் சில எசமானர்கள், நிறைந்த வேலையை வாங்கிக் கொண்டு, குறைந்த கூலியே கொடுக்க முற்படுவது உண்டு. முருகன் அத்தகையவன் அல்லன். 'எள்ளுக்கு எண்ணெய்போல் அளந்து காட்டி', இன்ன வேலைக்கு இவ் வளவு கூலி என்று வரையறை செய்து தருவது, முருகனின் இயல்பு அன்று. காரணமின்றியே கருணைபுரிவது அவனது இயற்கை. உள்ளங்கை அளவு நீர் வார்த்து, ஒரு சில பச்சிலைகளை இட்ட அளவில், அவற்றிற்காகப் பெருமகிழ்ச்சி யுற்று, எல்லாச் செல்வங்களையும் பதவி களையும் ஈந்தருளும் இயல்பினன் முருகன்! அடியார்கள் இட்டதே மலர்; சொற்றதே மந்திரம் எனக்கொண்டு உவப்பது, முருகனின் பண்பு.

"குடங்கை நீரும் பச்சிலையும்
இடுவார்க்கு, இமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் மதுரைப் பரமேட்டி"

—பரஞ்சோதியார்

(7) எசமானர்கள் சிலர், தம்கீழ்ப் பணி புரிவாரை இழி சொல்லும் கடுஞ்சொல்லும் கூறி வைது இகழ்ந்தும், கொடுமைகள் பலசெய்து அலைக்கழித்தும், அவ்வாற்றான் மகிழ்ச்சி கொள்வர். இத்தகைய கொடுஞ் செயல் மனப்பான்மை (Sadism) உலகில் பலரிடத்துக் காணப்படுகின்றது. ஆனால் முருகனாகிய தலைவனோ, தன் அடியவர்கள் மனம் நோகும்படி ஒரு கடுஞ்சொல்லும் கூறமாட்டான். தன் அடியவர்கள் மனம் வருந்துதலைக் கண்டு பொறுத்திருக்க அவனால் இயலாது. தன்னுடைய அடியவர் கள் தளர்ச்சியுறவும் மெலிவெய்தவும், ஒரு போதும் விடமாட்டான் முருகன். பெற்ற தாயைப் போலவும், ஈன்றணிய கற்றாப் போலவும், பரிவுமிகக்கொண்டு கண்ணை இமைகாப்பதுபோலத் தன் அடியவர்களைக் காக்கும் கருணை வள்ளல் முருகன்! அறிந்தோ அறியாமலோ தன் அடியவர்கள் அனாசாரங்கள் புரியினும், அவற்றுக்காகச் சீறிச்சினவாமல், அன்புடன் பொறுத்துக் கொள்ளுதல் முருகனின் அருட்பெரும் பண்பாகும்.

"நோவ உரையான் நோவக்கண் பார்த்திடான்
சாவ நினையான் தளரவிடான் ......"

—சிதம்பர சுவாமிகள்.

ஆருத ஆனந்தத்து அடியார் செய்யும்
அனாசாரம் பொறுத்தருளி, அவர்மேல் என்றும்
சீறுத பெருமானைத் திருமாற் பேற்றெம்
செம்பவளக் குன்றினைச் சென்றடைந்தேன்
நானே.

—அப்பர்.

(8) ஒரு சில எசமானர்கள், தம்கீழ்ப் பணியாற்றும் வேலைக்காரர்கள் செய்வன வற்றில் குற்றம் குறைகளையே கண்டு பிடித்து,சுட்டிக்காட்டிச் சீறிச்சினந்துவைது பழிப்பர்; கடுந்தண்டனைகளும் கொடுப்பர். ஒரு சில எசமானர்கள், பணியாட்கள் நல்லதே செய்தாலுங்கூட, குற்றமாகவே பிறழ உணர்ந்து வெகுள்வர். ஆனால் முருகனோ, தன் அடியவர்களின் குற்றங் குறைகளைக் குறிக்கொண்டு நோக்க மாட்டான். கண்டும் காணாதது போற் பெருந்தன்மையாக இருந்து விடுவான், அடியவர்கள் செய்யும் பிழைகளுக்காக அவர்களுக்குத் தீங்கு எதுவும் செய்ய மாட்டான். அன்பர்கள் செய்யும் பிழைகளை மறப்பதிலும், மன்னித்துப் பொறுமை காட்டுவதிலும், முருகனுக்கு இணையாவார் இலர்.

"குறையுடையார் குற்றம் ஓராய்!
கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே"

—சம்பந்தர்

"ஏதுபிழை செய்தாலும்
ஏழையேனுக்கு இரங்கித்
தீது புரியாத தெய்வமே"

"போரிப் பிரான்எம் பிழைபொறுத்தாற்
போலப் பூதலத்தே
யார்இப் படி பொறுப்பார் ? சொல்க
நீ அறிந்து உளமே"

—சிதம்பரசுவாமிகள்

(9) முருகன் தன் அடியார்களின் குற்றங் குறைகளை மன்னித்து, பொறுத்தருள்வது மட்டுமேயன்றி, அவர்களின் குற்றங்குறை களையே நற்றமாகக் கொண்டு நயப்புறு வான். ஈன்றணிய பசுவானது தன் இளங் கன்றின் மீதுள்ள அழுக்கினையும் விரும்பி

யுண்டு, அதைத் தூய்மை செய்து அக மகிழும். இங்ஙனம் தன் கன்றின்மீது பசுக்காட்டி மகிழும் பரிவினையே 'வாத்சல்யம்' என்பர். அம்முறையில் முருகன் தன் அடியவர்களின் குற்றங்களை நீக்கிக் குணங் கொண்டு கோதாட்டுகின்றான். அன்பர்களின் குற்றங்களையும் 'தோஷ போக்யம் (2) என்னும் நிலையில், குணங்கள்ளாகக் கொண்டு மகிழ்வது இறைவனின் பெரும் கருணைக்குரிய இயல்பு. அடியார்கள் செய்யும் 'பாதகத்திற்கும் பரிசுவைப் பவன்' இறைவன். அடியவர்களின் பாதகத்தையும் பணியாக்கி, அவர்கள் செய்தனவே தவமாக்கி விடுதல், இறைவனது இயல்பாகக் காணப்படுகின்றது. கண்ணப்பர் செருப்பு அணிந்தகாலால் இறைவனின் திருமுடிக்கண் இருந்த மலர்களை விலக்கினார்; எச்சில் நீரை இறைவனின் திருமேனியின் மீது உமிழ்ந்தார்; இழிந்த ஊன் உணவைக் கொணர்ந்து படைத்தார். ஆயினும் அவைகளையெல்லாம், இறைவன் மிகவும் உவந்து ஏற்றுக் கொண்டருளினான். பாதகம் என்றும் பழி என்றும் பாராமல், வேதியனாகிய தந்தையைத் தாளிரண்டும் சேதித்த விசாரசருமர்க்கு, இறைவன் சண்டேசுரப் பதம் தந்து சிறப்பித்தான். ஞானசம்பந்தர் நாவுக்கரசர் நாளைப்போவார் சூதர் சாக்கியர் சிலந்தி கண்ணப்பர் என்பவர்கள், குற்றம் செய்யினும் குணமெனக் கொள்ளும் கொள்கை உடையவன் இறைவன் என்று சுந்தரர் பாடுகின்றார். "என் அடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்" எனப் பணித்தருள்வது, இறைவனின் பண்பு என்று பெரியோர்கள் பலரும் பகர்ந்துள்ளனர்.

(10) முருகன் தன் அடியவர்களின் கருத்தறிந்து முடிப்பவன். அவன் தனது அன்பர்கள் எண்ணிய எண்ணமெல்லாம் இனிது நிறைவேறச் செய்வான்; அவர்கள் வேண்டும் வரமெலாம் வேண்டியவாறே கொடுப்பான்.

"வருபுனல் வாய்க்கென வரங்கொள் வாரும்
கருவயிறு உறுகெனக் கடம்படு வோரும்
செய்பொருள் வாய்க்கெனச் செவி சார்த்து
வோரும்
ஐயமர் அடுகென அருச்சிப் பாரும்"

ஆக அடியவர்கள் பல்லாயிரவர், திருப்பரங்குன்றில் முருகனைப் பரவுகின்றனர் என, இற்றைக்குச் சற்றேறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கும் முற்பட்ட பரிபாடல் என்னும் சங்கநூல் பாடுதல் காணலாம். அடியவர்களின் கருத்தறிந்து முடிக்கும் திறனில், முருகப்பெருமானுக்கு நிகரானவார் இல்லை எனலாம்.

ஆசிரியர் நக்கீரர் தாம்பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றில், பாண்டியன் ஒருவனின் பண்புநலங்களைக் குறிப்பிடுங்கால், "நீ சீற்றத்தால் கூற்றுவனை ஒப்பாய்; வலிமையினால் பலராமனுக்கு இணையாவாய்; புகழினால் பகைவர்களைக் கொல்லும் திருமாலுக்கு நிகராவாய்; அன்பர்கள் நினைப்பவற்றை முடித்து வைத்தலில் முருகனுக்குச் சமானமாவாய்" என்னும் கருத்தமையப் பாராட்டிப் பாடியருளினார்.

"கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலியோனைப்
புகழ்ஒத் தீயே இகழுநர் அடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்"

—புறநானூறு

"எண்ணிய எண்ணிய வாறே
சிறியனுக்கு ஈந்தருளும்
புண்ணியனே நின் மகிமையை
ஓர்ந்திலன் பொய்யவனேன்"

—சிதம்பரசுவாமிகள்

(11) உலகத்தில் தலைவர்கள் பலரும் புகழ்ச்சி விருப்பினராக இருப்பர். எப்போதும் தம்மைப் பிறர் புகழ்ந்து, முகத்துதி செய்து கொண்டே இருத்தல் வேண்டும் எனச் சில தலைவர்கள் பெரிதும் விரும்புவர். தம்மைப் புகழ்ந்து பணிந்து கொண்டு சார்ந்து நிற்போர்க்கே, ஏதேனும் சிறுசிறு உதவிகள் புரிவர். இவ்வியல்பு எசமானர்கள் பலரிடத்தும் காணும் பொதுவான இயல்பு. ஆனால் முருகனோ தன்னை வைது பழித்து இகழ்பவர்களையும் கூட, விரும்பி ஏற்று நலம்புரிந்து காத்தருள்கின்றான். 'முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்போன்' என்கிறார் அருணகிரியார்.

சங்ககாலப் புலவர் ஒருவர், 'வெறி விலக்கல்' என்னும் அகப்பொருள் துறையில், "படிமத்தான் என்னும் பூசாரியின் வேண்டுகையினல், வெறியாடுகளத்திற்கு அவன் மீது ஆவேசம் ஏறிப் பலிபெறுதற்கு வந்துவிட்ட முருகனே! நீ கடவுளாக இருந்தாலும் இரு. உண்மையாக, நீ அறிவு சிறிதும் இல்லாத மடவோனே ஆவாய்! இத்தகைய நீ கேடு எய்துக" எனப் பொருள்படும்படி,

> "கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
> வேலன் வேண்ட வெறிமனை வந்தோய் !
> கடவுள் ஆயினும் ஆக,
> மடவை மன்ற! வாழிய முருகே!"
>
> —நற்றிணை.

எனப் பாடியுள்ளார். "கடவுள் ஆயினும் ஆக, முருகனே நீ மடமை உடையவனே ஆவாய்" எனப்பாடிய அப்புலவரின் பெயர் நற்றிணை என்னும் சங்கநூலில் இன்னும் இடம்பெற்று வாழ்ந்து வருகின்றது. தமிழால் தன்னை வைத அப்புலவரின் பெயரையும் வாழவைத்துள்ளான் முருகன்! இதனுலும், முருகன் அடியார்க்கு நல்லான் எனத் தெள்ளிதிற் புலனுகின்றதன்றே!

## முடிவுரை :

ஒரு நாட்டில் வாழும் மக்களின் பண்பாட்டிற்கு ஏற்பவே, அவர்கள் வணங்கும் தெய்வத்தின் இயல்புகளும் அமைகின்றன. "எத்தியோப்பியர்கள் தங்களைப் போலவே தங்களுடைய தெய்வமும் கருநிறமும் தட்டை மூக்கும் கொண்டிருப்பதாகக் கருதுகின்றனர். திரேசிய மக்கள் தங்கள் கடவுளரும் தங்களைப்போன்றே நீல நிறக் கண்களும் செம்பட்டை மயிரும் கொண்டு விளங்குவதாக நம்புகின்றனர்" (3). இம்முறையில் ஆராய்ந்தால், தமிழ் மக்களின் உயரிய நோக்கங்கள்—கொள்கைகள்—பண்பாட்டு வாழ்க்கை நெறிகள், ஆகியவற்றின் உருவகமாகத் திகழும் முருகப் பெருமானின் அருமை பெருமைகளை, நாம் அறிந்துணர்ந்து நனிமிக மகிழலாம். நம் தமிழகத்துச் சான்றோர்கள் கருதி அறிந்தும், கண்டுணர்ந்தும், செவ்விதின் விளக்கிச் சென்றுள்ள முருகனின் பண்பு நலன்கள், பெரிதும் வியந்து உவந்து போற்றற்பாலனவாகும்.

இங்ஙனம் நினைத்தொறும் இனியபல பொருள் நுட்பங்கள் தோன்ற விளங்கும் "அடியார்க்கு நல்ல பெருமாள்" என்னும் சொற்றொடரின் அருமைப் பாட்டினை ஆய்ந்துணர்ந்து, முருகப்பெருமானின் திருவடிக்கண் அயரா அன்பு செலுத்தி முறையே வழிபட்டு, நலம்பலவும் எய்தி உய்ய, நாம் அனைவரும் முயலுவோமாக !

(திருச்செந்தூர் முருகன் கோயில், மாசி மகப் பெருந்திருவிழாவில், நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவி எழுதியது. 11-3-68.

—ஆசிரியர்)

---

(1) "Come unto me, all ye that labour and are heavy laden and I will give you rest"

—**Matt, 11·28**

(2) "Christ, through some divine instinct in him, seems to have loved that sinner as being the nearest possible approach to perfection in man........ . In a manner not yet understood of the world, he regards sin and suffering as being in themselves beautiful, holy things and modes of perfection"

—**Oscar Wilde,**
*De Profundis.*

(3) Our mental pictures of God are as varied as we are. The Ethiopeans make their Gods black and snub-nosed; the Thracians say theirs have blue eyes and red hair. The triangle if only had the power of speech, would say that the Divine Nature is eminently circular, and in this way each thing would ascribe its own attributes to God and make itself unto God, while all else would appear to it deformed.

—**Dr. S. Radhakrishnan,**
*An Idealist View of Life.*

உ

# திருசெந்தூர்க்

# கந்தர் கலிவெண்பா

## மூலமும் உரையும்

பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும் - தேமேவு

2 நாதமும் நாதாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமுங் காணுத போதமாய்—ஆதிநடு

3 அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தம் தணந்த பரஞ்சுடராய்—வந்த

4 குறியுங் குணமுமொரு கோலமும்அற் றெங்குஞ்
செறியும் பரம சிவமாய்—அறிவுக்

5 கநாதியா யைந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மநாதிகளுக் கெட்டா வடிவாய்த்—தனுதருளின்

6 பஞ்சவித ரூப பரசுகமா யெவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளாய்—எஞ்சாத

7 பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வுங்
காரணமு மில்லாக் கதியாகித்—தாரணியில்

8 இந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்குந்
தந்திரத்திற் சாராது சார்வதுபோல்—முந்தும்

9 கருவின்றி நின்ற கருவா யருளே
உருவின்றி நின்ற உருவாய்த்—திரிகரணம்

10 ஆகவரு மிச்சை அறிவியற்ற லால்இலய
போக அதிகாரப் பொருளாகி—ஏகத்

11 துருவு மருவு முருவருவு மாகிப்
பருவ படிவம் பலவாய்—இருண்மலத்துள்

12 மோகமுறும் பல்லுயிர்க்கும் முத்தியளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத்—தேகமுறத்

13 தந்த அருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்

14 ஆறத்து வாவுமண்டத் தார்ந்தஅத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரும்

15 ஈரிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனிஎண்பான்
ஆரவந்த நான்குநூ றுயிரத்துள்-தீர்வரிய

16 கன்மத்துக் கீடாய்க் கறங்குஞ் சகடமும்போற்
சென்மித் துழலத் திரோதித்து-வெங்நிரய

17 சொர்க்காதி போகமெலாந் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்கார ரணஞ்சிறிது நண்ணுதலுந்-தர்க்கமிடும்

18 தொன்னூற் பரசமயந் தோறு மதுவதுவே
நன்னூ லெனத்தெரிந்து நாட்டுவித்து-முன்னூல்

19 விரதமுத லாயபல மெய்த்தவத்தி னுண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்-தருள்பெருகு

20 சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்து
ஆலோகந் தன்னை அகற்றுவித்து-நால்வகையாஞ்

21 சந்திநி பாதந் தருதற் கிருவினையும்
ஒத்துவருங் கால முளவாகிப்-பெத்த

22 மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி—உலவா

23 தறிவுக் கறிவாகி அவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்-பிறியாக்

24 கருணை திருஉருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு-திருநோக்கால்

25 ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டும், நிலம்
ஏழுமத்து வாக்க ளிருமூன்றும்-பாழாக

26 ஆணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்-பூணும்

27 அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி-முடியாது

28 தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகிஎங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்-போக்கும்

29 வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவுங் கடந்துலவா இன்பம்-மருவுவித்துக்

30 கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வன்மழுவு மானுமுடன் மால்விடைமேல்-மின்னிடத்துப்

31 பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி-மூத்த

32 கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய் துள்நின்
றொருமலத்தார்க் கின்ப முதவிப்-பெருகிஎழு

33 மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருட னேஇருத்தி
ஆன்றபர முத்தி அடைவித்துத்–தோன்றவரும்

34 யானெனதென் றற்ற இடமே திருவடியா
மோனபரா னந்தம் முடியாக–ஞானந்

35 திருவுருவா இச்சை செயலறிவு கண்ணு
அருளதுவே செங்கை அலரா–இருநிலமே

36 சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே-மின்னுருவந்

37 தோய்ந்தநவ ரத்னச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியுந் - தேய்ந்தபிறைத்

38 துண்டமிரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்–விண்ட

39 பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள்பொழியும் கண்மலரீ ராறும்—பரிதி

40 பலவு மெழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும்–நிலவுமிழும்

41 புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயுஞ்
சென்மவிடாய் தீர்க்குந் திருமொழியும்–வின்மலிதோள்

42 வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூர னைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமும்-எவ்வுயிர்க்கும்

43 ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்–சூழ்வோர்

44 வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும் - விடுத்தகலாப்

45 பாச இருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்–நேசமுடன்

46 போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோக மளிக்கு முகமதியுந் - தாகமுடன்

47 வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவுந்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையுங்–கொந்தவிழ்ந்த

48 வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசைலம் பன்னிரண்டும்–ஆரமுதந்

49 தேவர்க் குதவுந் திருக்கரமுஞ் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும் - ஓவாது

50 மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும் - மார்பகத்தில்

51 வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கி லொருகரமும்-மொய்த்த

52 சிறுதொடிசேர் கையும்மணி சேர்ந்ததடங் கையுங்
கறுவுசம ரங்குசஞ்சேர் கையும்-தெறுபோர்

53 அதிர்கே டகஞ்சுழற்றும் அங்கைத் தலமுங்
கதிர்வாள் விதிர்க்குங் கரமும்-முதிராத

54 கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூ ணகன்மார்பும்-பைம்பொற்

55 புரிநூலுங் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணுங் கச்சை அழகுங்-திரு அரையும்

56 நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமுஞ்-சோதி

57 இளம்பரிதி நூறு யிரங்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவும்-உளந்தனிற்கண்

58 டாதரிப்போர்க் காருயிரா யன்பரகத் தாமரையின்
மீதிருக்குந் தெய்வ விளக்கொளியே-ஓதியவைந்

59 தோங்காரத் துள்ளொளிக்கு முள்ளொளியா யைந்
[தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே-தாங்கரிய

60 மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்

61 ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா-வைத்த

62 கலையே அவயவமாக் காட்டும்அத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்-பலகோடி

63 அண்ட முருவாகி அங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த்-தொண்டுபடும்

64 ஆவிப் புலனுக் கறிவளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே-மேவ

65 வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வே மெய்ஞ்ஞானம்
தரும்அட்ட யோகத் தவமே-பருவத்

66 தகலாத பேரன் படைந்தோ ரகத்துட்
புகலாகு மின்பப் பொருப்புஞ்-சுகலளிதப்

67 பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானந்
தேரின்ப நல்குந் திருநாடும்-பாரின்பம்

68 எல்லாங் கடந்த இருநிலத்துட் போக்குவர
வல்லா துயர்ந்த அணிநகரும்-தொல்லுலகில்

69 ஈறு முதலுமகன் றெங்குநிறைந் தைந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமும்-ஏறுமதந்

70 தோய்ந்து களித்தோர் துதிக்கையினுற் பஞ்சமலங்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்-வாய்ந்தசிவ

71 பூரணத்துட் பூரணமாம் போதம்-புதுமலரா
நாரகத்துட் கட்டும் நறுந்தொடையுங்-காரணத்துள்

72 ஐந்தொழிலும் ஓவா தளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசுஞ்-சந்ததமும்

73 நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போற்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையுந்-தேக்கமழ்ந்து

74 வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே-தேசுதிகழ்

75 பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதைஇடப்
பாங்குறையும் முக்கட் பரஞ்சோதி- ஆங்கொருநாள்

76 வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ டதோமுகமுந்-தந்து

77 திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப-விரிபுவனம்

78 எங்கும் பரக்க இமையோர்கண் டஞ்சுதலும்
பொங்கு தழற்பிழம்பைப் பொற்கரத்தால்-அங்கண்

79 எடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்
[மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய்-அடுத்ததொரு

80 பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்-போதொருசற்

81 றன்னவளுங் கொண்டமைதற் காற்றாள் சரவணத்திற்
சென்னியிற்கொண் டுய்ப்பத் திருவுருவாய்-முன்னர்

82 அறுமீன் முலையுண் டழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்-குறுமுறுவற்

83 கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண் டவ்வுருவம் ஆறினையுந்-தன்னிரண்டு

84 கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்ஆறு மொன்றாக மேவுவித்துச்-செய்ய

85 முகத்தி லணைத்துச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத் தளித்துச்-சகத்தளந்த

86 வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்து
உள்ள முவப்ப உயர்ந்தோனே-கிள்ளைமொழி

87 மங்கை சிலம்பின் மணியொன் பதிற்றுன் றுங்
துங்க மடவார் துயர்தீர்ந்து-தங்கள்

88 விருப்பா லளித்தநவ வீரருக்குள் முன்னேன்
மருப்பாயுந் தார்வீர வாகு-நெருப்பிலுதித்து

89 அங்கட் புவன மனைத்தும் அழித்துலவுஞ்
செங்கட் கிடாயதனைச் சென்றுகொணர்ந்-தெங்கோன்

90 விடுக்குதியென் றுய்ப்பஅதன் மீதிவர்ந்தெண் திக்கும்
நடத்தி விளையாடு நாதா-படைப்போன்

91 அகந்தை உரைப்பமறை யாதி எழுத்தென்
றுகந்த பிரணவத்தி னுண்மை-புகன்றிலையாற்

92 சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ங னென்றுமுனங்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே-மட்டவிழும்

93 பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே-கொல்நெடுவேல்

94 தாரகனும் மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே-சீரலைவாய்த்

95 தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து-வெள்ளைக்

96 கயேந்திரனுக் கஞ்ச லளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்-சயேந்திரனுஞ்

97 சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே-காரவுணன்

98 வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்கள் நாற்படையுஞ் சங்கரித்துப்-பானுப்

99 பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனை வென்று வாகை முடித்தோய்-சகமுடுத்த

100 வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்-போரவுணன்

101 அங்கமிரு கூறு யடல்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட னார்த்தெழுந்து தோன்றுதலும்-அங்கவற்றுள்

102 சீறும்அர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே-மாறிவரு

103 சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே-மூவர்

104 குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே-மறைமுடிவாஞ்

105 சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவுந்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே-பொய்விரவு

106 காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்-பூமருவு

107 கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத் தினிதிருந்து-மேன்மைபெறத்

108 தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே-உள்ளமுவந்

109 தாறு திருப்பதிகண் டாறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே-நாறுமலர்க்

110 கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே-சந்ததமும்

111 பல்கோடி சென்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்-பல்கோடி

112 பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பிசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையுந்-தீதகலா

113 வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையும்
எவ்விடம்வந் தெம்மை யெதிர்ந்தாலும்-அவ்விடத்தில்

114 பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்ச மகற்றும் அயில்வேலுங்—கச்சைத்

115 திருவரையுஞ் சீறடியுஞ் செங்கையும் ஈரா
றருள்விழியு மாமுகங்க ளாறும்-விரிகிரணஞ்

116 சிந்தப் புனைந்த திருமுடிக ளோராறும்
எந்தத் திசையு மெதிர்தோன்ற-வந்திடுக்கண்

117 எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமுந் தந்துபுகுந்
துல்லாச மாக உளத்திருந்து-பல்விதமாம்

118 ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப்பியத் தொகையும்-ஓசை

119 எழுத்துமுத லாம்ஐந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்-தொழுக்கமுடன்

120 இம்மைப் பிறப்பில் இருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்-தம்மைவிடுத்

121 தாயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச்-சேய

122 கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின் றருள்.

### (எளிய தெளிவுரை)

(1 - 5) செம் கமலப் பூ மேவு - செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற, புத்தேளும் - பிரமனும், தேற அரிய - தெளிதற்கரிய, பா மேவு - பாடல் நலம் அமைந்த, தெய்வப் பழமறையும்-தெய்வத் தன்மை வாய்ந்த பழமையாகிய வேதங்களும், தேம் மேவும்-இனிமை நிறைந்த, நாதமும் - நாத தத்துவமும், நாத அந்த முடிவும் - நாத தத்துவத்தின் முடிவாகிய பொருளும், நவைதீர்ந்த - குற்றமற்ற, போதமும் - அறிவும், காணுத - அறியாத, போதம் ஆய் - பேரறிவாயும், ஆதி நடு அந்தம் கடந்த - முதலும் இடையும் கடையும் இல்லாத, நித்திய போத ஆனந்தம் ஆய் - சத்து சித்து ஆனந்த வடிவாயும், பந்தம் தணந்த - இயல்பாகவே பாசத்தினின்றும் நீங்கிய, பரம் சுடர் ஆய் - சிறந்த ஒளிவடிவாயும், வந்த ஒரு - வழங்கப் படுவதொரு, குறியும் - பெயரும், குணமும் - பண்பும், கோலமும் - வடிவும், அற்று - இன்றி, எங்கும் செறியும் - எவ்விடத்தும் நிறைந்திருக்கின்ற, .பரமசிவம் ஆய் - மேலான மங்கலப் பொருளாயும் ;

(5 - 6) அறிவுக்கு அநாதியாய் - அறிவிற்கு முற்பட்டதாயும், ஐந்தொழிற்கும் அப்புறமாய்- ஆக்கல் அளித்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களுக்கும் அப்பாற்பட்டதாயும், மனுதிகளுக்கு - மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் உட்கருவிகளுக்கு, எட்டா வடிவாய் - எட்டாத வடிவமாயும், தனது அருளின் - தனது திருவருட் சக்தியினல், பஞ்சவித ரூப - பிரமன் திருமால் உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னும் ஐவகை வடிவினையுடைய, பரசுகமாய் - மேலான இன்பப் பொருளாயும், எவ்வுயிர்க்கும் - எல்லா உயிர்களுக்கும், தஞ்சம் என நிற்கும் - பற்றுக் கோடாக நிற்கின்ற, தனிப் பொருளாய் - ஒப்பற்ற பரம் பொருளாயும் ;

(7 - 10) எஞ்சாத - குறையாத, பூரணமாய்- முழுநலமாயும், நித்தமாய் - என்றும் உள்ளதாயும், போக்கும் வரவும் புணர்வும் - இறப்பும் பிறப்பும் கூடுதலும், காரணமும் இல்லா - முற்பட்டதும் இல்லாத, கதி ஆகி - ஆதாரப் பொருளாகியும், தாரணியில் - இவ்வுலகத்தில், இந்திரசாலம் புரிவோன் - இந்திரசால வித்தையைச் செய்பவன் ;

யாவரையும் - எல்லோரையும், மயக்கும் தந்திரத்தில் - மயக்குகின்ற அருஞ்செயலில், தான் சாராது - தான் பொருந்தாமல், சார்வது போல் - பொருந்தி நிற்பது போல, முந்தும் - தனக்கு முற்பட்ட, கரு இன்றி நின்ற கருவாய்- முதற்பொருள் இன்றி நின்ற முதற் பொருளாயும், உருவு இன்றி நின்ற அருளே உருவாய் - அழியும் உருவமில்லாமல் விளங்குகின்ற அருளே திருமேனியாகவும், திரிகரணம் ஆக வரும் - மனம் வாக்குக் காயம் என்னும் முக்கரணங்கள் காரணமாக வருகின்ற, இச்சை அறிவு இயற்றல் ஆல் - இச்சா ஞானக்கிரியா சக்திகளால், இலய போக அதிகாரப் பொருள் ஆகி - ஒன்றுதல் நுகர்தல் இயக்குதல் என்னும் மூன்று நிலைகளையுடைய பொருளாயும்;

(11 - 16) ஏகத்து - ஒரு வடிவிலேயே, உருவும் - மகேசன் உருத்திரன் திருமால் பிரமன் என்னும் நான்கு உருவத் திருமேனியாயும், அருவும் - சிவம் சத்தி நாதம் விந்து என்னும் நான்கு அருவத் திருமேனியாயும், உரு அருவும் ஆகி - சதாசிவம் என்னும் ஓர் அருவுருவத் திருமேனியாயும், பருவ வடிவம் பலவாய்- அன்பர்களின் பக்குவ நிலைக்கு ஏற்பக் கொள்ளப் பெறும் திருவுருவங்கள் பலவாயும்;

இருள் மலத்துள் - அறியாமையை உண்டாக்கும் ஆணவமலத்துள் அழுந்தி, மோகம் உறும் - மயக்கம் அடையும், பல் உயிர்க்கும்- எண்ணிறந்த உயிர்கட்கும், முத்தி அளித்தற்கு - முத்திப் பேற்றைக் கொடுத்தருளும் பொருட்டு, மல பாகம் உற - அவ்வாணவ மலம் பக்குவமடைய, கடைக்கண் பாலித்து- திருவருள் நோக்கம் புரிந்து, தேகம் உற - அவ்வுயிர்கள் உடலைப் பெறுமாறு, தந்த - உடல் கருவி நுகர்ச்சிகளை அளிக்கின்ற, அரு உருவம் சார்ந்த-அருவமும் உருவமுங் கூடிய, விந்து மோகினி மான் - சுத்தமாயை அசுத்த மாயை பிரகிருதிமாயை என்னும் மூன்றினேடு, பெந்தம்உற-கட்டுப்பட, பிணிப்பித்து- கட்டுவித்து, மந்த்ரம் முதல் ஆறு அத்துவாவும் - மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்ற ஆறு வழிகளையும், அண்டத்து ஆர்ந்த அத்துவாக்களும் - அண்ட வெளியிற் பொருந்திய வழிகளையும், முன் - முன்னே, கூறத்தகும் - கூறப்பெற்ற, சிமிழ்ப்பில் கூட்டுவித்து - கட்டில் சேர்ப்பித்து, மாறி வரும் - மாறிமாறி வருகின்ற, ஈர் இரண்டு தோற்றத்து - முட்டை வியர்வை வித்து கருப்பை என்னும் நால்வகைத் தோற்றத் தினையுடைய, எழு பிறப்புள் - தேவர் மக்கள் விலங்கு பறப்பன ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் எழுவகைப் பிறப்பினுள், எண்பான் ஆரவந்த நான்கு நூறு ஆயிரத்து யோனியுள் - எண்பத்துநான்கு லட்சம் பிறவி வேறுபாடுடைய உயிர்களில், தீர்வு அரிய - தீர்த்தற்கரிய, கன்மத்துக்கு ஈடாய் - இருவினைக்குத் தக்கபடி, கறங்கும் சகடமும்போல்-

காற்ருடியும் வண்டிச்சக்கரமும் போல, சென்மித்து - பிறந்து, உழல - உழலும்படி, திரோதித்து - மறைப்பை விளைவித்து;

(17 - 22) வெம் நிரய - கொடிய நரகத் துன்பங்களையும், சொர்க்காதி - சுவர்க்கம் முதலிய உலகங்களில் நுகரப்படும், போகம் எலாம்-எல்லா வகையான இன்பதுன்பங்களையும், துய்ப்பித்து - ஊட்டுவித்து. பக்குவத்தால்-மலபரிபாகத்தால், நல் காரணம் - இறையருள் பெறுவதற்குரிய நல்ல புண்ணியம், சிறிது நண்ணுதலும் - சிறிது பொருந்திய அளவில், தர்க்கம் இடும் - வாதம் புரிகின்ற, தொல் நூல் - பழமையான நூல்களை யுடைய, பர சமயம் தோறும் - பிறசமயங்களி லெல்லாம், அது அதுவே - அந்தந்தச் சமய நூலே, நல் நூல் எனத் தெரிந்து - உண்மை நூல் என்று அறிந்து, நாட்டுவித்து - அவற்றில் அழுந்துமாறு செய்து, முன்னூல் - பழைய வேதங்கள் கூறிய, விரதம் முதலாய மேவுவித்து - விரதங்கள் ஆச்சிரமங்கள் முதலியவற்றை மேற்கொள்ளச் செய்து, பல மெய்த்தவத்தின் - பற்பல சிறந்த தவங்களின் பயனுக, உண்மை- உண்மையை உணர்த்துகின்ற, சரியை கிரியா யோகம் சார்வித்து - சரியை கிரியை யோகம் ஆகிய நெறிகளை அடைவித்து, அருள் பெருகு - திருவருள் பெருகுகின்ற, சாலோக சாமீப சாரூபமும் - சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் மூன்று பத முத்திகளையும், புசிப்பித்து - நுகர்விக்கச் செய்து, ஆலோகம் தன்னை அகற்றுவித்து - தெளிந்த அறிவை விரிவடையச் செய்து, நால் வகையாம் - மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என்னும் நான்கு வகைப்பட்ட, சத்திநிபாதம் - சத்திநிபாதநிலைகளை, தருதற்கு - தருதற்கேதுவாகிய, இருவினையும் ஒத்து வரும் காலம் - இருவினையொப்புநிலை உண்டாகும்போது, உள ஆகி - தோன்றி, பெத்தம் - கட்டு நிலைக்குக் காரணமான, மல பரிபாகம் - ஆணவ மலம் அழிதற்குரிய பக்குவ நிலை, வரும் அளவில் - வரும்பொழுது, பல்நாள் - பலகாலமாய், அலமருதல் கண்ணுற்று - கறங்கும் சகடமும் போலச் சுழன்று கொண்டிருத்தலை நோக்கி, அருளி - கருணை கூர்ந்து;

(25 - 32) திருநோக்கால் - அருட்பார்வையினல், ஊழ் வினையைப் போக்கி - சஞ்சித வினையை ஒழித்து, உடல் அறுபத்தெட்டும் - உடற்கருவிகள் அறுபத்தெட்டும், நிலம் ஏழும் - மூலாதாரம் முதலிய ஏழு இடங்களும், அத்துவாக்கள் இரு மூன்றும் - மந்திராத்துவா முதலிய ஆறு அத்துவாக்களும், பாழ் ஆக - அற்ருெழிய, ஆணவம் ஆன படலம் கிழித்து - ஆணவ மலமாகிய மறைப்பை நீக்கி, அறிவில் காண அரிய - உயிரின் அறிவால் காண முடியாத, மெய்ஞ்ஞானக் கண் காட்டி - மெய்யுணர்வு நோக்கத்தைத் தந்தருளி, பூணும் - பொருந்திய, அடிஞானத்தால் - திருவடி ஞானத்தால், பொருளும் - கடவுட் பொருளையும், ஆன்மாவும் - உயிர்ப் பொருளையும், காட்டி - அறியும்படி செய்து, கடி ஆர் - காவல் அமைந்த, புவனம் முற்றும் - உலகப் பொருள்கள் அனைத்தையும், காட்டி - அறியும்படி செய்து, முடியாது - என்றும் அழியாமல், தேக்கு - எங்கும் நிறைந்த, பரமானந்தத் தெள் அமுதம் ஆகி - மேலான இன்பமாகிய தெளிந்த அமுதத்தை ஒத்து, எங்கும் - எல்லா இடங்களிலும், நீக்கம் அற - நீங்குதல் இல்லாமல், நின்ற நிலை - நிற்கின்ற பெரு நிலையையும், காட்டி - அறிவித்து, போக்கும் வரவும் - போதலும் வருதலும், நினைப்பும் மறப்பும் - நினைத்தலும் மறத்தலும், பகலும் இரவும் கடந்து - பகலும் இரவும் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு, உலவா - அழியாத, இன்பம் மருவுவித்து-பேரின்பத்தை அடைவித்து, கன்மலத்தார்க்கு - பிரளயாகலருக்கு, மலர்க் கண் மூன்றும் - தாமரை மலர்போன்ற மூன்றுகண்ணும், தாழ் சடையும் - தொங்குகின்ற சடையும், வல் மழுவும்-வலிய மழுப்படையும், மானும் உடன்- மான் கன்றும் ஆகிய இவற்ருேடு, மால் விடை மேல்-பெரியஎருதின் மீது,மின்இடத்துப் பூத்த- மின்னற்கொடி இடப்பக்கத்திலே தோன்றிய, பவளப் பொருப்பு ஒன்று - பவளமலை ஒன்று, வெள்ளி வெற்பில் - வெள்ளிமலையின் மீது, வாய்த்த அனைய - தோன்றினுற் போல, தெய்வ வடிவு ஆகி - தெய்வத் திருமேனி கொண்டு, மூத்த - தொன்று தொட்டுத் தொடர்கின்ற, கரும மலக் கட்டு அறுத்து- ஆணவம் கன்மம் என்ற கட்டுக்களைப்போக்கி, கண் அருள் செய்து - ஞானக்கண்ணை அளித்தருளி, ஒரு மலத்தார்க்கு - விஞ்ஞானகலருக்கு உள்நின்று - அறிவுக்கறிவாய் உள் நின்ற நிலையிலேயே, இன்பம் உதவி - பேரின்பத்தைக் கொடுத்தருளி;

(33 - 36) பெருகி எழும் - மிகுந்து தோன்றுகின்ற, மூன்று அவத்தையும் கழற்றி - கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்றுவத்தைகளையும் நீக்கி, முத்தருடன் இருத்தி - சீவன் முத்தர்களுடனே சேர்த்து, ஆன்ற பரமுத்தி - மேலான பரமுத்தியை, அடைவித்து-அடையுமாறு செய்து, தோன்றவரும் - வெளிப்படையாய்த் தெரியும்படி வருகின்ற, யான் எனது என்று அற்ற இடமே - யான் எனது எனக்

கருதுதல் நீங்கிய இடமே, திருவடியா - திருவடியாகவும், பரஆனந்த மோனம் - மேலான சிவானந்தத்தைத் தருகின்ற மௌனமே, முடி ஆக - திருமுடியாகவும், ஞானம் - ஞானமே, திரு உருவா - திருமேனியாகவும், இச்சை செயல் அறிவு - இச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்திகளே, கண்ணு - மூன்று கண்களாகவும், அருள் அதுவே - இரக்கமே, செம் கை அலரா - சிவந்த கைம்மலராகவும், இரு நிலமே - பெரிய பூவுலகமே, சந்நிதியா - திருமுன்னிலையாகவும், நிற்கும் - கொண்டு விளங்குகின்ற, தனிச் சுடரே-ஒப்பற்ற சோதி வடிவாகத் திகழ்பவனே! எ உயிர்க்கும்-எல்லா உயிரிடத்திலும், பின்னம் அற - வேறுபாடின்றி, நின்ற - நிற்கின்ற, பெருமானே - பெருமையுடையவனே!

(37 - 41) மின் உருவம் தோய்ந்த-மின்னலின் ஒளியைக் கொண்ட, நவரத்நச் சுடர் மணியால் - ஒன்பது வகை ஒளியுள்ள மணிகளோடு, பைம்பொன் செய்த - பசும் பொன்னுற் செய்யப்பட்ட, கிரணம் வாய்ந்த - கதிர்களை வீசுகின்ற, மணிமுடியும் - அழகிய ஆறு முடிகளையும், தேய்ந்த - கலைகள் குறைந்த, இரு மூன்று பிறை துண்டம் - ஆறு பிறைத் துண்டங்களை, நிரை தோன்ற - வரிசையாக விளங்கும்படி பதித்தாற் போன்று, புண்டரம் பூத்த நுதல்-திரிபுண்டரம் பொருந்திய நெற்றிகளில் அணிந்த, பொட்டு அழகும் - பொட்டினது அழகினையும், பருவம் விண்ட - உரிய காலத்தில் மலர்ந்த, புண்டரிக மலர் - செந்தாமரை மலர்கள், பன்னிரண்டு பூத்தாங்கு - பன்னிரண்டு பூத்தாற் போல, அருள் பொழியும் - திருவருளைப் பொழிகின்ற, கண் மலர் ஈர் ஆறும் - கண் :மலர்கள் பன்னிரன்டினையும், பரிதி பலவும் எழுந்து - சூரியர்கள் பன்னிருவரும் தோன்றி, சுடர் பாலித்தாற் போல - ஒளியை வீசினுற் போல, குலவும் - விளங்குகின்ற, மகரக் குழையும் - பன்னிரண்டு மகர குண்டலங்களையும், நிலவு உமிழும் - நிலவைப் போல ஒளி வீசுகின்ற, புன்முறுவல் பூத்து - புன்சிரிப்புத் தோன்றப் பெற்று, அலர்ந்த - மலர்ந்த, பூங்குமுதச் செவ்வாயும் - அழகிய செவ்வல்லி மலர் போன்ற சிவந்த வாயினையும், சென்ம விடாய் - பிறவித் துன்பத்தை, தீர்க்கும் - நீக்கி அருளுகின்ற, திருமொழியும் - திருவாக்கினையும்;

(42 - 47) வில் மலிதோள் - விற்படை தாங்கிய தோள்களையுடைய, வெவ் அசுரர் - கொடிய அசுரர்கள், போற்று இசைக்கும் - துதித்துப் புகழும், வெம் சூரனைத் தடிந்து - கொடிய சூரபன்மனைக் கொன்று, தெவ்வர் உயிர் சிந்தும் - பகைவர்களுடைய உயிரைப் போக்கின, திருமுகமும் - திருமுகமொன்றும், எவ்வுயிர்க்கும் - எல்லாவுயிர்களுக்கும், ஊழ் வினையை மாற்றி - முன்செய்த வினையைப் போக்கி, உலவாதபேர் இன்ப வாழ்வு தரும்-அழியாத பேரின்பப் பெருவாழ்வைத் தருகின்ற, செய்ய மலர் முகமும் - சிவந்த தாமரை மலர் போன்ற திருமுகமொன்றும், சூழ்வோர்-தன்னை வணங்குவோர், வடிக்கும் - கற்றுத் தெளிகின்ற, பழ மறைகள் - பழமையான வேதங்கள், ஆகமங்கள் - சிவாகமங்கள், யாவும் - எல்லாவற்றையும், முடிக்கும் - முற்றுப் பெறச் செய்யும், கமல முகமும் - தாமரை மலர் போன்ற திருமுகமொன்றும், விடுத்து அகலா- (உயிர்களை) விட்டு நீங்காத, பாச இருள் துரந்து - ஆணவ மலமாகிய இருளைப்போக்கி, பல்கதிரின் - பல சூரியர்கள் திரண்டாற் போல, சோதிவிடும் - ஒளி வீசுகின்ற, வாச மலர் வதன மண்டலமும் - மணம் பொருந்திய தாமரை மலர் போன்ற வட்டமான திருமுகமொன்றும், நேசமுடன் - அன்புடன், போகம் உறும் வள்ளிக்கும் - இன்பம் நுகர்கின்ற வள்ளி நாயகியார்க்கும், புத்தேளிர் பூங்கொடிக்கும் - தெய்வயானை யம்மையார்க்கும், மோகம் அளிக்கும் - ஆசையூட்டுகின்ற, முகமதியும் - சந்திரன் போன்ற குளிர்ந்த திருமுகமொன்றும்; தாகமுடன் அடியில் வந்து சேர்ந்தோர் - வீடு பேற்று வேட்கையுடன் திருவடிகளில் வந்து அடைந்தவர்கள், மகிழ - மகிழும்படியாக, வரம் பலவும் தந்து அருளும் - பல வரங்களையும் கொடுக்கின்ற, தெய்வ முகத் தாமரையும் - தெய்வத் தன்மை பொருந்திய தாமரை மலர்போன்ற திருமுகமொன்றும்;

(48 - 53) கொந்து அவிழ்ந்த - கொத்தாக மலர்ந்த, வேரிக் கடம்பும் - தேனையுடைய கடப்ப மலரும், விரைக் குரவும் - மணத்தையுடைய குரா மலரும், பூத்து அலர்ந்த - மலர்ந்து விளங்குகின்ற, பாரப் புயசயிலம் பன்னிரண்டும் - பெரிய மலைபோன்ற பன்னிரண்டு தோள்களையும், ஆர் அமுதம் - அருமையாகிய அமுதத்தை, தேவர்க்கு உதவும் திருக்கரமும் - தேவர்களுக்கு அளித்தருளுகின்ற திருக்கை ஒன்றும்; சூர் மகளிர் - தேவப்பெண்கள், மேவ - விரும்ப, குழைந்து அணைந்த மென்கரமும் - இளகித் தழுவிய மெல்லிய திருக்கை ஒன்றும்; ஓவாது மாரி பொழிந்த - இடைவிடாமல் மழை பெய்வித்தருளுகின்ற, மலர்க்கரமும் - தாமரை மலர் போன்ற திருக்கரம் ஒன்றும்; பூம் தொடையல் சேர அணிந்த திருக்கரமும் - பூ

மாலைகளை ஒருங்கே அணிந்த திருக்கை ஒன்றும்; மார்பு அகத்தில் வைத்த கரதலமும் - தன் திருமார்பின்மீது வைத்துக் கொண்டிருக்கும் திருக்கை ஒன்றும்; வாம மருங்கில் கரமும் - இடையின் இடப்பக்கத்தில் வைத்தருளிய திருக்கை ஒன்றும்; குறங்கில் உய்த்த ஒரு கரமும் - தொடையின் மேல் வைத்தருளிய ஒப்பற்ற திருக்கை ஒன்றும்; மொய்த்த சிறு தொடிசேர் கையும் - நெருங்கிய வீரவளைகள் அணிந்த திருக்கை ஒன்றும், மணி சேர்ந்த தடம் கையும் - மணி பொருந்திய விசாலமான திருக்கை ஒன்றும், கறுவு சமர் அங்குசம் சேர்கையும் - சினத்துடன் போர் செய்தற்கு அங்குசம் என்னும் படையினைத் தாங்கிய திருக்கை ஒன்றும், தெறுபோர் அதிர் கேடகம் சுழற்றும் அம் கைத்தலமும் - பகைவரை அழிக்கின்ற போரில் அதிர்ச்சியுடன் கேடகம் என்னும் படையினைச் சுழற்றுகின்ற அழகிய திருக்கை ஒன்றும், கதிர் வாள் விதிர்க்கும் கரமும் - ஒளி வீசுகின்ற வாட்படையினை அசைக்கும் திருக்கை ஒன்றும்,

(54 - 58) முதிராத - இளமைத் தன்மையுள்ள, கும்பம் - குடம் போன்ற, முலை - தனங்களும், செவ்வாய் - சிவந்த வாயும், கொடி இடையார் - கொடிபோல நுடங்கும் இடையையும் கொண்ட தேவ மகளிர், வேட்டு - விரும்பி, அணைந்த - தழுவிய, அம்பொன் - அழகிய பொன்னாலும், மணி-ஒளிமிக்க மணிகளாலும் செய்யப்பட்ட, பூண்-ஆபரணங்களை அணிந்த, அகல் மார்பும் - அகன்ற மார்பினையும், பைம் பொன் புரி நூலும் - பசிய பொன்னாற்செய்த பூணூலையும், கண்டிகையும் - அக்குமணி மாலையினையும், பூம் பட்டு உடையும் - பூத்தொழில் அமைந்த பட்டாடையினையும், அரை ஞாணும் - அரைநாண்கயிறும், கச்சை அழகும் - அரைக் கச்சையின் அழகும் பொருந்திய, திரு அரையும் - அழகிய இடுப்பினையும், பாதத்து அணிந்த திருவடிகளிலே அணிந்துள்ள, நாதக்கழலும் - ஒலியைச் செய்யும் வீரக் கழலினையும், நகு மணி பொன் கிண்கிணியும் - விளங்குகின்ற மணிகள் பதித்த பொன்னாலாகிய சதங்கையினையும், பரிபுரமும்-சிலம்பினையும், சோதி-ஒளியையுடைய, நூறு ஆயிரம் கோடி இளம் பரிதிபோல - இலட்சம் கோடி உதய சூரியர்கள் தோன்றினாற்போல, வளம் தரும் தெய்வீக வடிவும் - ஒளி மிகுந்த தெய்வத்தன்மை பொருந்திய திருவடியினையும், உளந்தனில் கண்டு-உள்ளத்திற் கண்டு, ஆதரிப்போர்க்கு - அன்பு செய்வோர்க்கு, ஆர் உயிர் ஆய் - அரிய உயிராக விளங்கி, அன்பர் - அன்பர்களின், அகத்தாமரையின் மீது இருக்கும் - மனமாகிய மலரின்கண் எழுந்தருளி யிருக்கும், தெய்வ விளக்கு ஒளியே - தெய்வத் தன்மை பொருந்திய விளக்கொளி போன்றவனே!

(59 - 65) ஓதிய - அறிஞரால் சொல்லப்பட்ட, ஐந்து ஓங்காரத்து - ஐந்து உறுப்புக்களையுடைய பிரணவத்தின், உள் ஒளிக்கும் - உள்ளுணர்வுக்கும், உள் ஒளியாய் - உள்ளேயுள்ள ஒளியாய், ஐந்தொழிற்கும் நீங்காத-படைப்பு முதலிய ஐந்து தொழில்களையும் செய்வதற்குத் தவிராத, பேர் உருவாய்-பிரமன் திருமால் உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னும் ஐந்து பெரிய வடிவாய், நின்றோனே-நின்றவனே!

தாங்க அரிய - பிறரால் தாங்குதற்கு அருமையான, மந்திரமே சோரியா - மந்திராத்துவாவே இரத்தமாகவும், வான் பதமே மாமுடியா - பெருமை பொருந்திய பதஅத்துவாவே சிறந்த முடியாகவும், தொந்தம் உறும் - கட்டுற்ற, வன்னமே தொக்கு ஆக - வன்னத்துவாவே தோலாகவும், பந்தனையால் ஒத்த-பாசத்தோடு கூடிய, புவனத்து உருவே உரோமமா-புவனத்துவாவே உரோமமாகவும், தத்துவங்களே சத்த தாதுவா — தத்துவாத்துவாவே ஏழு தாதுக்களாவும், வைத்த கலையே அவயவமா-முறையே வைக்கப்பெற்ற கலாத்துவாவே உறுப்புக்களாகவும், காட்டும்-இங்கே காட்டிய, அத்துவாவின் நிலையே வடிவமா-அத்துவாவினது நிலையே வடிவமாகவும், நின்றோய் - கொண்டு நின்றவனே!

பலகோடி அண்டம் உருவு ஆகி - பலகோடி அண்டங்களை திருமேனியாகவும், கண்ட - அறிவுடையோரால் காணப்பட்ட, சத்தி மூன்று உட்கரணம் ஆய் - இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்று சக்திகளை அந்தக்கரணங்களாவும் கொண்டு, தொண்டு படும் — அடிமைத் தன்மை பொருந்திய, ஆவிப் புலனுக்கு அறிவு அளிப்ப - உயிர்களினது அறிவுக்கு அறிவாய் நின்று உணர்த்தும் பொருட்டு, ஐந்தொழிலும் ஏவி-மிகநுண்ணிய ஐந்து தொழில்களையும் நிகழும்படி இயக்கி வைத்து, தனி நடத்தும் - ஒப்பின்றிச் செய்தருளுகின்ற, எம் கோவே - எம்முடைய தலைவனே!

மேவ வரும் - பொருந்த வருகின்ற, அட்ட மூர்த்தம் ஆம் வாழ்வே - எட்டு வடிவோடு வாழ்கின்ற பெருமானே! மெய்ஞ் ஞானம் தரும் - உண்மையான ஞானத்தைத் தருகின்ற, அட்ட யோகத் தவமே - இயமம் முத

லிய எட்டு அங்கங்களையுடைய யோகமாகிய தவத்தின் பயனே!

(66 - 74) பருவத்து அகலாத - பக்குவத்தில் நீங்காத, பேர் அன்பு அடைந்தோர் அகத்துள் - பேரன்பை யுடையவர்களின் உள்ளத்தில், புகல் ஆகும் - புகுதற்குரிய, இன்பப் பொருப்பும் - ஆனந்த மலையும், சுக லளிதம் - இன்பவடிவமான அழகிய, பேர் இன்ப வெள்ளப் பெருக்கு ஆறும் - பேரானந்த வெள்ள மாகிய நதியும், மீதானம் - மேலான இடத்தில், தேர் - தெளிந்த, இன்பம் நல்கும் திருநாடும் - வீட்டின்பத்தைத் தருகின்ற அழகிய நாடும்,

பார் இன்பம் எல்லாம் கடந்த - உலக இன்பங்களை யெல்லாம் கடந்து நின்ற, இரு நிலத்துள் - மேலான வீட்டுலகின் கண், போக்கு வரவு அல்லாது உயர்ந்த அணி நகரும் - போக்கும் வரவும் இன்றி உயர்ந்த அழகிய நகரமும்,

தொல் உலகில் - பழைமையாகிய உலகத்தில், முதலும் ஈறும் அகன்று - ஆதியும் அந்தமுமின்றி, எங்கும் நிறைந்து - எல்லாவிடத்திலும் பரவி விளங்கி, ஐந்து எழுத்தைக் கூறி நடாத்தும் குரகதமும்-ஐந்தெழுத்தைக் கூறிச் செலுத்துகின்ற குதிரையும்,

ஏறு மதம் தோய்ந்து - பண்டே அமைந்துள்ள புறச் சமயங்களில் அழுந்தி, களித்தோர் - மகிழ்ந்தவர்கள், துதிக்கையினுல் - பின்னர்த் தன்னை யுணர்ந்து புகழ்ந்து போற்றுவதனுல், பஞ்சமலம் காய்ந்த சிவஞானக் கடாக் களிறும் - ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி என்னும் ஐந்து மலங்களையும் நீக்கிய சிவஞானமாகிய மதயானையும்,

வாய்ந்த சிவ பூரணத்துள் பூரணம் ஆம் - பொருந்திய சிவ நிறைவில் அழுந்திய, போதம் - சிவஞானமே, புதுமலரா - புதிய மலராகக் கொண்டு, நார் அகத்துள் கட்டும் நறும் தொடையும் - அன்பு நிறைந்த உள்ளத்துள் கட்டப்படுகின்ற நல்ல மணங்மகழும் கடப்ப மலர் மாலையும்,

காரணத்துள் ஐந்தொழிலும் - பரிய ஐந்தொழிலுக்குக் காரணமாகிய நுண்ணிய ஐந்தொழிலையும், ஓவாது அளித்து உயர்ந்த வான் கொடியும் - இடைவிடாது செய்து உயர்த்திய மேலாகிய கொடியும்,

வந்த - சுத்த மாயையினின்று தோன்றிய, நவநாதம் - புதுமையைத் தருகின்ற நாத தத்துவமாகிய, மணி முரசும் - அழகிய முரசமும்,

சந்ததமும் - எப்பொழுதும், நீக்கமின்றி - விட்டு நீங்குதலில்லாமல், ஆடி நிழல் - கண்ணுடியின் நிழலை, அசைப்பான் போல் - தான் ஆடி அசைப்பவனைப் போன்று, புவனம் ஆக்கி அசைத்தருளும்-புவனங்களைத்தோற்றுவித்து இயங்கச் செய்தருள்கின்ற, ஆணையும்-ஆட்சியும், (ஆகிய இப்பத்தினையும்)

தே கமழ்ந்து வீசும் - தெய்வத்தன்மை பொருந்தி ஞான ஒளி வீசுகின்ற, பனுவல் - நூல்களைச் செய்யும், விபுதர் - அறிஞர், தனித்தனியே பேசும் - தனித்தனியே புகழ்ந்து பேசுதற்குரிய, தசாங்கம் எனப் பெற்றேனே - பத்து அங்கங்களாகக் கொண்டவனே!

(75 - 86) தேசுதிகழ் - ஒளி விளங்குகின்ற, பூங்கயிலை வெற்பில் - அழகிய கயிலை மலையில், புனைமலர் பூங்கோதை - தொடுக்கப்பட்ட அழகிய பூ மாலையினை அணிந்த உமாதேவியார், இடப்பாங்கு உறையும் - தம்முடைய இடப் பாகத்திலே வீற்றிருக்கப் பெற்ற, முக்கண் பரஞ்சோதி - மூன்று கண்களை உடைய பேரொளி வடிவினராகிய சிவபெருமான்,

ஆங்கு ஒரு நாள் - அவ்விடத்து ஒரு நாள், வெம் தகுவர்க்கு ஆற்ருத - கொடிய அசுரர்களுக்கு எதிர் நிற்கலாற்ருத, விண்ணேர் முறைக்கு இரங்கி - தேவர்களின் முறையீட்டிற்கு இரக்க முற்று, ஐந்து முகத்தோடு அதோ முகமும் தந்து-தமது ஈசானம் முதலிய முகங்களோடு கீழ் நோக்கிய முகம் ஒன்றையுங் கொண்டு, திருமுகங்கள் ஆறு ஆகி - திருமுகங்கள் ஆருகப் பெற்று, செம் தழல் கண் ஆறும் - சிவந்த தழல்மயமாகிய ஆறு நெற்றிக் கண்களின் நின்றும், ஒருமுகமாய்த் தீப்பொறி ஆறு உய்ப்ப - ஒருங்கே ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்த, விரி புவனம் எங்கும் பரக்க, அத் தீப்பொறிகள் விரிந்த புவனங்களெங்கும் பரவ, இமையோர் கண்டு அஞ்சுதலும் - அவற்றைத் தேவர்கள் கண்டு ப்யப் படவும்,

பொங்கும் தழல் பிழம்பை - சீறுகின்ற அத் தீப்பொறியின் திரட்சியினை, பொன் கரத்தால் - தமது அழகிய கையால், அங்கண் எடுத்து அமைத்து - அவ்விடத்தினின்றும் எடுத்து அவற்றின் வெம்மையை அடக்கி, வாயுவைக் கொண்டு ஏகுதி என்று-வாயுதேவனை நோக்கி

நீ இவற்றை எடுத்துச் செல்லுக என்று, எம்மான் கொடுத்து அளிப்ப - எம் இறைவனுகிய சிவபெருமான் கொடுத்தருள, மெல்லக்கொடு போய் - அவன் அவற்றை மெல்லக் கொண்டு சென்று, அடுத்தது ஒரு பூதத் தலைவ-எனக்கு அடுத்து நிற்பவனுகிய ஒப்பற்ற பூதங்களுக்குத் தலைவனுயுள்ள அக்கினி தேவனே! கொடுபோதி என - நீ இப்பொறிகளை எடுத்துச் செல்வாயாக என்ற கூறிக் கொடுக்க, தீக்கடவுள் சீதப் பகீரதிக்குச் சென்று உய்ப்ப - அக்கினி தேவன் அவற்றைக் குளிர்ந்த கங்கை யாற்றிற் கொண்டுபோய்ச் சேர்க்க, அன்னவளும்-அக்கங்கா தேவியும், போது ஒரு சற்றும் கொண்டு அமைதற்கு ஆற்றுள் - அவற்றைச் சிறிது நேரமும் தாங்கிக் கொண்டு இருப்பதற்கு வன்மையற்றவளாகி, சென்னியில் கொண்டு சரவணத்து உய்ப்ப – தனது தலைமேற் சுமந்து சென்று சரவணப் பொய்கையில் விடுக்க, திரு உருவாய் – அத்தீப் பொறிகள் ஆறும் ஆறு திருவுருவங்களாகி,

முன்னர் - முதலில், அறுமீன் முலை உண்டு அழுது விளையாடி-கார்த்திகை மாதர் அறுவர் அளித்த முலைப்பாலையுண்டும் அழுதும் விளையாட, நறுநீர் முடிக்கு அணிந்த நாதன் - கங்கையைச் சடை முடியில் தரித்த சிவபெருமான், குறுமுறுவல் கன்னியொடும் சென்று - புன்சிரிப்பை உடைய உமாதேவியாரோடும் சென்று, காதல் உரு அவட்குக் காட்டுதலும்- தனது திருமகனுடைய திருவுருவத்தை அவளுக்குக் காண்பித்தலும்,

அன்னவள் கண்டு - அவ்வுமாதேவியார் கண்டு, அவ் உருவம் ஆறினையும்-அந்த ஆறு திருவுருவங்களையும், தன் இரண்டு கையால் எடுத்து - தன்னுடைய இரண்டு திருக்கரங்களாலும் எடுத்து, மெய் ஆறும் ஒன்ருக மேவுவித்து அணைத்து - ஆறு உடலினையும் ஒன்ருகச் சேர்த்துத் தழுவி, கந்தன் எனப் பேர் புனைந்து - கந்தன் எனப் பெயரிட்டு, செய்ய முகத்தில் அணைத்து - செவ்விய முகத்திற் சேர்த்து, உச்சி மோந்து - உச்சம் தலையில் முத்தமிட்டு, முலைப்பால் அளித்து- தனது திருமுலைப்பாலைக் கொடுத்து, சகத்து அளந்த வெள்ளை விடைமேல் - உலகத்தை அளந்த திருமாலாகிய வெண்மை நிறத்தையுடைய இடபத்தின்மீது எழுந்தருளியிருக்கும், விமலன் கரத்தில் அளித்து - சிவபெருமானது திருக்கரத்திற் கொடுத்து, உள்ளம் உவப்ப உயர்ந்தோனே - மனம் மகிழும்படி சிறப்புற்றுேனே!

(87-104) கிள்ளை மொழி மங்கை - கிளியைப் போன்ற மொழியினையுடைய உமாதேவியாரின், சிலம்பின் மணி ஒன்பதில் தோன்றும்- காற் சிலம்பினின்று சிதறிய நவமணிகளில் தோன்றிய, துங்க மடவார் துயர் தீர்ந்து - சிறந்த நவசக்திகள் துன்பம் நீங்கப்பெற்று, தங்கள் விருப்பால் அளித்த - தங்கள் களிப்பினுல் பெற்ற, நவ வீரருக்குள் முன்னேன் - நவ வீரர்களில் முதல்வனுகிய, மருப்பாயும் தார் வீரவாகு - மணம் வீசுகின்ற மலர் மாலையை மார்பில் அணிந்த வீரவாகு தேவர், நெருப்பில் உதித்து - நாரத முனிவரின் வேள்வித் தீயில் தோன்றி, அம் கண் புவனம் அனைத்தும் அழித்து-அழகிய இடம் அகன்ற புவனங்களையெல்லாம் அழித்து, உலவும் - திரிந்து கொண்டிருந்த, செம் கண் கிடாய் அதனை - சிவந்த கண்களையுடைய ஆட்டுக் கிடாயை, சென்று கொணர்ந்து - போய்ப் பிடித்துக் கொண்டு வந்து, எங்கோன் - எம்முடைய தலைவனே! விடுக்குதி என்ற உய்ப்ப- இதனைச் செலுத்தியருள்வாயாக என்று விடுக்க, அதன் மீது இவர்ந்து - அதன்மேல் ஏறி, எண்திக்கும் நடத்தி விளையாடும் - அதனை எட்டுத் திசையிலும் செலுத்தி விளையாடிய, நாதா - தலைவனே!

படைப்போன் - படைத்தல் தொழிலையுடைய பிரமதேவன், அகந்தை உரைப்ப - செருக்கோடு உரையாட, மறை ஆதி எழுத்து என்று உகந்த - வேதத்தின் முதலெழுத்து என்று விரும்பப் பெற்ற, பிரணவத்தின் உண்மை புகன்றிலை - பிரணவத்தின் மெய்ப்பொருளை உரைத்தாயில்லை, சிட்டித் தொழில் அதனைச்செய்வது எங்ஙன் என்று - நீ படைப்புத் தொழிலைச் செய்தல் எவ்வாறு என்று கூறி, முனம் - முன்னர், குட்டிச் சிறை இருத்தும் கோமானே!—அவனைத் தலையிற் குட்டிப் பின் சிறையில் இடுவித்த தலைவனே!

மட்டு அவிழும் - தேன் ஒழுகப் பெற்ற, பொன் அம்கடுக்கை - பொன் போன்ற அழகிய கொன்றை மலரை அணிந்த, புரி சடையோன் - முறுக்கிய சடையையுடைய சிவ பெருமான், போற்றிசைப்ப - துதிக்க, முன்னம் பிரமம் மொழிந்தோனே - முதன்மையாகிய பிரணவப் பொருளை உரைத்தருளியவனே! கொல் நெடு வேல் - கொல்லுதற்குக் காரணமாகிய நெடிய வேற்படையையுடைய, தாரகனும் - தாரகாசுரனும், மாயத் தடம் கிரியும் - மாயையோடு பொருந்திய பெரிய கிரௌஞ்ச மலையும், தூளாக - பொடிபடும்படி, வீர வடிவேல் விடுத்தோனே - கூர்மையான வெற்றி வேலை விடுத்தருளியவனே!

தெள்ளுதிரை கொழிக்கும் - தெளிந்த அலைகளை வீசுகின்ற, சீர் அலைவாய் - சிறந்த கடல்

அருகேயுள்ள, செந்தூரில் போய் - திருச்செந் தூருக்குச் சென்று, கருணை வெள்ளம் என - அருள் வெள்ளம் எனும்படி, தவிசின் வீற்றிருந்து - ஆசனத்தில் எழுந்தருளி வீற் றிருந்து, வெள்ளைக்கய இந்திரனுக்கு அஞ்சல் அளித்து - வெள்ளை யானையை யுடைய தே வேந்திரனுக்கு அபயம் கொடுத்தருளி, கடல் சூழ் மகேந்திரத்தில் புக்கு - கடலால் சூழப் பட்ட வீரமகேந்திரபுரத்திற்குச் சென்று, இமையோர் வாழ - தேவர்கள் நல்வாழ்வு பெறு மாறு, சயஇந்திரன் ஆம் - வெற்றியையுடைய அசுரர் தலைவனாகிய, சூரனைச்சோதித்து வருக என்று - சூரபன்மனின் உள்ளத்தை ஆராய்ந்து வருவாயாக என்று, தடம் தோள் விசய வீரனை - அகன்ற தோள்களையுடைய வெற்றி பொருந்திய வீரவாகு தேவரை, தூதாக விடுத்தோனே - தூதாக அனுப்பியவனே !

கார் அவணன் - கரிய நிறத்தையுடைய அசுரனாகிய சூரபதுமன், வானவரை விட்டு வணங்காமையால் - தேவர்களைச் சிறை விடுத்து வணங்காதிருந்தமையினால், கொடிய தானவர்கள் நாற்படையும் சங்கரித்து - கொடுமை மிகுந்த அசுரர்களுடைய நால் வகைப் படைகளையும் அழித்து, பானு பகை வன் முதலாய பாலருடன் - பானுகோபன் முதலாகச் சொல்லப்பட்ட புதல்வர்களோடு, சிங்கமுகனை வென்று - சிங்கமுகாசுரனையும் கொன்று, வாகை முடித்தோய் - வெற்றி மாலையை அணிந்தவனே !

சகம் உடுத்த வாரிதனில் - உலகைச் சூழ்ந் துள்ள கடலில், புதிய மாவாய்க் கிடந்த - புதுமையையுடைய மாமரமாய் இருந்த, நெடும் சூர் உடலம் கீண்ட - சூரபன்மனுடைய பெரிய உடலைப் பிளந்த, சுடர் வேலோய் - ஒளி வீசு கின்ற வேற்படையை யுடையவனே !

போர் அவுணன் அங்கம் - போர்த்தொழிலில் வல்ல சூரபதுமனுடைய உடலம், இரு கூறுய் - இரண்டு கூருகி, அடல் மயிலும் சேவலும் ஆய் - வலிமையுடைய மயிலும் சேவலுமாக, துங்கமுடன் ஆர்த்து எழுந்து தோன்றுதலும் - சிறப்புடன் ஆரவாரித்து எழுந்து விளங்கு தலும், அங்கு அவற்றுள் - அவ்விடத்து அவ் விரண்டனுள், சீறும் அரவைப் பொருத - சீறி வரும் பாம்பைக் கொல்லுகின்ற, சித்ர மயில் - அழகையுடைய மயிலை, வாகனமா ஏறி நடாத் தும் - வாகனமாகக் கொண்டு அதன்மீது ஏறிச் செலுத்துகின்ற, இளையோனே - என்றும் அழியாத இளமையை யுடையவனே!

மாறி வரும் சேவல் பகையை - உடல் மாறு பட்டு வந்த சேவலாகிய பகைவனை, திறல் சேர் பதாகை என - வலிமை பொருந்திய பெருங் கொடியாக, மேவ - பொருந்தும்படி, தனித்து உயர்த்த மேலோனே - தனிச் சிறப் புடன் உயர்த்திய பெரியோனே !

மூவர் குறை முடித்து - பிரமன் திருமால் உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளின் குறை களையும் நிறைவித்து, தேவர் சிறைவிடுத்து - தேவர்களைச் சிறையினின்று விடுவித்து, விண் ணம் குடி ஏற்றி - தேவலோகத்திற் குடியேற்று வித்து, ஆட்கொண்டு அளித்த தேவே - அனை வரையும் அடிமையாகக் கொண்டருளிய கடவுளே !

(105-108) மறை முடிவு ஆம் - வேதங்களின் முடிவாக உள்ள, சைவக் கொழுந்தே - சைவ சமயத்தின் இளஞ்சோதியே! தவக்கடலே - தவமாகிய ஆறுகளெல்லாம் சென்றடைதற்கு இடமாகிய கடலாயுள்ளவனே! வான் உதவும் - வானுலகத்திற்குத் தலைவனாகிய இந்திரன் மகிழ்ந்தளித்த, தெய்வக் களிற்றை - தெய்வ யானை யம்மையாரை, மணம் செய்தோனே - திருமணஞ்செய்து கொண்டவனே !

பொய் விரவு காமம் முனிந்த - நிலையா மையை யுடைய உலக இச்சையைத் துறந்த, கலை முனிவன் - கலைகளை உணர்ந்த சிவமுனி வனின், கண் அருளால் - திருவருள் நோக்கத் தால், வாம மடம் மானின் - அழகிய இளம் பருவத்தையுடைய பெண்மானின், வயிற்று உதித்து - வயிற்றில் பிறந்து, பூ மருவு கானக் குறவர் - பூக்கள் பொருந்திய கானகத்தில் வாழும் வேட்டுவர்கள், களிகூர - களிப்படை யுமாறு, பூங்குயில்போல் — அழகிய குயிலைப் போல், ஏனல் புனம் இனிது காத்து இருந்து - தினைக் கொல்லையை இனிதாகக் காவல்புரிந்து, மேன்மை பெற - மேலான நிலையினையடைய, தெள்ளித் தினைமாவும் - தெள்ளிய தினை மாவையும், தேனும் - தேனையும் கலந்து, பரிந்து அளித்த - அன்போடு கொடுத்த, வள்ளிக் கொடியை - பூங்கொடி போன்ற வள்ளியம்மையாரை, மணந்தோனே - திரு மணஞ்செய்து கொண்டவனே !

(109-110) உள்ளம் உவந்து - மனமகிழ்ந்து, ஆறு திருப்பதி கண்டு - ஆறு படைவீடுகளை யும் தரிசித்து, ஆறு எழுத்தும் - நின் திருமந் திரம் ஆகிய ஆறு எழுத்துக்களையும், அன்பி னுடன் - அன்போடு, கூறும் அவர் - ஓது கின்றவர்களின், சிந்தை குடிகொண்டோனே - உள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டவனே !

நாறு மலர்க் கந்திப் பொதும்பர் - மணம் வீசுகின்ற மலர்களையுடைய கமுகஞ்சோலை, எழு கார் - எழுகின்ற மேகத்தை, அலைக்கும் - அலைக்கின்ற, சீர் அலைவாய் - சிறப்புடைய கடற்கரை இடத்தேயுள்ள, செந்திப் பதி புரக்கும் - திருச்செந்தூரைப் பாதுகாக்கின்ற, செவ்வேளே - முருகக் கடவுளே!

(111-122) சந்ததமும் - எப்போதும், பல் கோடி சன்மப் பகையும் - எண்ணிறந்த பிறவிகளில் செய்த தீவினைகளும், அவமிருத்தும் - அகால மரணமும், பல்கோடி விக்கினமும் - எண்ணிறந்த இடையூறுகளும், பல் பிணியும் - பலவகைப்பட்ட நோய்களும், பல்கோடி பாதகமும் - எண்ணற்ற பாவச்செயல்களும், செய்வினையும் - பிறரால் செய்யப்படுகின்ற சூனியம் முதலியனவும், பாம்பும் - பாம்புகளும், பசாசும் - பேய்களும், அடல் பூதமும் - வலிமையுடைய பூதங்களும், தீ நீரும் - தீயும் நீரும், பொருபடையும் - தாக்கும் ஆயுதங்களும், தீது அகலா வெவ்விடமும் - கொல்லுதலை நீக்காத கொடிய நஞ்சுகளும், துட்ட மிருகம் முதலாம் எவையும் - கொடிய விலங்குகள் முதலாகிய யாவும், எவ்விடம் வந்து - எவ்விடத்தில் வந்து எம்மை எதிர்ந்தாலும் - எம்மைத் தாக்கினாலும், அவ்விடத்தில் - அந்த இடத்தில், பச்சை மயில் வாகனமும் - பசுமை நிறத்தையுடைய மயில் வாகனமும், திண் - வலிமையுள்ள, பன்னிரண்டு தோளும் - பன்னிரண்டு தோள்களும், அச்சம் அகற்றும் - அன்பர்களின் அச்சத்தைப் போக்குகின்ற, அயில் வேலும் - கூர்மையுடைய வேற்படையும், கச்சைத் திரு அரையும் - கச்சை யணிந்த அழகிய இடையும், சீறடியும் - சிறிய திருவடிகளும், செம் கையும் - சிவந்த பன்னிரண்டு கைகளும், அருள் - கருணையைப் பொழிகின்ற, ஈராறு விழியும் - பன்னிரண்டு திருக்கண்களும், மா முகங்கள் ஆறும் - சிறந்த திருமுகங்கள் ஆறும், விரி கிரணம் - பரவுகின்ற கிரணங்களை, சிந்த - வீசுமாறு, புனைந்த - அணிந்த, திருமுடிகள் ஓர் ஆறும் - திருமுடிகள் ஆறும், எந்தத் திசையும் எதிர்தோன்ற வந்து - எந்தத் திக்குகளில் நோக்கினாலும் எதிரே காணுமாறு வந்தருளி, இடுக்கண் எல்லாம் - துன்பங்களை யெல்லாம், பொடி படுத்தி - தூளாக்கி யொழித்து, எவ்வரமும் தந்து - எல்லா வரங்களையும் தந்தருளி, உள்ளத்துப் புகுந்து உல்லாசமாக இருந்து - எனது மனத்துட் புகுந்து மகிழ்ச்சியாக வீற்றிருந்து,

பல்விதம் ஆம் - பலவகையாகப் பாடப்படுகின்ற, ஆசு முதல் நால் கவியும் - ஆசு கவி முதலாகிய நான்கு வகையான கவிகளும், அட்டாவதானமும் - ஒரே காலத்தில் எட்டு வகை வினாக்களுக்கு விடை அளிக்கும் நினைவு ஆற்றலும், சீர் - சிறப்போடு, பேசும் இயல் - பேசப்படுகின்ற இலக்கண அமைதியுடைய, பல் காப்பியத் தொகையும் - பல காப்பியங்களின் தொகுதியும், ஓசை - ஒலியை யுடைய, எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும் - எழுத்து முதலாகச் சொல்லப்படுகின்ற ஐந்து இலக்கணங்களிலும், தோய்ந்து - படிந்து, பழுத்த தமிழ்ப் புலமை - முதிர்ந்த தமிழ்ப் புலமையும், ஒழுக்கமுடன் - நல்லொழுக்கமும், பாலித்து - தந்தருளி, இம்மைப் பிறப்பில் - இப்பிறப்பில், இருவாதனை அகற்றி - அகப்பற்றும் புறப்பற்றுமாகிய இருவகைப் பற்றுக்களையும் போக்கி, பெரு - பெரிதாகிய, மும்மை மலங்கள் - ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று மலங்களையும், மோசித்து - நீக்கி, தம்மை விடுத்து - தமது அறிவை ஒழித்து, ஆயும் - அருள் வழி நின்றுணர்கின்ற, பழைய அடியாருடன் கூட்டி - பழைய அடியார்களின் கூட்டத்தில் என்னையும் சேர்த்து, தோயும் பரபோகம் துய்ப்பித்து - அவ்வடியார்கள் அனுபவிக்கின்ற பேரின்பத்தை நானும் அனுபவிக்கச் செய்து, சேய - சிவந்த, கடி ஏற்கும் - மணம் பொருந்திய, பூங்கமலக் கால் காட்டி - அழகிய தாமரை மலர்போன்ற திருவடிக் காட்சி தந்து, ஆட்கொண்டு - என்னை அடிமையாக ஏற்று, அடியேற்கு முன் நின்று அருள் - அடியேனுக்கு எப்போதும் முன் நின்று அருள் செய்வாயாக.

—ஆசிரியர்.

# திருப்பாவைச் செழும்பொருள்

(முற்றொடர்ச்சி)

குத்து விளக்கெரியக்
　　கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச
　　சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல்
　　நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த
　　மலர்மார்பா! வாய்திறவாய்;
மைத்தடங் கண்ணினாய் !
　　நீஉன் மணாளனை
எத்தனை போதும்
　　துயிலெழ ஒட்டாய்காண்;
எத்தனை யேனும்
　　பிரிவாற்ற கில்லாயால்!
தத்துவ மன்று
　　தக(வு) ஏலோ ரெம்பாவாய்! (19)

குத்து விளக்கெரிய :

சோரர்க்கு விளக்கும் நிலவும் பகையிறே. பகலை இரவாக்கிக் கொண்டு, விளக்கிலே கிருஷ்ணன் முகத்தைப் பார்த்துக் கொண்டு, படுக்கையிலே கிடக்கப் பெறுவதே! இதென்ன ஐச்வர்யம் என்கிறார்கள். இரா உண்ணாதார்க்கு உண்டார் அடியர் அன்றோ.

கோட்டுக்கால் கட்டில்மேல் :

குவலயா பீடத்தின் கொம்பைப் பறித்துக் கொண்டுவந்து செய்த கட்டிலிறே! வீர பத்தினி ஆகையாலே இவளுக்கு இதில் அல்லது கண்ணுறங்காது.

கட்டில் :

மாணிக்கத்தாலே செய்தாலும் 'கட்டில்' என்று சாதிப்பேச்சு.

மெத்தென்ற பஞ்ச சயனத்தின்மேல் ஏறி :

மெத்தென்ற பஞ்சாலே செய்தபடுக்கை; மென்மை வாய்ந்த பஞ்சவிதமான படுக்கை எனினுமாம். அதாவது அழகு, குளிர்ச்சி மிருதுத்தன்மை, பரிமளம், தாவள்யம் (வெண்மை) என்னும் ஐந்து தன்மைகளை உடைய படுக்கை. குளிர்ச்சி போக்கும் தன்மை, வெப்பம் நீக்கும் தன்மை, காண்டற்கினிய கவர்ச்சியுடைமை, நறுமணமுடைமை, விசாலமுடைமை என்னும் ஐந்து குணங்களையுடைய படுக்கை; ஐந்து உரு இட்டுச் செய்த படுக்கை என்றுமாம்.

கொத்து அலர் பூங்குழல் நப்பின்னை :

திருக்குழலின் ஸ்பரிஸத்தால் கொத்துக் கொத்தாக அலரா நின்றுள்ள பூக்கள் நிறைந்துள்ள குழலை உடைய நப்பின்னை. கொம்பினின்றும் போந்து, ஊடல் நிகழ்ச்சியில் எடுப்பும் சாய்ப்புமாக ஒரு மகாபாரதம் நடவாநின்றால், பூ அலராது ஒழியுமோ? 'மலரிட்டு நாம் முடியோம்' என்று விரதம் பூண்டிருப்பவர்களாதலின், நீ பூ முடிப்பது எங்கள் தலையில் பூப்பொறுத்தாலன்றோ என்கிறார்கள். இவளை இழவு சொல்லும் போது தங்களோடே கூட்டுவர்கள்; பேறு சொல்லும்போது அவனோடே கூட்டுவர்கள். இவளுக்கு இரண்டுதலையும் விடவொண்ணாது.

கொங்கைமேல் வைத்துக்கிடந்த :

கொங்கையைத் தன்மேல் வைத்துக் கிடந்த, கொங்கைமேல் தன்னை வைத்துக் கிடந்த, என இருவகையிலும் பொருள் கொள்ளலாம். அன்புடையார்க்கு நூலும் இல்லை, முறையும் இல்லை. 'நஸாஸ்த்ரம் நைவசக்ரம:' என்றிறே ப்ரணயம் இருப்பது.

மலர்மார்பா:

திருமுலைத்தடங்கள் உறுத்துகையாலே பூ அலருமாபோலே, அகன்றிருந்துள்ள மார்பு. யசோதைப் பிராட்டியின் கட்டுக்கு அலர்கின்ற மார்பு, இவளுடைய தநபந்தத்துக்கு அலரச் சொல்ல வேணுமோ? இச்சானுகுணமாக விளையுமது சைதன்ய ப்ரயுக்தமிறே.

வாய்திறவாய் :

உன் கம்பீரமான மிடற்று ஓசையாலே ஒருவார்த்தை சொல்லாய்.

மைத்தடங் கண்ணினாய் :

'மையிட்டு எழுதோம்' என்றிருக்கிற எங்களையும், மையிடப் பண்ணினாலன்றோ நீ கண்ணுக்கு மையிடுவது.

நீ :

அவனையாம் பெறுகைக்கு அடியான நீ, எமக்கு அவனை விலக்கக்கடவையோ.

உன் மணாளனை :

உனக்கே உரிய உடைமையாய், நீ புருவம் நெறித்த இடத்திலே ஏவல் செய்யும்படி பௌவ்யனாய் இருக்கும் அவனை. பேறு அவளாலே ஆனால், இழவும் அவளாலேயே ஆகத் தட்டு இல்லையிறே. இவளை இட்டிறே அவனை இவர்கள் அறிவது! அவனும் அவ்வழியாலேயிறே உகப்பது? ஆதலின் 'உன் மணாளனை' என்கிறார்கள்.

எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண் ;

ஒரு க்ஷண நேரமும் அவனை எழுந்திருக்க விடுகின்றிலை; கலவிக்கு உடலான சிறு அசைவையும் பிரிவுக்கு உடலென்று கருதிப் பொறுக்கின்றிலை. 'முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது பைந்தொடிப்பேதை நுதல்' என்னும் படியிறே உன் இயல்பு! கொண்டு புறப்பட்டாளாகில் உத்தரார்த்தத்திற்படியே அடிமை செய்கைக்கு உடலாகிறது; உள்ளே கிடந்து தாழ்த்தாளாகில் பூர்வார்த்தத்திற்படியே புருஷகாரத்துக்கு உடலாகிறது.

எத்தனையேனும் பிரிவாற்ற கில்லாயால் :

'அகலகில்லேன் இறையும்' என்று ஒரு கணநேரமும் பிரிவு பொறுக்கமாட்டாமல் அவனோடு நித்யஸம்யோகம் வாய்க்கப் பெற்றவளே.

தத்துவம் தகவன்று :

உண்மை சொல்லுகிறோம், எங்கள் ஆற்றாமையால் சொல்லுகிறோமல்லோம். இது மெய்யே. நீர்மைக்கு உடலல்ல; தர்மமன்று, மெய்யே. மெய்யே உனக்குக் கிருபையில்லை! உனக்கு நீர்மையுண்டென்று சொல்லுகிறது பரமார்த்தமன்று. இதில் உன்னுடைய ஸ்வரூபத்துக்கும் அமையாது. உன்னுடைய ஸ்வபாவத்துக்கும் பொருந்தாது. புருஷகாரத்துக்கும் கிருபைக்கும் ஒவ்வாது. தத்துவம்-ஸத்யம். தகவு—தர்மம்.

முப்பத்து மூவர்
அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும்
கலியே! துயிலெழாய்;
செப்ப முடையாய்!
திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும்
விமலா! துயிலெழாய்;
செப்பன்ன மென்முலைச்
செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் !
திருவே! துயிலெழாய் !
உக்கமும் தட்டொளியும்
தந்(து) உன்மணாளனை
இப்போதே எம்மைநீர்
ஆட்(டு) ஏலோ ரெம்பாவாய்! (20)

முப்பத்து மூவர் :

அஷ்ட வசுக்கள், ஏகாதச ருத்திரர்கள், துவாதச ஆதித்யர்கள், அச்விநீ தேவதைகள் இருவர் ஆகிய முப்பது முக்கோடி தேவகணங்கள். "நால்வேறு இயற்கைப் பதினொரு மூவர்" என வருதல் காண்க.

காப்பதற்கு எண்ணிக்கை நியதியுண்டோ? பஞ்சலட்சம் குடியில் பெண்களானால் காக்கலாகாதோ? ஆர்த்தியே கைமுதலாகக் காக்குமவனல்லையோ?

அமரர்க்கு ;

கொன்றாலும் சாவாதவர்க்கோ உதவலாவது; உன்நோக்குப் பெறாவிடில் சாகும் எங்களுக்கு உதவலாகாதோ ?

முன்சென்று :

நோவு வருவதற்கு முன்னே சென்று, நோவு வருமுன்பே காக்கக்கடவநீ, நோவுபட்டு வந்த எங்களைக் காக்கலாகாதோ?

சென்று :

நீயே சென்று உதவக் கடமைப்பட்டிருக்க உன் வாசலிலே வந்து நின்ற எங்களுக்கு உதவலாகாதோ?

கப்பம் தவிர்க்கும் கலியே :

'கம்பம்' என்ற சொல், கப்பம் என வலித்து நின்றது. கம்பமாவது நடுக்கம். நாட்டார் நடுக்கத்தைத் தவிர்க்கக் கடவநீ, எங்களை நடுங்கப் பண்ணுதே. கப்பம் என்பது இறையாகவுமாம். அது தவிர்த்தலாவது இராவணுதிகளுக்குப் பணிப்பூ இட்டுத் திரியாதபடி காப்பாற்றுதல்.

கலியே :

மிடுக்கை உடையவனே! ஒரு மேட்டுக்கு ஒரு பள்ளம் நேராமாறு போலே, உன் மிடுக்குக்கு எங்கள் பலமின்மையும் நேரன்ரு! 'கலி' என்று மிகுதியாய் சகல தேவதைகளையும் காத்தலாலே எல்லார்க்கும் மேம்பட்டவனே என்றுமாம்.

துயிலெழாய் :

தேவதைகளுக்குப் போலே எங்களுக்குக் குடியிருப்புப் பண்ணித்தரவும், மார்பிலே அம்பேற்கவும் வேண்டா. நீ துயிலுணரும் போது அருகு காண்கையே எங்களுக்குக் குடியிருப்பும் ஜீவனமுமாம்.

செப்பம் உடையாய் :

அன்பர்களுக்குச் செவ்வை அழியாதிருப்பவனே. 'செப்பம்' ரட்சை என்றுமாம்.

திறலுடையாய் :

பகைவர் அனைவரையும் அடக்க வல்ல ஆற்றல் மிக்கவனே.

செற்ருர்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா:

அன்பர்களைப் பகைப்பவர்களுக்குத் துக்கத்தைப் பண்ணிக்கொடுக்கும் குற்றமற்றவனே. பாண்டவர்களுடைய கலக்கமெல்லாம், அவர்களுக்கு எதிரிகள் பக்கலிலே ஆக்கியவன் அல்லையோ என்றபடி. வெப்பம் விளைக்கும் என்னுதே 'கொடுக்கும்' என்றது அருட்கொடையான உதாரத்தன்மையைச் சிறப்பித்தபடி. அன்பர் காரியம் செய்தானுய் இருக்கை அன்றிக்கே தன்பேருகக் கொண்டு மகிழ்ந்திருக்கையால் 'விமலா' என்ருர். துரியோதனனுக்குப் பரிகரத்தைக் கொடுத்து, அருச்சுனனுக்குத் தன்னைக் கொடுத்து நின்றநிலை.

நப்பின்னை நங்காய் :

சொல்லிச் சொல்லாத சௌந்தர்யங்கள் எல்லாவற்ருலும் நிறைவுற்றவளே.

திருவே:

உன்னுலே அவனுக்குப் பெருமை உண்டாம்படியான ஏற்றம் உடையவளே.

உக்கமும் தட்டொளியும்:

ஆலவட்டமும் கண்ணுடியும்; நோன்புக்கு வேண்டும் உபகரணங்களுக்கெல்லாம் உபலட்சணம்.

இப்போதே:

மறுகணத்தில் ஊராரும் இசையார்; நாங்களும் உயிர்வாழோம்.

எம்மை:

பிற்றைப் போதைக்கு இராத எங்களை; 'பேய்ப் பெண்ணே' என்றும், 'நாயகப் பெண்பிள்ளாய்' என்றும், தங்களில் தாங்கள் எத்தனை இழிசொல் கூறினராயினும், பயனைடையுங்கால் எல்லோரும் ஒத்திருப்பார்கள் என்றதாம்.

நீராட்டு:

பெருமாள் பிராட்டியுடைய சௌந்தர்யங்கள் எல்லாம் கிடக்க, ஐயர் செய்துவைத்த விவாகம் என்று உவப்பர். இவர்கள் உவப்பது, இவள் தந்த கிருஷ்ணன் என்று.

ஏற்ற கலங்கள்
எதிர்பொங்கி மீதளிப்ப,
மாற்ருதே பால்சொரியும்
வள்ளற் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான்
மகனே! அறிவுருய்;
ஊற்றம் உடையாய்!
பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற
சுடரே! துயிலெழாய்!
மாற்ருர் உனக்கு
வலிதொலைந்(து) உன் வாசற்கண்,
ஆற்ருது வந்துஉன்
அடிபணியு மாபோலே,
போற்றியாம் வந்தோம்
புகழ்ந்தேலோர் எம்பாவாய்! (21)

ஏற்ற கலங்கள்:

பெருமை சிறுமையில்லை; கடலை மடுக்கிலும் நிறைக்கும் அத்தனை. இவையும் கிருஷ்ணனின் படியாய் இருக்கை. கலம் இடாதார் குறையே அன்றி, இட்ட கலங்களெல்லாம் நிறையும். ஏலாத கலங்கள் நிறையாதொழிதல் பாலின் குறையன்றே! அர்த்தியாதார் குற்றம் அத்தனையே ஒழிய, கண்ணன் பக்கல் குறையில்லை.

மாற்ருதே பால் சொரியும் :

முலைக்கடுப்பாலே தானே பாலை நிரம்பப் பொழியும்; கலமிடுவார் இல்லையென்று, அது சொரிதலைத் தவிராது.

வள்ளல்:

சிலருக்கு உபகரிப்பதாக எண்ணுமல், தன்காரியம் செய்து கொள்வதாக மகிழ்ந்து உதவுதல்.

பெரும் பசுக்கள்:

கண்ணனின் தொடுகையால் வளரும் சிறப்புடைய பசுக்கூட்டங்கள்.

ஆற்றப் படைத்தான் மகனே :

திருநறையூரில் திருவீதிகளில் முத்துக்களுக்கு எண்ணிக்கை உண்டாயினன்ருே, திருவாய்ப்பாடியில் பசுக்களுக்கு எண்ணிக்கையுண்டாவது. அளவற்ற பசுக்களை உடைய நந்தகோபருடைய புதல்வனே. நந்தகோபருடைய செல்வத்திற்கு இட்டுப் பிறந்தவனே. பரமபதம் போலேயும் நாராயணத்துவம் போலேயும் அல்ல, கோபகுலமும் கோபாலத்துவமும் தான் தேடிப்பெற்ற செல்வம்.

அறிவுருய்:

எல்லாம் உணர்ந்த பேரறிவாளனே, இவ்வெளிய பெண்கள் உணர்த்துதற்கு முற்படுகின்ருர்கள்.

ஊற்றமுடையாய்:

திடமான பிரமாணங்களால் பெறப்படுபவனே. மனித அறிவின் மாட்சியினுலேயன்றி, சுயம்புவாய் நித்தியமாய்க் குற்றமற்றனவாய் உள்ள வேதங்களாலே பெரிதெடுத்துப் பேசப்படும் சிறப்புடையவனே! 'உளன் சுடர்மிகு சுருதியுள்' 'வேதமுதல்வன்,' 'நான் மறைகள் தேடி ஓடும் செல்வன்' என்றெல்லாம் இறே பெரியோர்கள் போற்றுவர்! அன்பர்களுக்கு அருள் செய்தலில் யார்தடுத்தாலும் தவிராமல், முடியநின்று தலைக்கட்டும் உறுதியுடையவனே என்றுமாம்!

பெரியோய்:

அந்தப் பிரமாணங்கள் எல்லாம் சொன்னுலும், நின்னுடைய அளவுகாண ஒண்ணுதபடி அப்பாற்பட்டு நிற்கும் பெருமையுடையவனே; அன்பர்கள் பக்கல் எல்லாம் செய்தாலும், எதுவும் செய்யப்பெற்றிலோம் என்றிருப்பவனே எனினுமாம். தன் பெருமைக்கு ஈடாகக் காத்தருள்பவன் எனக் கொள்ளலும் அமையும்.

உலகினில் தோற்றமாய் நின்ற:

மேன்மைக்கு எல்லைகாண வொண்ணுதபடி இருக்கும் என்று ஓலைப்புறத்திலே கேட்டுப்போகை அன்றிக்கே, எல்லாரும் காணலாம்படி வெளிப்பட்டுத் திருவவதாரம் செய்தருளியவனே! அன்பர்கள் பக்கல் பெருவிருப்பு உடைமை, உலகத்தில் மிகப் பிரசித்தமாம்படி விளங்குகை.

சுடரே:

வினைகாரணமாகப் பிறக்கையால் ஒளி மழுங்குவர் உலக மக்கள், அனைவர்க்கும் அருள்செய்யப் பிறக்கையால், இவன் சாணையிலிட்ட மாணிக்கம்போலே ஒளி பெருகி நிற்பன். வைகுந்தத்திற் காட்டிலும் உலகத்தில் தோற்றினபின்பு இவன் நிறம் பெற்றபடி. 'நிலைவரம்பில பல பிறப்பாய் ஒளிவரும் முழுநலம்' என்று சொல்லக் கடவதிறே.

மாற்ருர்:

நாராயணன் ஆகையாலே சம்பந்தம் எல்லாரோடும் ஒத்திருக்க, இவனுக்குச் சத்துருக்கள் உண்டோ என்னில், ஆச்ரித விரோதிகள் இவனுக்குச் சத்துருக்கள் என்க.

போற்றி:

போற்றுகையாவது திருப்பல்லாண்டு பாடுகை.

யாம்வந்தோம் :

அம்புக்குத் தோற்று எதிரிகள் வருமா போலே, உன் குணங்களுக்குத் தோற்று வந்தோம்; பெரியாழ்வாரைப் போலே வந்தோம் என்கிருர்கள்.

(தொடரும்)—ஆசிரியர்,

# மகாபாரதம்

அருண்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

**உதங்கர்:**

பைதர் என்றவர் திருமணஞ் செய்து கொண்டு இல்லறமாகிய நல்லறத்தில் நின்று தவம்புரிந்து கொண்டிருந்தார். இவரிடம் பல மாணவர்கள் இருந்து கல்வி பயின்றார்கள். பைதர் குருகுல வாசத்தில் மிகுந்த வருத்த மடைந்தவராதலின் தன் சீடர்களுக்கு அவர் வேலைகள் கொடுத்ததேயில்லை. அவர்கள் வேலை செய்து களைப்படைதல் கூடாது என்று அவர் கருணையால் கருதினர்.

இத்தகைய உத்தமமான குருநாதரிடம் முக்கியமான சீடர்கள் மூவர் இருந்தார்கள். உதங்கர், ஜனமேஜயர், பௌஷ்யர் என்பவர்கள். உதங்கர் அந்தணச் சிறுவர். ஜனமேஜயனும் பௌஷ்யனும் இராஜ குமாரர்கள்.

பைதர் ஒரு சமயம் யாகஞ் செய்யும் பொருட்டு அயலூர் போகப் புறப்பட்டார். உதங்கரை மட்டும் வீட்டில் இருக்குமாறு நியமித்தார். ''அப்பா! உதங்கா! நீ நம்முடைய வீட்டில் தங்கி வேண்டிய பணிகளைச் செய்து கொண்டிரு'' என்று கூறிவிட்டு ஏனைய சீடர்களுடன் சென்றார்.

உதங்கர் மிக்க அடக்கமாகவும் அக்கரையுடனும் இருந்து குடும்பத்துக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கலை பயின்று கொண்டிருந்தார். ஒரு நாள் ஒரு பணிப் பெண் உதங்கரைப் பார்த்து ''உன்னுடைய குருபத்தினி ருது நீராடியுள்ளார், குருநாதர் ஊரில் இல்லை. ஆதலால் அவளை நீ அடைவாய்'' என்றாள். உதங்கர் இச்சொல்லைக் கேட்டு நடுங்கினர். ''நான் இந்தத் தீமையைச் செய்யேன்'' என்றார்.

நெடுங்காலத்துக்குப்பின் பைதர் தன் சீடர்களுடன் வந்து சேர்ந்தார். தன் அறிவுக் கண்ணால் உதங்கருடைய ஒழுக்கத்தின் உறுதியை உணர்ந்தார். உள்ளம் உவகையுற்றார். ''குழந்தாய்! உதங்கா! உனக்குப் பூரணமான ஞானம் உண்டாவதாக. உன் மீது எனக்கு மிக்க அன்பு வளர்ந்துள்ளது. உனக்கு மங்களம் விளைக. உனக்கு விடை கொடுக்கிறேன். உன் விருப்பம்போல் போய் வா'' என்றார்.

உதங்கர் குருவைப் பலமுறை பணிந்தார். ''என்னைக் காத்தருளிய கருணைக் கடலே, தங்கள்பால் பலகாலும் வித்தை பயின்றேன். குருதட்சிணை கொடுக்க விரும்புகிறேன். அடியேன் எதைக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடுங்கள் என்றார்.

பைதர் ''உதங்கா! எனக்கு ஒன்றுமே தேவையில்லை நான் விருப்பு வெறுப்பு அற்றவன். நீ சுகமாக வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன். போய் வா'' என்றார்.

உதங்கர் ''பெருமானே! குருதட்சிணை தரவில்லையானால் தங்களிடம் கற்றுக்கொண்ட வித்தை வளர்ச்சியடையாது. ஆதலால் ஏதாவது ஒன்றை நான் தர விரும்புகின்றேன் என்றார்.

''மகனே! எனக்கு ஒன்றுமே வேண்டியதில்லை. உன் குரு பத்தினியிடம் போய்க் கேள். அவளுக்கு விருப்பமானதைக் கொடு'' என்றார்.

உதங்கர் குரு பத்தினியிடம் போய்ப் பணிந்தார். ''அம்மா! என்னுடைய கல்விப் பயிற்சி முடிவுற்றது. ஆசிரியர் எனக்குவிடை கொடுத்தார். குருதட்சிணை தர விரும்புகின்றேன். தங்கட்கு விருப்பமான பொருள் யாது? கட்டளையிடுங்கள்'' என்றார்.

குரு பத்தினி ''மைந்தா! பௌஷ்ய மன்னனுடைய மனைவியின் காதில் விளங்கும்

தோட்டினை விரும்புகின்றேன். அது உயர்ந்த பெருமையுள்ள தோடு. இன்று முதல் நான் காவது நாள் ஒரு விரதம் வரப்போகின்றது. அன்று நான் அத் தோட்டினையணிந்து முனிவர் கட்குப் பரிமாற விரும்புகின்றேன். ஆதலால் அதற்குள் கொணர்ந்து தரவேண்டும். இவ் வாறு செய்தால் உனக்கு வித்தை பயன்படும். இல்லையேல் நீ நன்மையடையமாட்டாய்'' என்று கூறினர்.

உதங்கர் விடைபெற்றுப் புறப்பட்டார். போகின்ற வழியில் ஒருபெரிய எருதின் மீது ஒருவன் வழிமறித்து நின்றான். ''உதங்கனே! இந்த எருதின் சாணத்தை நீயுண்ணவேண்டும். இல்லையேல் உனக்கு வழிவிடேன்'' என்றான். உதங்கர் தன் கருமத்தில் கண்ணாகி அதனை மறுக்காமல் உண்டார். அவசரத்தில், உண்ட பின் ஆசமனஞ் செய்யாமல் புறப்பட்டார்.

பௌஷ்யன் என்ற மன்னவன் இருக்கும் இடத்திற்குச் சென்றார். பௌஷ்யன் அவரை அன்புடன் வரவேற்று வணங்கி, 'தங்கட்கு நான் என்ன செய்யவேண்டும்' என்றான். உதங்கர் ''வேந்தே! என் குருவின் மனைவி யார் உன்மனைவியின் குழையை விரும்பு கின்றார். அதனை நீ தருக'' என்றார். பௌஷ்யன் 'சுவாமி! தாங்கள் அரண் மனைக்குச் சென்று என் மனைவியை ஆசீர்வ தித்துக் குழையைப் பெற்றுக்கொள்ளும்' என்றான்.

உதங்கர் அரண்மனைக்குள் சென்று அரசியைத் தேடினார். அவள் அங்குக் காணப் படவில்லை. உதங்கர் மீண்டும் அரசவைக்குச் சென்று ''மன்னா! நின்மனைவி மாளிகையில் இல்லை. என்னைப் பொய்யாக உபசரிப்பது நன்றன்று'' என்றார்.

பௌஷ்யன் ''மாதவரே! என் மனைவி ஆசாரம் குறைந்தவர்கள் கண்ணிற்குத் தோன்றமாட்டாள். நிறைந்த கற்புள்ளவள். தாங்களோ சிறந்த தவசீலர். தங்களிடம் ஆசாரக் குறைவு ஏற்பட்டுள்ளது'' என்றான்.

உதங்கர் சற்று சிந்தித்துப் பார்த்தார். ''அரசே! நான் வழியில் உண்டபின் அவசரத் தில் ஆசமனஞ் செய்யவில்லை'' என்று கூறிக் கைகால்களைக் கழுவி, கீழ்த் திசை நோக்கித் தூயநீரை மார்புவரை போகும்படி மூன்று முறை ஆசமனஞ் செய்து தொடுமிடந் தொட்டு, பின் அந்தப்புரஞ் சென்றார். அரசி எதிர்கொண்டு அவரை வரவேற்று வணங்கி, 'நல் வரவு' என்று கூறினள்.

''அம்மா! என்னுடைய குருநாதரின் பத்தினியார் தங்கள் குழையை விரும்பு கின்றார். அதனைத் தரவேண்டும்'' என்று கூறினர். அம்மாதரசி அத்தோட்டினைக் கழற்றி அவர் கரத்தில் தந்தாள். ''இந்தக் குழைகளை நாகராஜனாகிய தட்சகன் மிகவும் விரும்பிக் கொண்டிருக்கின்றான். கீழே வைத்தால் அவன் கவர்ந்து போய் விடுவான். எச்சரிக்கையாகக் கொண்டுபோம். குருபத் தினிக்கும் இதனைத்தெரிவித்து வையுங்கள்'' என்றாள்.

''அம்மா! நீ அதைப்பற்றிக் கவலைப் படாதே. தட்சகன் என்னை வெல்லமாட் டான்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டு மன்னவனிடஞ் சென்றார்.

''வேந்தே! அரசியார் தோட்டினைத் தந் தார். நான் புறப்படவேண்டும்; விடை கொடும்'' என்றார். வேந்தன் ''வேதியரே! தங்களைப்போன்ற உத்தம அதிதிகள் கிடைப் பது அரிது. தாங்கள் என் வீட்டில் ஒரு வேளை அன்னம் உண்டு போகுமாறு வேண்டுகின் றேன்'' என்று மன்னன் கூறினன்.

''நல்லது. நான் அவசரமாகப் போக வேண்டும். சீக்கிரஞ்செய்'' என்றார் உதங்கர். அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்று, இலையிட்டு உணவு படைக்கச் செய்தான். உதங்கர் உணவு உண்ணும்போது அதில் ஒரு மயிர் இருக்கக்கண்டார். அவருடைய விழி சிவந்தது. ''இந்தத்தூய்மையில்லாத அன்னத் தைத் தந்தபடியால் நீ குருடனாகக் கடவது'' என்று சாபமிட்டார். மன்னவன் அது கேட்டு நடுங்கினன். ''வேதியரே! பணியாள ருடைய குற்றம். சிறு குற்றத்திற்காகப் பெரிய சாபந்தந்தீர். உமக்குச் சந்ததியில் லாமல் போகக்கடவது''என்று மறுசாபந் தந் தான். உதங்கமுனிவர் மனம் இரங்கி ''வேந்தே! உனக்குச் சிலகாலத்தில் சாபந் தீர்ந்து கண் பெறுவாய். உனக்கு மங்களம். வருகின்றேன்'' என்று கூறிவிட்டு விரைந்து புறப்பட்டார்.

வழியில் ஆடையில்லாத சந்யாசி அடிக் கடி காணப்படுவதும் மறைவதுமாகத் தொடர்ந்து வருவதைக்கண்டார். உதங்கர் மாலை நேரத்தில் ஒரு நதிக்கரையில் தோட்டை வைத்து விட்டுச் சந்தியாவந்தனஞ் செய்தார். அந்த சந்யாசி தோட்டைக் கவர்ந்து கொண்டு ஓடினன். உதங்கர் அவசரமாக சந்தியா வந்தனத்தை முடித்துக்கொண்டு ஓடி அவ

லைப் பிடித்தார். உடனே அவன் சந்யாசி வடிவை விடுத்துத் தட்சகனுகி அருகில் இருந்த வளைக்குள் புகுந்து நாகலோகஞ் சென்ருன். உதங்கர் அரசமாதேவியின் சொல்லை நினைத்து, அந்த வளையைத் தடியால் தோண்டினர்; தோண்ட முடியாது வருந்தினர். அவருடைய அவல நிலையைக் கண்ட இந்திரன் தன் வஜ்ராயுதத்தை ஏவினன். வஜ்ரம் தடிக்குள் புகுந்து அந்த வளையைப் பிளந்தது. அவ்வழியேசென்று நாகலோகஞ் சென்ருர். சந்திர சூரியர் இன்றி நாகமாணிக்கங்கள் ஒளி செய்து கொண்டிருந்தன. மணி மண்டபங்களும் சிறந்த மாடமாளிகைகளும் கண்டார். அந்த உலகைச் சுற்றிச் சுற்றி வந்தார்.

அங்கு இரு பெண்கள் கருமை வெண்மை நூல்களால் நெய்வதைக் கண்டார். பன்னிரு ஆரக்கால்களுடைய சக்கரத்தை ஆறு குமாரர்கள் சுற்றிக்கொண்டிருப்பதையுங் கண்டார். ஒரு அழகிய குதிரையையும், அதன் அருகில் ஒருதேவனையுங் கண்டார். உதங்கர் நாகாதிபர்களைத் துதிசெய்தார்.

பின்னர் இந்திரனைத் துதித்தார். குதிரை மீதிருந்த அத்தேவன் உதங்கரிடம்வந்து "உன் துதிக்கு நான் மகிழ்கின்றேன். உனக்கு என்ன செய்யவேண்டும்" என்ருர் உதங்கர். அந்தத் தேவன் "இக் குதிரையின் அபானத்தில் ஊது" என்ருன். அதுபடி அவர் ஊதினர். உடனே அக்குதிரையின் மயிர்க்கால்களில் தீயும் புகையும் தோன்றி நாகலோகத்தை நடுங்க வைத்தன. எங்கும் வெப்பமாகியது. நாக இனங்கள் நடுங்கின. தட்சகன் ஓடிவந்து உதங்கரை வணங்கிக் குழையைக் கொடுத்தான். உதங்கர் பெற்றுக்கொண்டு, "குருபத்தினி குறிப்பிட்ட தவணைநாள் இன்றுதான்; எவ்வாறு போய்ச்சேர்வேன்?" என்று கவலையுற்ருர். அத்தேவன் அவரைக் குதிரை மீதேற்றி ஒரு நொடியில் குருவின் ஆச்ரமத்தில் சேர்த்தான்.

குருவின் மனைவி நீராடித் தலையை ஆற்றிக்கொண்டு உதங்கர் வராமையைச் சிந்தித்துச் சாபங் கொடுக்க எண்ணிக்கொண்டிருந்தாள். உதங்கர் உள்ளே சென்று குழையை அவருடைய பாதத்தில் வைத்து வணங்கினர். "குழந்தாய்! சரியான நேரத்துக்கு வந்தாய், சற்று தாமதித்திருப்பாயானல் உன்னைச் சபித்திருப்பேன். உனக்கு மங்களமுண்டாகட்டும் என்று வாழ்த்தினுள்.

பின்னர் உதங்கர் பைதமுனிவரை வணங்கினர். "மகனே! ஏன் காலதாமதம்?" என்று வினவினர். உதங்கர் நடந்த நிகழ்ச்சியைக் கூறி, தட்சகன் செய்த இடையூற்றையும், நாகலோகஞ் சென்றதையும் கூறினர். மறுபடியும் குருவை நோக்கி, "ஐயனே! அடியேன் சென்ற வழியில் ஒருவன் இடபத்தின் மீது வந்தான். சாணத்தையுண்ணச் சொன்னன். நானும் உண்டேன். அவன் யார்? நாகலோகத்தில் இரு பெண்கள் கருமை வெண்மை நூல்களால் நெய்துகொண்டிருக்கிருர்கள். அவர்கள் யார்? பன்னிரு ஆரக்கால்களுடன் கூடிய சக்கரத்தை ஆறுகுமாரர்கள் சுற்றிக் கொண்டிருக்கக் கண்டேன். அவர்கள் யார்? ஒருவன் குதிரைமீது வந்துஉதவி செய்தான். அவன் யாவன்? இவற்றைக் கூறியருளும்" என்று கேட்டார்.

"உதங்கா! வழியில் வந்து நின்றவன் இந்திரன். அவன் என்தோழன். நீ உண்டது சாணம் அன்று; அது அமிர்தம். அதனையுண்டதனுல்தான் நீ நாகலோகத்தில் அழியாமல் இருந்தாய். இந்திரன் உனக்கு உதவி புரிந்தான். புற்றைக் குத்திய கோலில் இந்திரனுடைய வஜ்ராயுதம் வந்து நாகவுலகிற்கு வழி செய்தது. கருப்பு வெளுப்பு என்ற நூல்களால் நெய்துகொண்டிருந்த பெண்கள் தாதா விதாதா என்ற தேவதைகள். அவர்கள் இரவு பகலையுண்டாக்குபவர்கள். பன்னிரு ஆரக்கால்களையுடைய சக்கரம் வருஷம்; பன்னிரு ஆரக்கால்கள் பன்னிரு மாதங்கள். அதனைச் சுற்றிய ஆறு குமாரர்கள் ஆறு ருதுக்கள். அந்தக் குதிரை அக்கினிபகவான். அதன் மீது இருந்த தேவன் மேகதேவனுகிய பர்ஜன்யன். உனக்கு தேவர்கள் யாவரும் உன்குருபக்தி காரணமாக உதவி செய்தார்கள். உனக்கு மேன்மையுண்டாகும். சுகமாகப் போய்வா" என்று அருள் புரிந்து விடை கொடுத்தார்.

உதங்கர் தனியே இருந்து தவஞ் செய்தார். ஒரு நாள் தட்சகன் தனக்குச் செய்த கொடுமையை நினைத்துக் கோபங்கொண்டார். சர்ப்பயாகஞ் செய்வித்து நாக இனங்களையழிக்க வேண்டும் என்று திட்டம் இட்டார். அதனைப் புரிய வல்லவன் ஜனமேஜயன் என்றும் கருதினர்.

உதங்கர் ஜனமேயஜயரிடஞ் சென்ருர். அவர் உதங்கரை வணங்கி ஆதனமளித்து உபசரித்து "நான் என்ன செய்யவேண்டும்" என்ருர். தனக்குத் தட்சகன் செய்த குற்றத்தைக் கூறிச் சர்ப்பயாகஞ் செய்" என்ருர். ஜனமேஜயர் "தபோதனரே! ஒருவன் செய்த குற்றத்துக்காக அக் குலத்தையழிப்பது

முறையா?'' என்று கேட்டார். ஜனமே ஜயரே! முன்நடந்த ஒரு வரலாற்றைக் கேள் என்று, அவர் ஒரு கதை கூறுவாரா யினர்.

ருரு:

பிருகு என்ற மிகப் புகழ்பெற்ற முனிவர் தவஞ் செய்து கொண்டிருந்தார். இவருடைய மனைவி புலோமை. இவள் கருவுற்றிருந்தாள். பிருகு முனிவர் நீராடச் சென்றிருந்தார். அவ்வேளையில் புலோமா என்னும் அரக்கன் அங்கு வந்தான். அவனை அதிதியாக நினைந்து அந்த உத்தமி காய்கனிகளைத் தந்தாள். அவளைக் கண்டு அரக்கன் காமக்கனலால் கொளுத்தப்பட்டான்.

புலோமை என்ற அப்பெண்மணி குழந்தை யாக இருந்தபோது இக்குழந்தையைப் பிடித் துத்தின்ன இந்த அரக்கன் வந்து கொண் டிருந்தான். குழந்தை யழுதது. தந்தை "அசுரனே! இவளைப் பிடித்துக்கொள்'' என்று பயமுறுத்தும் பொருட்டுக் கூறினர். அரக்கன் அதுகேட்டு மனைவியாக வரித்தான்.

அதனை இப்போது நினைத்துப் பெரிதும் விரும்பினன். அவளைக் கவர்ந்துபோக விரும் பினன். அங்கு ஒரு புறத்தில் யாககுண்டத்தில் ஒளி செய்து கொண்டிருந்த அக்கினி தேவனை நோக்கி "ஏ அக்கினியே! நீ தேவர்கட்கு முகமாகவும் எல்லாவற்றையும் தூய்மை செய்கின்றவனுகவும் இருக்கின்ருய். உண்மையைச் சொல். இவளுடைய பிதா முதலில் எனக்குத் தருவதாகச் சொன்னன். நான் இவளை மனைவியாக வரித்தேன். பொய்யனுகிய இவருடைய தந்தை பிறகு பிருகுவுக்குக் கொடுத்தான். என் மனைவி யைப் பிருகு அடைந்தது பிழை. என் மனஞ் சுடுகின்றது. எங்கும் சாட்சியாக வுள்ள அக்கினியே! நீ சொல். இவள் என் மனைவி தானே?'' என்று கேட்டான்.

அக்கினிதேவன் திகைப்புற்ருன். "அசுரனே! முதலில் இவள் உன்னுல் வரிக் கப்பட்டவள்தான். ஆனல் இவளை நீ மந்திர விதிப்படி வரிக்கவில்லை, பிருகு முறைப்படி மணந்துகொண்டார். நான் பொய் புகலேன்'' என்ருன்.

அரக்கன் பன்றி வடிவங்கொண்டு வாயு வேகத்துடன் அவளைத் தூக்கிக் கொண்டு ஓடினன். அவளுடைய கருவிலுள்ள குழந்தை சீற்றமுற்று நழுவி வெளிவந்தது, அதனல் சியவனர் என்று பேர் பெற்றது. (ச்யவனம்-நழுவுதல்). குழந்தை அரக்கனைப் பார்த்தது. பார்த்த மாத்திரத்தில் அரக்கன் சாம்பலாகிவிட்டான். அவள் தன் மகனை யெடுத்து அணைத்துத் துன்பத்தால் அழுதாள். அவள் கண்ணீர் ஆருய்ப் பெருகியது. அங்கே பிரம தேவர் தோன்றித் தன் மருமகளாகிய புலோமையைத் தேற்றினர். அந்த நதிக்கு வதூசரை என்று பேரிட்டார். (வதூசரை- பெண்ணுடன் சென்றது).

மகனுடன் புலோமை ஆச்ரமத்தை யடைந் தாள். பிருகு முனிவர் வந்து மகனையும் மனைவியையுங் கண்டார். நடந்ததை அவள் கூறி யழுதாள். "உன்னை அரக்கன் எடுத்த போது தடுக்காதிருந்தபடியால் அக்கினி எல்லாவற்றையும் புசிப்பவனுக'' என்று பிருகு சபித்தார். அதனுல் அக்கினி வருத்த மும் கோபமுங்கொண்டு தன் பரந்த தன்மையை ஒடுக்கிக்கொண்டார். அதனுல் அக்கினியின்றி மூவுலகங்களும் வருந்தின. எல்லோரும் ஓடிப் பிரமதேவர்பால் முறை யிட்டார்கள். பிரமதேவர் அக்கினி தேவனைச் சமாதானம் புரிந்தார். நல்லவையையே நீ புசிப் பாய், தீயவை உன்னைச் சாராது என்ருர்.

சியவன முனிவர் தவம் புரிந்து கொண் டிருந்தார். அவரைப்புற்று மூடிவிட்டது. சர்யாதி என்ற அரசன் வேட்டையாடி வந்தான். அவன் மகள் சுகன்னி இந்தப் புற்றைப் பார்த்தாள். அதற்குள் முனிவ ருடைய கண்ணை வண்டென்று கருதி ஒரு முள்ளை யெடுத்துக் குத்தினுள். அதனுல் முனிவர் கண் துன்புற்றது. அதன் விளை வாக அரசன் முதலிய அனைவரும் கண் இழந் தார்கள். அரசன் அதன் காரணம் அறிந்து முனிவரைத் தொழுது அவருக்குத் தன் மகள் சுகன்னியை ஈந்தான். சியவனரின் அருளால் எல்லாரும் கண் பெற்ருர்கள்.

சியவன முனிவருக்குச் சுகன்னியிடம் மகிமையுள்ள பிரமதி என்ற புதல்வர் பிறந் தார். பிரமதி என்பவருக்குக் கிருதாசி என் பவளிடம் ருரு என்பவர் பிறந்தார்.

விசுவாவசு என்ற கந்தர்வராஜன் மேனகை யிடம் கர்ப்பதானஞ் செய்தான். மேனகை தூலகேச முனிவருடைய ஆச்ரமத்துக்கு அருகில் நதிக்கரையில் ஒரு பெண் குழந்தை யைப்பெற்று விட்டு தயையில்லாமல் விட்டுச் சென்ருள். மிக அழகான அக்குழந்தை அழுதுகொண்டிருந்தது. தூலகேச முனிவர் கருணையுடன் எடுத்து வளர்த்தார். பிரமத்

வரை என்று பேரிட்டார். (பிரமதா—பெண்கள்; வரா-சிறந்தவள்;) பெண்களில் சிறந்தவளான அவள் மெருகிட்ட பொற்பதுமை போல் பொலிவு செய்தாள்.

ருரு அவளைக் கண்டு காதல் கொண்டார். தன் தந்தை பிரமதிக்குத் தெரிவித்தார், பிரமதி தூலகேசரிடம் யாசித்தார்.

அவர் அடுத்துவரும் அஸ்த நட்சத்திரத்தன்று திருமணஞ்செய்து தருவதாக வாக்களித்தார்.

திருமண காலம் நெருங்கி வரும்போது, ஒரு நாள் பிரமத்வரை அரவந்தீண்டியிறந்துவிட்டாள். அழகின் சிகரமான அம் மணமகள் பிணமகள் ஆனுள். எல்லோரும வாய்விட்டு ஓ என்று கதறி அழுதார்கள்.

ருரு தாங்கமுடியாத வருத்தத்துடன் அழுதார். "நான் மனவாக்குக் காயங்களால் தூய்மையுடையவனுகிச் சிறந்த தவஞ் செய்தது உண்மையானுல் இவள் பிழைக்கட்டும். நான் உத்தமமான ஒழுக்கமுள்ளவனுயின் பிழைக்கட்டும் என்று கூறிப் புலம்பினுர்.

அவருடைய அழு குரலைக்கேட்ட அமரர்கள் இரக்கமுற்று ஒரு தேவதூதனையனுப்பினுர்கள். அத்தேவதூதன் ருருவின் முன் வந்து ஐயா! விதியைத் தடுக்க யாராலும் இயலாது. மரணத்தைத் தவிர்க்க முடியாது. உன் தவ வொழுக்கத்தால் ஒரு உபாயஞ் செய். உன் ஆயுளில் பாதியைத் தந்தால் இவள் பிழைப்பாள்" என்ருன்.

"அதுபடியே தந்தேன்" என்று ருரு கூறினுர். பிரமத்வரையின் தந்தையான விசுவாவசுவும் தேவதூதனும் ஓடி அறக்கடவுளிடம் அவள் உயிரை யாசித்தார்கள். அறக் கடவுள் ருருவின் தவவலிமைக்கு மகிழ்ந்து அருளினுர். பிரமத்வரை பிழைத்து எழுந்தாள்.

குறித்த நாளில் பிரமத்வரையை ருரு திருமணஞ் செயதுகொண்டு இன்புற்று வாழ்ந்தார். அரவத்தால் வந்த இந்த இடர்ப்பாட்டை அவர் நினைந்து வருத்தமும் சீற்றமுங் கொண்டார். பாம்புகளையெல்லாம் கொல்ல வேண்டும் என்று நியமம்பூண்டு அரவங்களைத் தேடித் தேடிக் கொல்வாராயினுர்.

ஒரு நாள் பெரிய காட்டில் வயது முதிர்ந்த தண்ணீர்ப்பாம்பு படுத்திருக்கக் கண்டார், பெரிய தடியை எடுத்து ஓங்கி அடிக்கப் போனுர். அப்பாம்பு "ஹரி ஹரி" என்று கூறி, "தவமுனிவரே! குற்றஞ் செய்யாத என்னைக் கொல்வது நியாயமா? என்று கேட்டது.

ருரு "பாம்பே! என் மனைவியை ஒரு பாம்பு கடித்துக்கொன்றது. அதனுல் பாம்பின் குலத்தை அழிக்க நான் ஒரு கொடிய சங்கல்பம் பூண்டேன் என்ருர்.

"முனிவரே! மனிதர்களைக் கடிக்கின்ற நஞ்சுற்ற நாகங்கள் வேறு; நீர்ப்பாம்புகள் வேறு; நீர்ப்பாம்பிடம் நஞ்சு கிடையாது. அறநெறியை யறிந்த நீர் நீர்ப்பாம்புகளைக் கொல்வது முறையன்று" என்றது பாம்பு.

பாம்பின் இனிய மொழியைக் கேட்ட ருரு "பாம்பே! நீயார்? இந்த பாம்புப் பிறப்பை எப்படி யடைந்தாய்?" என்று வினுவினுர் ருரு.

நீர்ப்பாம்பு "முனிவர் பெருமானே! நான் முன் பிறப்பில் ஆயிரபாதன் என்ற முனிவன். எனக்குக் கமர் என்ற பிராமண முனிவர் நண்பர், அவர் ஒரு சமயம் அக்னிஹோத்திரம் புரிந்து கொண்டிருந்தபோது நண்பர் என்ற முறையில் விளையாட்டாகப் புல்லினுல் பாம்பு போல் செய்து அவர் முன்னே வைத்துப் பாம்பு என்று கதறினேன். அவர் அஞ்சி மூர்ச்சித்துவிட்டார். மீளவும் அவர் உணர்ச்சி பெற்று, இப்படி என்னைப் பயமுறுத்திய படியால் பாம்பாகக் கடவாய்" என்று சபித்தார்.

அவரை வணங்கி 'நண்பர் என்று கருதி வேடிக்கையாகச் செய்தேன். பொறுத்தருள வேண்டும்' என்று வேண்டினேன். அவர் "அன்பனே! என் வாக்கு ஒருபோதும் பொய்யாகாது, நீர் நெஞ்சில் வஞ்சமில்லாதவர். ஆதலால் நஞ்சில்லாத நீர்ப்பாம்பாக ஆவாய். ருரு என்ற உயர்ந்த தவமுனிவர் பார்வையால் சாபம் நீங்கப பெறுவாய் என்று வரம் அளித்தார்" என்று கூறியது. ருரு உற்றுப் பார்த்ததனுல் சாபம் நீங்கி ஆயிர பாதனுக ஆனுர்.

# குரங்கும், குரங்காட்டியும்

## முன்னுரை :

மனம் என்பது ஒரு வியக்கத்தக்க கருவி. அதிலும், மனித மனம் மிகவும் வியத்தற் குரியது. மனிதன் என்ற சொல்லே, மனம் என்னும் சொல்லின் அடிப்படையாகத் தோன்றியதேயாகும். மனத்தின் இயல்பை நினைத்து உணர உணர, நாம் பெரிதும் வியப்பில் ஆழ்கின்றோம்.

மனம் என்பது, அணு பரிமாணம் உடையது என்று, நியாய நூலார் கூறுவர். ஆனால், அதன்கண் மாறி மாறிக் கணந் தோறும் தோன்றும் எண்ண அலைகளைக் கருதினால், மனம் ஒரு வகையிற் கடலினும் பெரியது எனத் துணிந்து சொல்லலாம்.

'மனம்போல வாழ்வு' என்பது பழமொழி. மனம் நம்மைத் தேவனுக்கியும் உயர்த்தும்; விலங்காக்கியும் வீழ்த்தும். நன்மையைத் தீமையாகவும், தீமையை நன்மையாகவும், மாற்றிக் காட்டும் இயல்பு மனத்திற்கு உண்டு. நிரயத்தைத் துறக்கமாகவும், துறக்கத்தை நிரயமாகவும் மாற்றும் வல்லமை, மனத்திற்கு உள்ளது. மனத்தின் இயல்பிற்கு ஏற்பவே, மனிதர்கள் உயர்வு அல்லது தாழ்வு எய்துகின்றனர். மனம் நம்மை நல்லவர்களாக்கி வாழவும் வைக்கின்றது; தீயவர்களாக்கிக் கெடுத்து வருந்தி உழலவும் செய்கின்றது.

## உருவகம் :

மனத்தின் இயல்புகள் பலவற்றையும் ஆய்ந்து உணர்ந்த அறிஞர்களும், கவிஞர்களும், அருளாளர்களும், அதனைப் பல வகைகளில் உருவகம் செய்து, ஏற்ற பெற்றி புகழ்ந்தும் இகழ்ந்தும் உரைத் துள்ளனர்.

'மனம் எனும் நெடுந்தேர்' 'மனம் எனும் பறவை' 'மனம் எனும் மாயப்புரவி' 'மனம் எனும் தோணி' என்றெல்லாம், பலவகை களில் கவிஞர்கள் மனத்தின் இயல்பைக் கவின் மிக உருவகம் செய்து காட்டியுள் ளனர். 'கல்மனம்' 'இரும்பு மனம்' 'மனம் எனும் காடு' 'மனக் குகை' 'மனக்கோயில்' 'மனமலர்' என்றும், இலக்கியங்களில் மனத்தைப்பற்றிய குறிப்புக்கள், ஆங் காங்கே அழகுற வருகின்றன.

## குரங்கு :

இங்ஙனம் மனத்தின் இயல்பினை அறி ஞர்கள் வெவ்வேறு வகைகளில் உருவகஞ் செய்து உணர்த்தி யுள்ளனராயினும், அவை எல்லாவற்றையும் விட, ஓர் உரு வகம் மிகச் சிறப்பாகவும், பொருத்தமாக வும் அமைந்து காணப்படுகின்றது. அது தான் மனத்தைக் 'குரங்கு' என்று குறிப் பிடும் சிறந்த உருவகம் ஆகும். மனத் தின் இயல்புகளை உள்ளவாறு விளக்கு தற்கு இதனினும் சிறந்த பொருத்தமான உருவகம் பிறிதொன்றில்லை எனத் துணிந்து சொல்லலாம். குரங்கின் குறும்பு களும், மனித மனத்தின் பலவகை அலைவு களும் பெரிதும் ஒத்துக் காணப்படுகின் றன.

"மனமெனுமோர் பேய்க்குரங்கே !
மடப்பயலே ! நீதான்
மற்றவர்போ லெனைநினைத்து
மருட்டாதே கண்டாய்!
இனமுறவென் சொல்வழியே
யிருத்தியெனிற் சுகமாய்

இருந்திடுநீ! யென்சொல்வழி
யேற்றிலையா னலோ
தினையளவுன் னதிகாரஞ்
செல்லவொட்டேன்! உலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன்!
திருவருளாற் கணித்தே
நனவினெனை யறியாயோ
யாரெனஇங் கிருந்தாய்?
ஞானசபைத் தலைவனுக்கு
நல்லபிள்ளை நானே!

என அருட்டிரு இராமலிங்க அடிளார், இவ்வுண்மை தெளிந்து அழகுற அருளிச் செய்துள்ள சிறந்த திருவருட்பாப் பாடல், இங்கு நாம் இனிது சிந்தித்து மகிழ்தற் குரியது.

பொருத்தம் :

மனத்தைக் குரங்காகக் குறிப்பிட்டு, இராமலிங்க அடிகளார் இயம்பியிருப்பதன் நுட்பம், இனிதுணர்ந்து போற்றத்தக்கது. குரங்கு ஒரு சிறிது நேரமும் வாளா இரா மல், பலவகைக் குறும்புகள் செய்து கொண்டே இருக்கும்; எங்கும் தாவித்தாவி ஏறி ஓடும். அதுபோல, மனமும் பலவகை களில் அலைந்து திரியும்; தகாத தீய பல எண்ணங்களை மாறி மாறி எண்ணிக் கொண்டு கிடக்கும். குரங்குகள் காடு களில் திரியும், மலைகளில் ஏறும், மரக் கிளைகளில் தாவும், தன் விருப்பம் போல் எங்கும் சுற்றித் திரியும். அதற்கு ஏற்ப மனமும், உலகியல் வேட்கை ஆகிய காடு களில் அலையும்; மகளிரின் தனங்களாகிய மலைகளில் உலவ விரும்பும்; ஐம்புல ஆசை களாகிய கிளைகளில் மாறி மாறித் தாவி, கீழும் மேலும் சுழன்று கரணமிடும்; நன்று தீது என்று பாராமல், எங்கும் சென்று எதையும் பற்றிக்கொண்டு, திரிந்து அலைந்து உழலும். இத்தகைய பல பொருத்தங்கள் இருப்பதனலேயே, சான் றோர்களும் ஞானிகளும் மனத்தைக் குரங்கு என்று தகவறிந்து கூறியுள்ளனர்.

குரங்காட்டி :

குரங்கு இத்தகைய தனது குணங்க ளால் மிகவும் இழிந்தது போலக் காணப் படினும், தக்க ஒரு குரங்காட்டியின் தொடர்பு பெற்றால், நல்ல பயிற்சியும் பண் பும் பெற்றுச் சிறப்பு எய்துதலைக் காண் கின்றோம். அங்ஙனமே, நம்முடைய மன மாகிய குரங்குக்கும், ஒரு சிறந்த குரங் காட்டியின் தொடர்பும் பயிற்சியளிப்பும் ஏற்படுமாயின், மிக்க நலம் பயக்கும். குரங் கின் குறும்புகளையும் அலைவுகளையும் தடுத் துத் திருத்தி, நல்ல கலைப் பயிற்சியை அளித்துப் பழக்கி, அதனை நலமுற வாழ் விக்க வல்லவன் ஒரு குரங்காட்டியே ஆவான். அம்முறையில், நம் மனத்தை யும் திருத்திப் பண்படுத்திச் சிறப்பு எய்து விக்க வல்ல சிறந்த குரங்காட்டி ஒருவன் உளன்! நாம் அவன்பால் நம் மனக் குரங்கை ஒப்படைத்தால், அவன் அதனைச் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள் வான். அக்குரங்காட்டி எவனுதல் கூடும் என்று சொல்லவும் வேண்டுமோ ?

நம் மனமாகிய குரங்கை நாம் ஒப்படைத் தால், அதனை நனியுவந்து ஏற்று நன் கினிது பழக்கி, நலமெலாம் அடைவிக்க வல்ல குரங்காட்டி ஆண்டவனே ஆவான். குரங்காட்டியை அடைந்தாலன்றிக் குரங்கு திருந்தி உய்யுமாறில்லை! அதுபோல, ஆண்டவன்பால் அடைக்கலம் புகுந்து, அவன் வயப்பட்டு நின்று அன்பு செய்து ஒழுக முற்பட்டாலன்றி, மனக் குரங்கு திருந்திச் சிறப்புற்று நலம் பெற்று உய் தற்குரிய வழி பிறிது எதுவும் இல்லை! மக்கள் திருந்திப் பண்பட்டு மனத்துக்கண் மாசிலராய், அறவாழ்வு வாழ்வதற்கு, இறை வனிடத்து ஈடுபாடும், இறை வழிபாடும் மிகப் பெரிதும் இன்றியமையாதனவாகும்.

சிவானந்த லகரி :

இவ்வுண்மையினைச் "சிவானந்த லகரி" என்னும் சிறந்த துதி நூலில், ஆதிசங்கரா சாரிய சுவாமிகள் அவர்கள், அழகிய ஒரு சுலோகத்தின் (20) வாயிலாகத் தெளி வுறுத்திச் செவ்விதின் விளக்கி யருளியுள் ளார்கள் :-

"சிவ பெருமானே! என்னுடைய மனம் இடையறாது எப்பொழுதும் உலகியல் மயக்கம் ஆகிய காட்டில், அலைந்து திரிந்து

கொண்டிருக்கின்றது; இளம் பெண்களின் தனங்கள் ஆகிய மலைக் குவடுகளில் ஓடியாடி நடனம் செய்து கொண்டுள்ளது; பலவகைப்பட்ட ஐம்புல ஆசைகள் ஆகிய கிளைகளில் விரைந்து விரைந்து மாறி மாறித் தாவிக் கீழும் மேலுமாகச் சுழன்று உழலுகின்றது; தன் விருப்பம் போலக் கட்டுப்பாடு என்பது சிறிதும் இல்லாமல், எங்கெங்கோ சுற்றித் திரிந்து கெட்டு அலைகின்றது. இடையருது அலையும் இயல்புடைய என்னுடைய மனம் ஆகிய குரங்கை, நின்பால் யான் ஒப்படைக்கின்றேன். அதனைத் தாங்கள் பக்தி என்னும் கயிற்றினால், கெட்டியாகக் கட்டித் தங்கள் பால் வைத்துக் கொள்ளுங்கள்.

ஏனெனில், தாங்கள் அனைவருக்கும், இன்பமும் மங்களமும் செய்யும் இயல்புடையீர்! ஆதலின், இக் குரங்கையும் திருத்தி நலஞ் செய்தல் தங்கள் கடமை. மேலும், தாங்கள் எல்லா இடங்களிலும் பரவி விளங்கும் பண்புடையவர். ஆதலின், தங்களுக்கு என்னுடைய மனக் குரங்கு, எந்த இடத்தில் அலைந்து சுற்றிக் கொண்டிருக்கின்றது என்று, தேடி அறிந்து அடக்கியாள்வது மிக எளிது.

அங்ஙனம் செய்தல், குரங்குக்கு மட்டுமே நலம் பயப்பதன்றி, தங்களுக்கும் மிகப் பெரிதும் உதவியாக இருக்கும்! எங்ஙனமெனில், தாங்களோ கையிற் கபாலத்தை வைத்துக்கொண்டு, அடியார்களின் அன்பு ஆகிய பிச்சையை எடுத்துலவும் தொழில் உடையவராகத் திகழ்கின்றீர்! பிச்சை எடுப்பவர்கள் வாளா தாம் மட்டுமே செல்லாமல், ஒரு குரங்கையும் கயிற்றிற் கட்டி உடன் அழைத்துக் கொண்டு செல்லின், அவர்களுக்கு அது பெரிதும் உதவியாக அமைதலைக் காண்கின்றோம்.

ஆகவே கையிற் கபாலம் ஏந்திக் **கபாலி** எனவும், பிச்சை எடுத்தலாற் **பிட்சாடனர்** எனவும் விளங்குகின்ற தாங்கள், என்னுடைய மனம் ஆகிய குரங்கைப் பக்தி என்னும் கயிற்றினால் கட்டி, அழகுற ஆடுமாறு பழக்கி, பிச்சை எடுக்கும் தங்களின் தொழிலுக்கு உதவியாகத் தங்கள்பால் இனிது வைத்துக் கொள்ளுங்கள்."

**மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் :**

'சிவானந்த லகரி' என்னும் துதிநூலில் வரும் அந்தச் சிறந்த சுலோகத்தின் பொருளைப் பின் வரும் அழகிய பாடல், தன் கண் அமையக் கொண்டுள்ளது.

மோகமாம் அடவி திரிந்து, அரிவையர்தம்
முலைக்குவட் டிடைநடம் ஆடித்,
தாகமார் ஆசைத் தருக்குலம் தோறும்
தாவும்என் புன்மனக் குரங்கைப்
பாகமார் பக்தி நாண்கொடு கட்டிப்
பலிக்குநீ செல்க! யான் கொடுத்தேன்
ஏகநா யகனே! தில்லையில் ஆடும்
இறைவனே! எம்பெரு மானே!

என்பது, அந்தச் சிவானந்த லகரிச் சுலோகத்தின் சிறந்த செந்தமிழ் மொழி பெயர்ப்புச் செய்யுளாகும்!

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் எனத் திகழ்ந்திருந்த பெருங்கவிஞர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், தமது முதுமைப் பருவத்தில் நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையிற் கிடந்த பொழுது, தம்மைக் காணவந்த அன்பர் ஒருவர் தமது பேச்சுக்கு இடையே கூறிய சிவானந்த லகரிச் சுலோகத்தினை வியந்து சுவைத்து, உடனே தமது மாணவர் ஒருவரை ஏடும் எழுத்தாணியும் கொணரச் செய்து, எழுதிக் கொள்ளுமாறு பணித்து மொழி பெயர்த்துப் பாடியளித்தது, இந்த இனிய அரிய செய்யுள்.

**முடிவுரை :**

இதன் சொற்பொருட் சுவை நலங்களில் ஈடுபட்டு இன்புறுவதுடன், நாம் நம் மனம் ஆகிய குரங்கை, பிட்சாடன வடிவம் கொண்டு திகழும் **கபாலீசுவரப் பெருமான்** ஆகிய குரங்காட்டியின்பால் ஒப்படைத்து, அன்பு செலுத்தி, நலம் பலவும் பெற முயலுவோமாக!

—ஆசிரியர்.

# உய்விடம்

திருமலை நல்லான் இராமகிருஷ்ணையங்கார், சென்னை.

இறைவனே உடையவன், மற்றவை யனைத்தும் அவன் உடைமைகளே. உயிர்ப் பொருள்களும் சடப்பொருள்களும் எல்லாம் இறைவனுடைய சொத்துக்களே. அவன் சொத்துக்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கிறார் கள். விளையாட்டிற்கு உறுப்பாயமைந்த சொத்துக்களென்றும், இன்பந்துய்ப்பதற்கு உறுப்பாயமைந்த சொத்துக்களென்றும் அவ் விருபிரிவுகளைவகுக்கிறார்கள். இவைமுறையே "லீலாவிபூதி" என்றும் "போகவிபூதி" என்றும் பேர் பெறும். மூலப்ரகிருதியின் பரிணமத்தாலாகியஉலகமனைத்தும் லீலாவிபூதி யாகும். குழந்தைகள் செங்கற்களையடுக்கி வீடுகட்டி அடிச்செங்கற்களை யுருவி அவ் வீட்டைக் குலைத்து விளையாடுவதுபோல இறைவனும் இவ்வுலகங்களை ஆக்கி யழித்து விளையாடுகின்றானென்பர். "வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன்" "இன்புறும் இவ்விளையாட்டுடையான்" என்று முறையே ஆண்டாளும் ஆழ்வாரும் அருளிச் செய்துள்ளமை காண்க. இனி, ப்ரகிருதிமண்டலத்திற்குஅப்பாற்பட்டஉலகம் அனைத்தும் போகவிபூதியாகும். அவ்வுலகங் களை ஆக்கியழிப்பதில்லை. அவையென்று முள்ளன. ஆதலின் போகவிபூதிக்கு "நித்ய விபூதி" என்று மற்றொரு பெயரும் வழங்கப் படுகிறது. முக்திபெற்றோரும், அநந்தன் கருடன் விஷ்வக்ஸேனர் முதலிய நித்யஸூரி களும், திருமகள் முதலிய தேவிமார்களும் தானுமாய் இறைவன் இன்பம்பயக்க எழுந் தருளிப் போக மனுபவிக்கும் இடமாதலின் இதுபோக விபூதியாயிற்று.

போகவிபூதியிலுள்ளோர் அனைவரும் தம்மை இறைவனுடைய உடைமைகளாக உணர்ந்து "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப" (திருவாய்மொழி 4,9,10) என்றபடி, பெரியபிராட்டியாரும் பெருமாளு மாகிய திவ்ய தம்பதிகளின் அபிமானத்திலே அடங்கி நிற்பர். லீலாவிபூதியிலுள்ளாரோ அங்ஙன் தம்மை உடைமைகளாக உணராது உடையவர்களாகவே தம்மை மயங்கி அபிமா னித்திருப்பார்கள். தன்னபிமானத்திலடங் காது இங்ஙன் மயங்கி விலகிச் செல்லும் உயிரினங்களைத் தன்னோடணைத்துக்கொள் வதற்குப் பலவகைகளில் இறைவன் முயல் கின்றான்.

கீழ்க்கூறியபடி உலகங்களை ஆக்கியழிப்பது விளையாட்டேயாயினும் விலகிச் செல்லு முயிரினங்களைத் தன்னோடணைத்துக்கொள்வ தையே உள்நோக்கமாகக் கொண்டு இறை வன் கைக்கொண்ட முயற்சியேயது என் பதை நாமுணர்தல் வேண்டும். "சன்மங் கழிப்பானெண்ணி யொன்றியுலகம் படைத் தான்" (திருவாய்மொழி 3-9-10) என்று நம் மாழ்வாரும், "உய்ய உலகு படைத்து" (பெரியாழ்வார் திருமொழி 1,6,5) என்று பெரியாழ்வாரும் அருளிச்செய்திருப்பது காண்க. இறகொடிந்த பறவைபோல அறிவு மங்கி ப்ரகிருதியில் ஒருங்கிக்கிடக்கும் உயிரி னங்களுக்குக் கருவிகளும் உடலமும் கொடுத்து அறிவு தலைதூக்கும்படி செய்து தன்னைவந்து அணையும்படி செய்கின்றனன் இறைவன் என்க. "மர்யவன் தன்னை வணங்கவைத்த கரணமிவை, உமக்கன்று" என்று கற்பித்து இராமாநுசர் உயிரினங்களைக் காத்ததாக இராமாநுச நூற்றந்தாதி (67) கூறுவதிங்கு நினைக்கத்தகும்.

படைத்த உயிரினங்களுக்கு நல்வழிகாட்ட வேதநூலை வழங்கியது இறைவன் எடுத்துக் கொண்ட மற்றொரு முயற்சியாகும். கண்ணுள் ளார்க்கன்றோ காட்டிய வழியிற் செல்ல

இயலும்! கண் திறந்து பார்க்காதவர்களுக்கு என்ன செய்ய முடியும்? எனவே அறிவில் மனிசர்க்கு வேதம் வழங்கியது வீணே யாயிற்று.

வீணாகவே இறைவன்தானே வந்து பல காலம் வழிதிகைத்து அலமருகின்ற நம்மை நல்வழியே நடந்தழைத்துச் செல்லுகின்றான். இதனையே இறைவனது அவதாரமென்கிறோம். இது தன்னோடு நம்மையணைத்துக் கொள்ள இறைவன் கைக் கொண்ட மற்றொரு முயற்சியாகும்.

இறைவனே வந்து முன்னடந்து நம்மை நல்வழி நடத்தும் போதும், தீவினையோ மாகிய நாம் தெரிந்துணர்வொன்றின்மையால் வாளா இருந்து பிற்பட்டுவிட்டோம். என்ன செய்வான் கருணைவள்ளல்! நம்மைவிட்டுச் செல்ல மனமில்லை. நமக்காகத் தானே போக விபூதியிலிருந்து இங்கு வந்தான் என்பதை நமக்கு உணரத் தெரியவில்லை. அவன் செய்த உதவிகளை மறந்தோம். நன்றிகொன்று உய்யும் வழியில்லாமல் தவிக்கிறோம். ஆயினும் நம்மை விடமாட்டேனென்கிறான் இறைவன். நம்மிடம் அவ்வளவு பித்துப் பிடித்திருக்கிறது இறைவனுக்கு! அரங்கனையை பித்தனல்லனோ அவன்? பெற்றவன் அவன், பித்துப்பிடித்திருக்கிறது. அறிவற்ற பிள்ளைகள் நாம். நெஞ்சு பசையற்றுக் கல்லாகியிருக்கிறது. "பெற்றமனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்பது அநுபவத்துக்கு எவ்வளவு ஒத்திருக்கிறது! பிற்பட்ட நாமும் என்றேனும் தன்னைப்பற்றி வாழ்வதற்காக இறைவன் இங்கேயே தங்கி நிற்கிறான். இங்ஙனம் ஆங்காங்கே யாவராயினும் கண் கொண்டு காணலாம்படி வடிவம் கொண்டு இறைவனெழுந்தருளியிருக்கும் நிலையே "அர்ச்சை நிலை" என்று பெரியோர்களால் போற்றப்படுகிறது. இதுவே இறைவன் நமக்காக எடுத்துக்கொண்டிருக்கும் இறுதி முயற்சியாகும். இதற்கும் நாம் தப்பினோமானால் உய்வதற்கு வேறுவழியே இல்லை. "கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லை யென்று, மண்டினாருய்யலல்லால் மற்றையார்க் குய்யலாமே" (திருக்குறுந்தாண்டகம் 19) என்று திருமங்கை மன்னன் அருளியிருப்பது கவனிக்கத்தக்கது.

அர்ச்சை யுருவத்துடன் நமக்காக இறைவன் எழுந்தருளியிருக்கும் தலங்களைத் தவிர, நமக்கு உய்வுற வேறு வழியில்லையென் பதைக் குலசேகரப் பெருமாள் உவமை காட்டியழகுற விளக்கியுள்ளமையும் ஈண்டு அறிந்து இன்புறற்பாலது.

"வெங்கட் களிற டர்த்தாய்! வித்துவக்கோட்டம்மானே,
எங்குப்போ யுய்கேனுன் னிணையடியே யடையலல்லால்
எங்கும் போய்க் கரைகாணா தெறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே.
(பெருமாள் திருமொழி 5—5)

குவலயாபீடம் என்கிற யானையை யழித்தவன், நமது வெவ்வினையையும் அழிப்பானாய் வித்துவக்கோடு என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கிறான். அவனையடைவதை விட்டு வேறு எங்கேபோய் உய்வது? கடலில் மரக்கலத்தில் ஒருகொம்பிலே யிருக்கும் பறவை எளிதிற்கடலைக்கடந்து விடமுடியும். அப்பறவை அம்மரக்கலத்தைவிட்டுப் பறந்து திரிந்தாலும் வேறு போக்கிடம் ஏது? மீண்டும் வந்து அம்மரக்கலத்தில் தானே கால் பாவி நிற்கவேண்டும். அவ்விதமே ஸம்ஸாரக் கடலைக்கடக்கும்போது திருத்தலங்களாம் மரக்கலங்களைப் பற்றி எளிதில் கடந்து விட முடியும். அத்தலங்களை விட்டு நம் திறமையால் கடலைக் கடக்க எவ்வளவுதான் முயன்றாலும் இயலாது என்பது இப்பாசுரத்தின் கருத்தாகும்.

இப்பாசுரத்தில் "வித்துவக்கோட்டு அம்மானே எங்குப்போய் உய்கேன்" என்னும் பகுதிக்குப் பெரியவாச்சான்பிள்ளை யருளிய வியாக்கியாந நயம் ரஸமயமாய்க் கல் நெஞ்சையும் கரைந்துருகும்படி செய்ய வல்லதாயுள்ளது. அதனைச் சிறிது அனுபவிப்போம்.

'அம்மான்' என்பதால் இறைவனுக்குள்ள தொடர்பு கருதப்படுகிறது. சொத்துக்கு உரியவன் என்னும் தொடர்பை இங்கே கருதுக. வித்துவக்கோட்டிலுள்ளவன் என்பதனால் அத்தொடர்பு பற்றித்தனதுசொத்தை அதாவது உயிரினங்களை நாடிவந்து எதிர்பார்த்து நிற்பது தோற்றுகிறது. சொத்துக்கு உடையவனாய், அந்தச் சொத்தை எதிர்பார்த்து நிற்பவனா யுள்ளவனை விட்டுவிட்டு வேறு எங்கே போவது? என்பது குறிப்பு. உரிமையற்ற வேறு தெய்வங்களிடத் போவதா? உரிமையிருந்தும் எதிர்பார்தும்

நிற்காத பரமபத நாதனிடம் போவதா? என்று ஆழ்வார் கேட்கிறார். வேறு தேவர்கள் நம்மை யாரேனும் பற்ற மாட்டார்களா என்று எதிர் பார்த்திருப்பினும் அவர்கள் உரிமையற்றவர்களாதலின் தொடர்பற்ற மற்றவர்களேயாகிறார்கள். பரமபத நாதன் தொடர்புடைய அம்மானேயாயினும் அடியார்கள் குழாங்களுடன் அந்தமில் பேரின்பத்து இருத்தலின் சொத்துக்களாகிய இவ்வுயிரினங்களை எதிர்பார்த்து நிற்கவில்லை. சேணுயர் வானத்திலேயே தேவபிரானாய் எழுந்தருளியிருக்கிறான். வித்துவக்கோட்டம்மானே வேட்கையும் உரிமையும் உடையவனாய் இருத்தலின், பற்றத்தக்கவன் என்பது கருத்து. இத்தகைய கருத்தமைந்த பெரியவாச்சான் பிள்ளை திருவாக்கினைக் கேட்போம் :- "ப்ராப்தனுமாய்ப் பசியனுமானவன் வாசலிலே வந்து சோறுசோறு என்னாநிற்க, அங்யராய் நிரபேக்ஷரானவர்களை உண்ண அழைப்பாரைப் போலே, உன்னை விட்டுப் பரமபதத்திலேயிருக்கிற அவாப்தஸமஸ்த காமனைப் பற்றுவோர்."

குலசேகரப் பெருமாள் திருப்பாசுரத்திலிருந்து நமக்குத் தேர்ந்த பொருளிதுதான்:— இவ்வுலக மெல்லாம் ஸம்ஸாரக் கடல், ஆங்காங்கே இறைவன் கோயில் கொண்டுள்ள திருத்தலங்கள் அக்கடலின்கண் காணப்படும் மரக்கலங்கள். அம்மரக்கலங்களைப்பற்றியே நாம் கரையேற வேண்டும். திருத்தலங்களைத் தவிர மற்ற இடங்களெல்லாம் எறி கடல் போல நம்மையலைக்கும்.

நல்ல மரக்கலத்திலிருந்தால் ஸம்ஸாரப் பெருங்கடலில் அலைப்புண்ணமாட்டோம். எளிதிற்கரையும் சேர்ந்து விடுவோம், திருப்பதிகளைப் பற்றியிருப்பதால் ஸம்ஸாரத்துன்பங்கள் நம்மைத் தாக்கமாட்டா. எளிதிற் பரமபதமும் போய்ச் சேர்ந்து விடுவோம்.

ஒருகால் ஸம்ஸாரம்அடிக்கொதிக்கஇராமாநுஜர் இறைவன்பால் உடனே வீடு வேண்டினாராம். கொதிப்பு நீங்கத் திருவரங்கத்திலேயே தங்கியிருக்குமாறு இறைவன் கூறிவிட்டானாம். இதனால் இம்மையில் அல்லலின்றி அமைதியாக வாழ்வதற்கு வழி திருப்பதிகளைப் பற்றியிருப்பதே என்றதாயிற்று. திருவரங்கத்திலேயே தங்கியிருக்குமாறு பணித்தது ஏனைய திருப்பதிகளுக்கும் உபலக்ஷணம் என்று கொள்க.

ஆக, நாம் ஸம்ஸாரக் கடல் கடந்து கரை சேர்ந்து பேரின்பமுற்று உய்வதற்கு உரிய இடமும், இம்மையில்அல்லலின்றிப் பேரின்ப வாழ்வோடு ஒத்த அமைதி வாழ்வைப் பெற்று, உய்வதற்கு உரிய இடமும் இறைவன் கோயில் கொண்டுள்ள திருப்பதிகளே என்றதாயிற்று.

இறைவனுடைய சொத்துக்களின் இரு வகுப்பும், லீலாவிபூதியிலுள்ள உயிரினங்களை விலகாது தன்னோடணைத்துக் கொள்ளஇறைவன் முயல வேண்டிய நிலையும், படைப்பு, வேதம் வழங்குதல், அவதாரம் செய்தல் என்னும் இறைவனுடைய முயற்சிகளும், இறுதி முயற்சியான அர்ச்சை நிலையும், அந்நிலையில் இறைவன் கோயில் கொண்ட தலங்களன்றி நமக்கு வேறு உய்யும்வழியில்லாமையும், திருத்தலங்களில் இறைவன் நம்மை எதிர்பார்த்து நிற்கும் நிலையும், தலங்களுக்கும் மரக்கலங்களுக்குமுள்ள ஒப்புமையும், கரை சேர்ந்து பேரின்பவாழ்வும், அமைதியுடைய இம்மைவாழ்வும் பெற்று, உய்வதற்குரிய இடம் திருப்பதிகளே என்பதும், இக்கட்டுரையிற் கூறப்பட்டன.

---

## செய்திச் சுருக்கம்

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் சார்பில், பழநியில் மேற்குக் கிரி வீதியில் புதியதாகக் கட்டப்பெற்ற பழநியாண்டவர் முடிக்காணிக்கை மண்டபம், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திரு ஆ. இராதாகிருஷ்ணன், M.A., B.L., அவர்களால், திறந்து வைக்கப் பெற்றது. மற்றும் தேவஸ்தான அலுவலகத்தின் பின்புறம் கட்டப்பெற இருக்கும் தேவஸ்தான ஊழியர்கள் குடியிருப்பு மனைக்கு அடிக்கல்லும், ஆணையர் அவர்களால் நாட்டப் பெற்றது. (29—3—68)

# சீவ - சிவ ரகசியம்

கவியோகி மகரிஷி திரு சுத்தானந்த பாரதியார்,
யோகசமாஜம், சென்னை-20.

1. அருள் விளையாட்டு

கார்முகிலில் மின்னல் கலந்தொளிர் கிறது. அதுபோல் அருட்சோதியிறைவன் அன்பர் உள்ளத்தில் கலந்துவிளங்கு கின்ருன். மௌனத்தின் ஆழத்தில் வேர் ஊன்றி நிற்கிறது. அதனின்று கிளைகள், இலைகள், மலர்கள், காய்கள், கனிகள் தழைத்து, மரம் என்ற பெயரால் விளங்கு கின்றன. அதுபோல் வாழ்க்கை என்ற மரமும் அவ்யக்த மாயையில் ஊன்றித் தழைக்கிறது. உயிர்கள் வினையுடல் பூண்டு விளையாடுகின்றன. தனுகரண புவனபோ காதிகளைத் தந்து, குணப்போர்களில் வாட்டி, உயிரைத் தூய்மைப்படுத்துகிறது. இறைவன் அருள் பெயர், வடிவ பேதங்கள் கோடிக்கணக்காக உள்ளன. அவற்றிற் கலந்தும், அவற்றிற்கும் அப்பால் நிற் கிருன், இறைவன். அவன் எதிலும் தாக் கற்ற தனிமுதல்; அவன் சந்நிதிக்கே ஐந்தொழிலும் நடக்கிறது.

2. சன்மார்க்கம்:

தூய நீலாகாயம்போல், பொன்னிளங் காலைபோல், அமைதியாக நிலவும் அவனையே சாந்தலிங்கம் என்கிருேம். அந்தச் சாந்தலிங்கத்தை எங்கே காண லாம். அவன் பெயர் முழங்கும் பேர்-ஊர் ஆகிய சிதாகாசத்தில் காணலாம். அப்படிக் காண்பதுதான் ஞானசித்தி. அந்த சித் திக்கு வழிகாட்டுவதே சன்மார்க்கம். சத் என்ருல் உள்ளபொருள், இருப்பது, உண்மை. மார்க்கம் என்ருல் வழி. நெறி. பரிசுத்தமான மகா துரியநிலையே இயல் பாகக் கொண்ட சிவபெருமானை அடையும் வழிதான் சன்மார்க்கம். அதைச் சிவநெறி, சுத்தாத்வைதம், அருள்வழி என்றும் சொல்லலாம். ஆணவமற்ற அன்புடன் காமக்களிம்பற்ற சித்த சுத்தியுடன், கன்ம பாச மற்ற சுதந்தரத்துடன், எல்லாம் சிவம் என்ற சமத்துவத்துடன் ஆன்மா இறை வன் அருளுக்கு வணங்கி, அடங்கி, பணிந்து நடத்தலே வணக்கமாகும். இந்த வணக்கம் கைகூடினல், மனம் இணக்க மாகிச் சன்மார்க்கத்தில்முன்னேறும். இந்த வணக்கத்திற் கிசைந்த மந்திரமே சிவாய நம; சிவனுக்கு வணக்கம் என்பது. இந்த மந்திரசித்திக்கே சரியை, கிரியை ஆகிய சாதனங்கள் ஏற்பட்டன ஆலயப்பணி, ஆருயிர்ப்பணி, ஆசான்பணிஆகிய மூன்றும் ஆண்டவன் பணியெனச்செய்தலே சிறந்த வணக்கமாகும். இதுவே சரியை, கிரியை என்னும் சாதனமாகும்.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா!
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு,
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்,
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலரு நில்லே

என்று அப்பர் கட்டளையிடுகிருர். தலையே நீ வணங்காய், கண்காள் காண் மின்களோ, நெஞ்சே நீ நினையாய், என்று அங்கங்களுக்கெல்லாம் வணக்கத்தைப் புகட்டுகிருர் அப்பர். சிவனை வணங்கவே தமது ஞானம், கல்வி, நன்னெறி என்றும் காட்டுகிருர் அப்பர்.

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நான் அறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

முதலில் அறியவேண்டியது ஐந்தெழுத்தை; புரியவேண்டியது ஜபசாதனம்; சம்பந்தர் பஞ்சாட்சரத்தின் பெருமையைச் சொல்லுகிருர்.

3. ஐந்தெழுத்து:

காதல் ஆகிக் கசிந்துகண்ணீர் மல்கி
ஓதுவார்தம்மை நன்னெறிக் குய்ப்பது,
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது,
நாதன் நாமம் நமச்சி வாயவே.

மணிவாசகர், ''நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க'' என்றே திருவாசகத்தைத் தொடங்குகிருர். ''ஐந்தில் இறைவன் அருள் பெறலாமே'' என்ருர் திருமூலர். இதன் பொருளை நன்ருக அறிந்து ஜபம் செய்யவேண்டும். சிவம் என்ருல் இன்ப முதல்வன், சீவர்களை மாசறுத்து முக்தி கொடுக்கும் சுத்த சுதந்தர சமத்துவ சத்திய சாந்த பரமாத்மன் என்பது பொருளாகும். அவனே ஆக்கும்போது அயன், காக்கும் போது மால், நீக்கும்போது உருத்திரன், மறைக்கும்போது மகேசன், அருளும்போது சதாசிவன். இந்த ஐந்தொழில்களையும் கடந்த தன்மய நிலையில் சிவன் சுத்த பரமாத்மனுவான். சுத்த சிவம் ஒன்றே பரம்பொருள். அதுவே நமது கதி.

உருவாகி, உலகாகி உள்ள மாகி
உள்ளத்தே உணர்வாகி, உணர்வின் ஓங்கும்
அருவாகி, அவனவளும் அதுவும் ஆகி
அம்மையப்பன் ஆகி, நல்அருளால் எய்தும்
குருவாகிப் பலகோடி குணங்க ளாகிக்
குணதொந்த மில்லாத கொள்கையாகிக்
கருவாகிச் சின்மயமாம் காட்சி யாகும்
கடவுளே நீயல்லாற் கதியும் உண்டோ?

4. நானும் அவனும்:

அகங்காரமில்லாதவர் அகத்தே அப்பொருள் ஒளிரும்.

எனது எனது என்னல் இடராகும், என்றும்
அவன் அது என்ன அருள்.

இதுதான் சாதனப்படியில் முதற் பயிற்சியாகும். ஆணவத்தை ஆண்டானுக்கு ஊணுக்குதலே நமச்சிவாய மந்திரத்தின் பயனுகும். இந்த மந்திரத்தில், நான் என்ற முனைப்பேயில்லை. சிவனுக்கு வணக்கம் என்றேயிருக்கிறது. ஏனெனில் இறைவன அருளின்றி உயிர் உணராது, அறியாது. அவனின்றி நானில்லை.

என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும் முன்னேதும் அறிந்திலன்
என்னைத் தன் அடியானென்று அறிந்ததும்
தன்னை நானும் பிரான் என்றறிந்தெனே.

''நானேயோ தவம் செய்தேன், சிவாய நம எனப்பெற்றேன்; சிவபெருமான் தானே வந்து என் உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்'' என்கிருர் மாணிக்க வாசகர். ஆணவம் அணு அணுவாகத் தேயத் தேய அருள் ஆன்மாவை அணுகும். ஒன்றுமில்லாத வறியன் செல்வன் கை பார்த்தே பிழைக்கிருன். மாணவன் ஆசிரியர் அடிபணிந்தே அறிவைக் கற்கிருன். அறியா ஆன்மா முற்றறிவனுன சுத்த சிவத்தை அடைக்கலம் புகுந்து, பணிந்தே அருள் பெற்றுய்யவேண்டும். அதற்குப் பெருந்துணையாவது பஞ்சாட்சர ஜபம். இது வேத மந்திரம். யசுர் வேதத்தில் ''நம: சிவாயச சிவதராயச'' என்று இம் மந்திரம் வருகிறது. புருஷசூக்தத்தில் ''தத்ப்ரஹ்ம தத்சிவ:'' என்று வருகிறது. அமங்கலங்களைப் போக்கும் சுத்த மங்கள மூர்த்தியே சிவன். அவன் அருளின்றி ஆன்மா தனது திறமையால் முத்திபெற முடியாது என்கிறது ஆகமம்.

5. திரோதசக்தி.

ருக்வேதம் ருத்ரன், துன்பந் துடைப்பவன் என்கிறது; யஜுர் வேதம் சிவன் இன்பமங்களங் கொடுப்பவன் என்கிறது. நமச்சிவாய என்பது தூல பஞ்சாட்சரம்; சிவாய நம என்பது சூக்கும பஞ்சாட்சரம். மாணிக்கவாசகர் நமச்சிவாய வாழ்க என்று தொடங்கிச் சிவாய நம எனப்பெற்றேன் என்கிருர். திருமூலர்,

தெளிய ஓதிச் சிவாய நம என்னும்
குளிகை யிட்டுப்பொன் ஆக்குவன் கூட்டையே.

என்கிருர். ஒளவைப்பிராட்டியும் சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை என்ருர். சி–சிவன், பதி. வா–வாலை, சக்தி, அருள். ய–உயிர், ஆன்மா, சீவன், பசு. ந–உயிரை மறைக்கும் திரோத சக்தி, மாயை. ம–மமதை, ஆணவம், கன்மம்,

மாயை ஆகிய மலங்கள். ஆன்மா சிற்றறிவுடையது. அதைத் திரோத சக்தி மறைக்கிறது. மும்மலங்கள் பந்திக்கின்றன. பாசம் வலேபோட்டுப் பின்னி நிற்கிறது. மனமாயம் மேகம்போல் மறைக்கிறது. உயிர், எனது, யான் என்னுது, திருவருட் சக்தியையே நினேந்து, அருள்பெற்றுச் சிவனே அன்பு செய்து அறியவேண்டும்.

சிவன் சக்தி சீவன் செறுமல மாயை
அவஞ் சேர்ந்த பாச மலம்ஐஞ் தகலச்
சிவன் சக்தி தன்னுடன் சீவனர்சேர
அவம் சேர்ந்த பாசம் அணுகிநில்லாவே.

(திருமூலர்)

திரோதம், சுத்தம், அசுத்தம், ஆணவம், கன்மம் என்ற ஐந்து மாயமலங்களும் அகன்ருல் சிவம் விளங்கும். சிவனுடைய பஞ்ச முகங்களேயும், தியானித்தால் ஐந்து மாய மலங்களும் நீங்கும். தத்புருஷம் பிரணவஜோதி முகம். அது வேதப் பொருளே உணர்த்தும். அகோரம் மௌனப் பொலிவுடன் அருள் நிலவும், மலங்களே எரிக்கும். வாமதேவம் பரம சாந்தத்தை நல்கும். ஸத்யோஜாதம் யோகசித்தியையும்,சகலசித்தியையும்தரும். ஈசானம்.காந்த சக்தியும், ஞானக்கனலும், வீரத்திறனும் அளிக்கும். பஞ்சாட்சரத்தில் பஞ்சமுக சிவதரிசனம் எய்தும்.

6. அதிசூக்கும பஞ்சாட்சரம்.

நமச்சிவாய என்பது முதலில் ஆன்மாவின் பணிவைத் தெரிவித்துச் சிவனின் பெருமையை நினேக்கும் மந்திரம். சிவாய நம: என்பது முதலில் சிவனின் பெருமையை உணர்ந்து முற்றறிவனை அவனேச் சிற்றறிவான்மா சரண் புகுதலேக் குறிக்கும். சிவயசிவ என்பது அதிசூக்கும பஞ்சாட்சரம். இதில் முதலும் சிவம், முடிவும் சிவம். சிவம் போக்கு வரவற்ற, ஆதியந்தமற்ற, நிறைபொருள். ஆன்மாவின் முதல்வனும் சிவன். அதை மாசறுத்துச் சுத்தான்மாஆக்கி, அருளேற்றி, அறிவொளி துலக்கி ஆட்கொண்டு தன்மயமாக்கும் இறைவனும் சிவன். ஆன்மா முதலிலும் முடிவிலும் சிவச்சார்புடையது. எல்லாம் சிவனில் தொடங்கிச் சிவனில் முடியும் என்பதை அதிசூக்குமபஞ்சாட்சரம் குறிக்கும். இம்மந்திரத்தில் பாசத்திற்கும் மும்மலத்திற்கும் இடமில்லே. ஏனெனில் இதுமலபரிபாகம் அடைந்த அருளாளர் ஜபிப்பது.

சிவாயநமவெனச் சித்தம் ஒடுங்கி
அவாயம்அறவே அடிமையதாக்கிச்
சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயம் கெடநிற்க ஆனந்தம் ஆமே.

(திருமூலர்)

7. பிரணவ பஞ்சாட்சரம்.

நான் செய்வது பிரணவ பஞ்சாட்சரமும், அதைத் தொடர்ந்த தசாட்சரமும் ஆகும். அது எனக்கு நல்ல சித்தியைத் தந்தது. ஓம் சிவம்என்பதே பிரணவ பஞ்சாட்சரம். ஓம் என்பது அ, உ, ம் ஆகிய மூன்றெழுத்தின் தொகுதி. இம் மூன்றுடன் சிவ சேர்ந்து ஐந்தாகும். அ என்பது அவன், பதி. உ- உயிர், ம்-உலகம், பாசம். முப்பொருள் முதல்வன் சிவன். உயிர் பாசம் நீங்கிப் பதியைக்கூடிச் சிவத்வம் அடைந்து இன்புறும் ஓங்காரமே பரம்பொருளின் வடிவம். ஆகாசம், பிரம்ம சரீரம் என்னும் உபநிஷதம். ஆகாசம் ஸப்ததன்மாத்திரை, ஒலி வடிவம். ஒலிகளின் மூலம் ஓம்; ஆதலால் ஓங்கார சிவத்யானம் யோகிகளுக்கு நலமாகும். சகலர் தூலசூக்குமபஞ்சாட்சரத்தை ஜபிக்க வேண்டும். பிரளயாகலர் தியானத்தால் அதிசூக்கும பஞ்சாட்சரத்தை உபாசிக்க வேண்டும். விஞ்ஞானகலர் மனேலயத்தால் உள்ளடங்கி, பிரணவ பஞ்சாட்சரத்தை ஜபிக்க வேண்டும். பிரணவ சித்தியாகிப் பரநாதப்பண் கேட்டதும், சிவோகம் என்று சமாதியால் உபாசிக்க வேண்டும். இதனுல் சீவன் சிவத்வம் பெறும். தத் அது என்ற சிவம் ஆன்மாவை அருட்சக்தியால் முற்றிலும் கவர்ந்து தன்மயமாக்கும். த்வம் என்பதற்கு தன்மை என்ற பொருளாம். குருத்வம், சிஷ்யத்வம், ப்ரம்மத்வம், நரத்வம், தேவத்வம் என்று வருவதால் உணர்க. பசுத்வம் பாசமகன்று பரத்வம் ஆதலே சிவோகம் பாவனேயின் பயனுகும். இந்தச் சித்தி துரிய நிலேயில்

எய்தும். இதற்குமேல் மகாதுரிய நிலை உண்டு. அதில்சிவமயம்பாவனைசித்திக்கும். சிவம் எங்கும் தானாக விளங்கும். அகண்ட ரஸம் புலனாகும். இந்த மூன்று பாவனை களே படிப்படியாக யோக சித்தியும், ஞான சித்தியும், துரிய சித்தியும், மகாதுரிய சித்தியும் தந்து, சுத்தாத்மாவைச் சிவாத்மாவாக்கி, ஸர்வாத்ம சிவத்வமும் நல்கும். இந்த மூன்று சித்திக்கும் உகந்த மந்திரம் ஓம் சிவம், சிவோஹம் சிவமயம் என்பது. இது தசாட்சரி, பதின் எழுத்தது. பரம்பொருளின்உன்னதத் தன்மை சுத்தம், தூய்மை. தூய்மையே வாய்மை. சுத்தன் என்பது சிவன், விஷ்ணு, பிரம்மா, புத்தன், அருகன், பரமபிதா, அல்லா, ரசூல் ஆகிய எல்லாச் சமயக்கடவுளுக்கும் பொருத்த மான பெயர். சுத்தசிவம் உள்ள பொருள்' உள்ளபடியிருக்கிறது. அதன் சக்தியே இச்சையாகவும், கிரியையாகவும், ஞான மாகவும் கிளர்ந்து, உலகில் அருளாடல் புரிகிறது. சிவம் தந்தை, அருட்சக்தி தாய். அதனாலேதான் சித்தாந்தம் சக்தி சிவமாக, அம்மையப்பனாக, மங்கைபாகனாக இறைவனை வழிபடுகிறது. சிவம் சுத்த ஜோதி, அதன் சக்திக் கதிர்களே உலகாக விளையாடுகின்றன. அதனால் இறைவனைச் சுத்த சக்தியாகப் பாவிக்கிறோம். ஓம் சுத்த சக்தி என்பது இயல்பான தத்துவ விளக்கம். இதனுடன் தசாட்சரத்தையும் சேர்த்துப் பூர்ண சிவரகசியமந்திரத்தை மகாதுரிய சித்தர்கள் உபாசிக்கத் தகும்.

—தொடரும்.

## செய்திச் சுருக்கம்

### திறப்புவிழா.

சென்னை திருமயிலையில், கபாலீசுவரர் கோயிலின் சார்பில் அமைக்கப்பெற்றுள்ள வாயிலார் நாயனார் நகரின் திறப்பு விழா, மிகவும் சிறப்புற நடைபெற்றது. அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதா கிருஷ்ணன், எம்.ஏ.,பி.எல்., அவர்கள் தலைமை தாங்கினார்கள். அறநிலைய அமைச்சர் மாண்புமிகு, திரு. இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்கள், நகரினைத் திறந்து வைத்துச் சிறப்புரை நிகழ்த்தினார்கள். ஆணையாரின் நேர்முக உதவியாளர் - தலைமையலுவலகத் துணையாணையர், திரு. வெங்கடாசலம், பி.எஸ்ஸி., பி.எல்., அவர்கள் கலந்து கொண்டார்கள். அறங்காவலர்கள் திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார் அவர்களும், திரு. பி. எஸ். அண்ணாமலை முதலியார் அவர்களும் முறையே வரவேற்புரையும் நன்றியுரையும் நவில, விழா இனிது நிறைவெய்தியது. பெருமக்கள் பலர் வந்திருந்து விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (2—4—68)

—ஆசிரியர்.

### வெள்ளோட்ட விழா.

திருநெல்வேலி ஸ்ரீதொண்டர்கள் நயினார் கோவிலில் புதிதாகச் செய்யப்பெற்ற ரிஷபவாகனத்தின் வெள்ளோட்டவிழா, அறநிலைய ஆட்சித்துறையின் மதுரைத் துணை ஆணையர் திரு. கே. இராஜா, பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில், சிறப்புற நிகழ்ந்தது. உதவி ஆணையர் திரு. எம். வீரபாகு, பி.எஸ்ஸி., பி.எல்., விழாவைத் தொடக்கி வைத்தார். திருப்பணிக் குழுத்தலைவர் திரு. ந. சு. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் அனைவரையும் வரவேற்றார். திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் பாராட்டுச் சொற் பொழிவு நிகழ்த்தினார்கள்: (7—3—68)

—ஆசிரியர்.

# ஸ்ரீராமாயண ரஸப்ரவாகம்

(மகாவித்துவான். பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

இராமன் திடவிரதன்.

வான்மீகி நாரத ஸம்வாதத்தில் ''கோ த்ருடவ்ரத'' என்கிற ஆறுவது வினு இனி விவரிக்கப்படுகின்றது. திடமான விரத முடையவன் யாவன்? என்று வினவுகின்ருர் வான்மீகி முனிவர். ஒருகாரியத்தைச் செய்து முடிக்கவேணுமென்கிற சங்கற்பத்திற்கு விரதம் என்று பெயர். அந்த சங்கற்பம் சிறிதும் தளரரமல் திடமாக இருக்கப் பெறுவது ஒரு சிறந்த குணம். ஏகாதசியன்று உபவாஸ மிருத்தல் முதலியன உலகில் நம் போல்வார்க்கு விரதமெனப்படும். ஆனல் நாம் எதிலும் உறுதியுடையோமல்லோம். ஒரு பணியைத் தொடங்கும்போது அதில் மிகமிக உற்சாகம் கொண்டிருப்போம்; சில நாள் கழிந்தவாறே அதில் தளர்ச்சியுண்டாகி மற்ருெரு பணியில் கைவைப்போம். அதிலும் அப்படியே யாகும். ஆகவே, ஒன்றிலும் உறுதியில்லாதவர்கள் நாம். இராமபிரானே வென்னில் எதிலும் மிக்க வுறுதியுடையவன். இவ்வரிய பெரிய குணத்தை இங்கு நாம் விரிவாக அநுபவிக்க விரும்புகின்ருேம்.

இராமனுக்கு விரதம் அடியாரைக் காப்பதே :

இராமன் எந்தக் காரியத்தில் திடமான விரத முடையவன் ? என்று கேள்வி வரும். எல்லாக் காரியங்களிலுமே திண்ணமான ஊக்கமுடையவனயினும், இராமன் முக்கியமாகக் கொண்டகாரியம் ஒன்றேயாகும். அதுதான் சரணுகத பரித்ராணம் என்பது. பிராட்டியும் இராவணனை நோக்கி உபதேசம் செய்யுமிடத்து ''விதிதஸ்ஸஹி தர்மஜ்ஞ: சரணுகத வத்ஸல:'' என்று கூறினளாதலால் அடைக்கலம் புகுந்தவர்களை அஞ்சலென்று கூறி அபயமளித்து அநிஷ்ட நிவ்ருத்திகளையும் இஷ்டப்ராப்திகளையும் செய்வித்துக் காத்தருள்வதே இராமனுக்கு இவ்வவதாரத்தில் மிகமுக்கியமான காரியமாயிருந்ததென்று நன்குணரலாகிறது. ஸ்ரீ வேதாந்த தேசிகனும் அபயப்ரதானஸாரத்தின் முகப்பில் ''அகிஞ்சநர்களான ப்ரபன்னர்களைத் தன் பேருகக் காத்தருள்வதில் தீக்ஷை கொண்டு அதுவே பெரும்புகழாக விளங்குமவன் இராமபிரான்'' என்றருளிச் செய்திருப்பது குறிக்கொள்ளத்தக்கது. அடியார்களைக் காத்தருள்வ தென்பது கிடக்கட்டும்; அதில் திடமான உறுதியையுடையவன் இராமன் என்பதே இங்கு விஷயம். இதைப்பற்றி ஸ்ரீராமாயணத்தில் இரண்டிடங்களை முக்கியமாக எடுத்துக்கொள்வோம். ஆரணிய காண்டத்தில் 6, 9, 10 ஆகிய மூன்று ஸர்க்கங்களின் விஷயங்களை முதலில் நிரூபணம் செய்வோம். அங்கு ஆறுவது ஸர்க்கத்திலுள்ள கதையாவது: சரபங்கமுனிவரது ஆச்ரமஞ் சென்றிருந்த இராமபிரான் அம்முனிவர் சுவர்க்கஞ் சென்றபின் அங்குள்ள முனிவர்களால் இங்ஙனம் வேண்டப்பட்டான்; ''ராமா! நீ தேவேந்திரனைப் போல் இந்நிலவுலகுக்கெல்லாம் நாதனயிருக்கின்றனை; சரபங்கமுனிவரை அனுக்கிரகித்த கீர்த்தியும், விராதனைக் கொன்ற வீரமும், உன்பால் சிறந்து விளங்குகின்றன. தந்தை சொற்பேணி அரசாட்சிப் பெருஞ் செல்வத்தை வெறுத்ததுமன்றி, பரதன் வந்து மிகமிக வேண்டினவிடத்தும் மனவூக்கம் குன்ருதிருக்கின்றனை; உன் பக்கல் தருமமும் சத்தியமும் தழைத்தோங்குகின்றன. சரணுகத ரட்சகனை உன்னிடத்தில் ஒரு விண்ணப்பஞ் செய்கின்ருேம்; வருத்தம்தாங்கி நிற்கமுடியாமல் இது சொல்லுகிருேம். இங்கு வந்திருப்பவர்கள் யாவரும் அந்தணர்களே; இவர்கட்கு நீ நாதனயிருந்தும் அந்தோ! இவர்கள் அநாதர்கள் போல் மிக நலிவுறுகின்றனர்; இவர்களது தேகங்கள் அரக்கர்களால் அடிபட்டிருப்பதைக் காண்பாயாக!

இங்ஙனம் வனத்தில் அரக்கர்கள் புரியும் நலிவுகளை நாங்கள் பொறுத்திருக்கவும், பரிகரிக்கவும் வல்லமையற்றிருக்கின்றோம்; ராமா! இதற்காகவே நாங்களனைவரும் உன்னைச் சரணமடைகின்றோம்-அரக்கர்களிடமிருந்து எங்களைக் காத்தருள்வாய்! என்று.

தண்டகாரணிய முனிவர்கட்கு அபயமளித்தது.

இவ்வளவுங் கேட்ட இராமன் மிகவும் மனமிரங்கி அவர்களெல்லாரையும் நோக்கி 'முனிவர்காள்! எனக்கு நீங்கள் கட்டளையிட வேண்டுமேயல்லது என்பால் இங்ஙனம் வேண்டலாமோ? உங்களது கஷ்டங்களைத் தீர்ப்பது எனது சொந்தப் பிரயோஜனமாகும். தந்தை சொற்பேணுதலென்னும் வியாஜத்தினுல் உங்கள் காரியத்தை நிறைவேற்றுதற்கே இவண் யான் விடைகொண்டிருக்கின்றேன்; உங்கட்கு இன்னல் விளைக்கின்ற அரக்கர்களையெல்லாம் நான் வதஞ்செய்தொழிப்பது திண்ணம்' என்று சொல்லி அவர்கட்கு அபயமளித்துச் சென்றனன்-என்பது ஆருவது ஸர்க்கத்திலுள்ள கதை.

இராமன் அளித்த அபயத்தைப் பிராட்டி மறுத்தல்.

பிறகு ஒன்பதாவது ஸர்க்கத்திற் கதை யாவது,-பிராட்டி இராமனை நோக்கிச் சொல்லலுற்ருள்; "நாதா! உலகில் மூன்று தீய செயல்கள் மிகக் கொடியனவாகச் சொல்லப்படுகின்றன; பொய் சொல்லுதல், பிறர் மனைவியை வேட்டல், பகையின்றிப் பரஹிம்ஸை செய்தல் என்னும் இம் மூன்றும் மிகக் கொடிய செயல்களாம்; இவற்றுள் முதலிரண்டு செயல்களை நீர் நெஞ்சாலும் நினைக்கமாட்டீரென்பதை நன்கறிவேன்! நீர் சத்தியசந்தர், ஏகபத்தினி விரதமுடையீர்; ஆனுல், மூன்ருவதான தீய செயல் இப்போது உம்மிடத்தில் இடம் பெறத் தொடங்கியிருப்பது மிக வருந்தத் தக்கது. நீர் முனிவர்களைக் காக்கவேண்டி அரக்கர்களனைவரையும் கொன்ருெழிப்பதாக வாக்குறுதியளித்தீர்; இதற்காகவே காட்டுக்கு வந்திருப்பதாகவும் தெரிவித்தீர்; இதுபற்றி நான் மிக வருந்துகிறேன். அரக்கர்கட்கும் உமக்கும் நேராகப் பகையொன்றுமின்றியிருக்க, அவர்களை நீர் கொல்ல விரும்புவதை நான் தருமமெனக் கொள்ளகில்லேன். முனிவர்கட்குத் தீங்கிழைக்கும் அரக்கர்களைக் கொல்வது தருமமே யாகுமென்று நீர் கருதக்கூடும்; நீர் ராஜபதவியை வகித்திருந்தால் அப்போது இது தருமமாகும்; க்ஷத்திரிய விருத்தியைக் கைப்பற்றியிருக்கும் உமக்கு இது தருமமாகுமோ? "ஆழிசூழுலகமெல்லாம் பரதனே யாள நீபோய்த் தாழிருஞ்சடைகள் தாங்கித் தாங்கருந்தவமேற் கொண்டு பூழிவெங்கானம் நண்ணிப்புண்ணியப்புனல்கள் ஆடிவா" வென்று நியமிக்கப்பட்டுக் கானகம் வந்திருக்கின்ற நீர் ஆயுதத்தைக் கையால் தொடுவதே உரியதன்று; அரண்யவாசத்திற்குத் தவம் புரிதலே தகுந்தது. ஆயுதம் தரிப்பதால் கோபமுண்டாகிப் பரஹிம்ஸை செய்ய நேரிட்டுப் பாபமே சம்பவிக்கும். தருமநெறியிலே விருப்பமுடைய நீர் தவஒழுக்கத்தை மேற்கொள்வதே நலம்; உமக்குத் தெரியாததொன்றில்லை; பெண்ணுய்ப்பிறந்த நான் உமக்குத் தரும முணர்த்துவதென்பது தகாததாயினும் உம்மீது இருக்கும் அன்பினுல் தெரிவித்துக்கொண்டேன்; நீர் இதனைத் தம்பியோடும் நன்கு ஆலோசித்து விருப்பமான படி செய்வீராக"— என்று.

பிராட்டிக்குப் பெருமாள் உரைத்த மறுமாற்றம்.

இனி பத்தாவது ஸர்க்கத்தில் பிராட்டிக்கு மறுமாற்றம் உரைக்கின்ற இராகவன் சொன்ன சொற்களில், மிகவும் ஸாரமான ஒரு ச்லோகத்தையே இங்கெடுத்துக் காட்டுவோம்; (ஆரண் 10-19) ஆச்ரிதரக்ஷணத்தில் இராமபிரான் திடமான விரதமுடையவனென்பதை இந்த ச்லோகம் மிக நன்ருக எடுத்துக் காட்டுகின்றது. நம் போன்ற அகிஞ்சநர்கள் நிச்சலும் சிந்தை செய்யவேண்டிய சுலோகமிது. இந்த சுலோகத்தின் பொருளாவது: "ஸீதே! நான் என்னுயிரை விட்டாலும் விடுவேன். உன்னையும் இலக்குமணனையும் விட்டாலும் விடுவேன்; ஆனுல் ஒருவருக்குப் பிரதிக்கினை செய்து கொடுத்து அதைத் தவறுவதென்பது முடியாது; அதிலும் பிராமணர்கட்குச் செய்த பிரதிக்கினையை எள்ளளவும் தவறமாட்டேன்" என்பதாம். இதற்குமேல் மற்ருெரு ச்லோகமும் உள்ளது.

(10—22)

'ஸீதே! நான் செய்ய நினைக்கும் தருமத்தையே நீயும் சங்கற்பிக்க வேண்டும்; வேருென்றை நீ நினைக்கலாகாது; இப்படிப்பட்ட தருமத்தை அனுட்டிக்கத் துணை புரிவதற்காகவேயன்ருே உன்னை நான் மணம் புரிந்துகொண்டேன்; ஆகவே என்

னுயிர்க்காதலியான நீ என்வழி யொழுகுவதே உற்றது''—என்பது இந்த சுலோகத்தின் கருத்து.

ஆக, இராமபிரான் ஆச்ரிதரக்ஷணத்தில் திடமான உறுதி உடையவன் என்பது, இக்கதாசந்தர்ப்பங்களினுல் நன்கு விளங்கிற்று. மேல் யுத்தகாண்டத்தில் விபீஷண சரணுகதி ப்ரகரணத்திலுள்ள கதாசந்தர்ப்பத்தைக்கொண்டும், இதனை நிலை நாட்டுவோம்.

விபீஷண கதாப்ரஸ்தாவம்.

இராவணனுடைய மந்திராலோசனைக் குழுவில் விபீடணன் அவனுக்குப் பலவாறு இதோபதேசங்கள் செய்தும் பலிக்கக் காணுமையாலே, இராமபிரானுடைய திருவடி நிழலிலே யொதுங்கித் தான் வாழ்ந்து போக நிச்சயித்துத் தன்னெடொத்த அன்புடைய நால்வருடன் கிளம்பிவந்து வானத்திலே நின்று வானர முதலிகளை நோக்கி இராமபிரான் தன்னை அங்கீகரிக்குமாறு செய்யவேணுமென்று பெருமிடறு செய்து ஓலமிட, அப்போது, வானர வீரர்களில் சுக்ரீவன் முதலானுர் இவனைச் சேர்த்துக் கொள்வது தகுதியற்றதென்று வலிதாக ஆக்ஷேபிக்க, அப்போது இராகவன் தனக்குள்ள ஆச்ரிதரக்ஷண பக்ஷபாதத்தையும் அதில் திடமான விரதத்தையும் எடுத்துரைக்குந் திறன் மிக வியக்கத்தக்கது. அதனை இங்குக் காட்டுவோம்.

விபீடணன் பக்கல் காட்டிய உறுதி.

அடைக்கலம் புகுந்த இவ்விபீஷணன் தக்ககாலத்தில் வந்திலனென்ருவது, புதியவனுக வந்தான் என்ருவது, மகா பாதகி என்ருவது, கைவிடத் தக்கவனல்லன் என்பதைக் கூறத் தொடங்கின இராமன் இங்ஙனே கூறுகின்ருன்;—இராவணன் சீதையைக் கவர்ந்து சென்று பல நாள்களாகியும், முன்னமே நம்மிடம் வந்துசேராமல் நாம் எதிரியோடு போர்புரியத் தொடங்கும் இச்சமயத்தில் நம்மிடம் வந்துசேரும் இவ்விபீடணன் நம்முடன் கலந்தவன்போன்றிருந்து நமது மருமங்களை யெல்லாம் உணர்ந்து கொண்டு, நம்மை வஞ்சனையாற் கொல்லுதற்காகத்தான் வந்தானே என்று நீங்கள் கருதுவதற்கிடமில்லை. நன்மதி கூறித் தமையனை எப்படியாவது திருத்தலாமென்று இத்தனை நாளும் பலபடி முயன்று பார்த்தும் அது பலியாமற்போனதுமன்றி அவ்விராவணன் தன்னைக் கடிந்து கூறுதலுஞ் செய்யவே, இவன் தான் வாழவெண்ணியே நம்மிடம்வந்து சேர்ந்தனன்; இவனை நான் ஒருவிதத்திலும் கைவிடகில்லேன்; இவனை அங்கீகரியாது கைவிட்டால்தான் நமக்கு நல்வாழ்வும் வெற்றியுமுண்டாகுமென்று தேறினுலும் அஃது எனக்கு உடன்பாடன்று; சரணுகதனை இவனை அங்கீகரிப்பதனுல் நமக்குத் தோல்வியே உண்டாவதானுலும், அதற்குமேலும் மரணமே நேர்வதானுலும் அதுவே எனக்கு உடன்பாடாகும். நமக்கு வெகுநாளைப் பழக்கம் இல்லாமல் இப்பொழுதுதான் புதியவனுக வந்தானென்ருவது மகாபாதகியென்ருவது குறை கூறி இவனை அங்கீகரியாது தள்ளி விடுதலை ஒருகாலும் நான் மனதிற் கொள்ளேன்; இவன் எப்படிப் பட்டவனுயிருந்தாலும் சரணமென்ற சொல்லைச் சொன்னதுவே காரணமாக, நெடு நாளைப் பழக்கமுள்ள நண்பன் போல விரும்பத்தக்கவனே யாவன். அங்கீகரிக்கப்பட்ட அவன் ஒருகால் நமக்குத் தீங்கிழைத்தானுனலும் அதனுல், சரணுகதனுக்கு அபயமளித்தோமென்னும் புகழ் நம்மை விட்டகலாது; ஆகவே, இவனை நான் கைவிடகில்லேன்.

இராமன் கூறிய சிபிச்சக்கரவர்த்தியின் இதிகாசம்.

அன்றியும், எங்கள் குலத்து இதிகாசமொன்று கேண்மின்; சிபிச்சக்கரவர்த்தி அரசாளுகையில் அவனது மேன்மைக் குணத்தைப் பரிசோதிக்கும் பொருட்டு இந்திரன் பெரும் பருந்தாகவும், யமன் சிறு புருவாகவும் வடிவமெடுத்து அப்புருவைப் பருந்து துரத்திவர, அது சக்கரவர்த்தியைச் சரணடைய, அன்னுன் அதற்கு அபயமளிக்க, பின்னே வந்த பருந்து 'என் இரையைக் கொடுத்திடு' என்று கேட்க, மன்னவன், 'அடைக்கலம் புகுந்தவரை ஆதரியாது விடுதல் அதிபாதகமாதலால் இதையன்றி எதைக் கேட்டாலுங் கொடுப்பேன்' என்ன, பருந்து 'இந்தப் புருவின் எடையளவு தசையை உன் உடம்பினின்று அரிந்துகொடு' என்ன, வேந்தன் சம்மதித்து உடனே தனது உடம்பிலுள்ள உறுப்புக்களை யெல்லாம் ஒவ்வொன்ருக அறுத்து வைத்தும் எடை ஒவ்வாதது கண்டு தானே தராசுத் தட்டிலேறி எடையை நிறைக்க, உடனே அத்தேவர்கள் ப்ரத்யக்ஷயமாகிச் சக்ரவர்த்தியை மிகக் கொண்டாடி அவனது உடம்பு முன்போல நிறைவுறும்படி வரமளித்துப் போயினரென்று கேட்டிருந்ததுண்டு! (தொடரும்)

# புருஷசூக்தமும், அதன் பொருட்சிறப்பும்

'வேதார்த்த ரத்னகரம்'
ஸ்ரீராமாநுஜதாதாசாரிய சுவாமிகள், கும்பகோணம்.

புருஷ சூக்தமென்பது எல்லா வேதங்களிலும் ஓதப்படுகிறது. ஆனல் சிற்சில மாறுதல்களை நாம் அங்குப் பார்க்கிறேம். ருக்வேத புருஷ சூக்தத்தில் பதினறு ருக்குகள் இருந்து வருகின்றன. ஸாம, அதர்வ வேதங்களிலும், அநேகமாக 16 ருக்குகளே இருந்து வருகின்றன. ஆனல் சுக்ல யஜுர் வேதத்தில் 16 ருக்குகளுக்கு மேல் பல ருக்குகள் படிக்கப்படுகின்றன. எது எப்படி இருந்தாலும், புருஷ சூக்தத்தின் அடிப்படைக் கருத்துகளில் மாறுதல் கிடையாது.

புருஷ சூக்தத்தில் கடவுள் புருஷனகவே சொல்லப்படுகிருன். விஷ்ணு, சிவன், நாராயணன் என்ற வார்த்தைகள் கிடையாது. ஆனுலும் புருஷ சூக்தத்திற்கு நாராயணனேடு ஸம்பந்தம் இருப்பதாகப் புராதனமான கொள்கை இருந்து வருகிறது. சைவ வைஷ்ணவ சமய சர்ச்சைக்கு அப்பாலிருக்கும் ஆபஸ்தம்பர் முதலியவர்கள், புருஷ சூக்தம் நாராயணனைச் சொல்லுகிறது என்று கூறிவிட்டார்கள். ஆகமகாரர்களும் புருஷ சூக்தத்திற்கும் விஷ்ணு வழி பாட்டோடு தனியான ஸம்பந்தத்தை ஒப்புக்கொண்டு விட்டார்கள். விஷ்ணு ஆலயங்களில் புருஷ சூக்தத்தினல் பூஜை செய்வது வற்புறுத்தப்படுகிறது. மற்ற மந்திரங்களால் மற்ற உபசாரங்களைச் செய்தாலும் அபிஷேகம் புருஷ சூக்தத்தினுலேயே செய்யப்படவேண்டும். சிவாலயங்களில் ஸ்ரீருத்திரத்தினல் அபிஷேகம் எப்படி செய்யப்படுகிறதோ, அவ்விதமே விஷ்ணு ஆலயங்களில் திருமஞ்சன காலங்களில், புருஷ சூக்தம் சொல்லப்படுகிறது.

புருஷசூக்தத்தில்ஸகலவேதாந்தக்கருத்துகளும் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன. வேதங்களின் அடிப்படையான பல கருத்துக்களையும் 'இங்கு நாம் பார்க்கிறேம். பல்லாயிரக்கணக்கான மந்திரங்களில் ஆங்காங்குத் தனித்தனியாகச் சொல்லப்படும் கருத்துக்களை ஒருங்கே இங்கு பார்க்கிறேம்; இங்கு 16 மந்திரங்கள் இருந்து வருகின்றன. இவைகள் ஒரே கோவையாக இருந்தாலும், உலகில் கடவுள் இருக்கிருன். ஆனல் அவன் அப்பாலானவன் என்ற கருத்து, இங்கு முக்கியமாக இருப்பதைப் பார்க்கிறேம்.

காணப்படும் உலகமே கடவுள், ஆனல் அவன் அதற்கு அப்பால் உள்ளவன்; அவன் உலகமாகவும் ஆகிருன். அப்பாலுக்கு அப்பாலாக உள்ளவனே, உலகமாக ஆகி இருக்கிருன். தனித்து ஒரு காலத்தில் நின்ற கடவுள் தன்னை மாற்றிக்கொண்டு உலகமாக ஆகிருன், உலகத்தில் உள்ள எல்லாமே அவனிடமிருந்து உண்டாயின. இந்தக் கருத்துக்களைத் தான் புருஷ சூக்தம் திருப்பித்திருப்பி விளக்குகிறது. கருத்தைக் கொண்டு பார்ப்போமேயானல், புருஷ சூக்தத்தை மூன்று கூருகக்கூடப் பிரிக்கலாம்.

முதலில் "காணப்படும் உலகம் முழுவதும் கடவுளே" என்று கூறுகிறது. இப்போது காணப்படும் உலகு கடவுளாக இருந்தாலும், கடந்த காலத்திலோ, நிகழ் காலத்திலோ "உலகம் எப்படி இருந்தது" என்று ஸந்தேகம் ஏற்படுமானதினல், அதை தவிர்க்கக் கடந்த காலத்திலும் உலகம் கடவுளாகத்தானிருந்தது; வருங்காலத்திலும் கடவுளாகத் தானிருக்கும் என்று கூறுகிறது. உலகத்தையே கடவுளாகச் சொன்னல், ஜடமான உலகம் எப்படி கடவுளாக இருக்க முடியும்? என்ற கேள்வி பிறக்கிறது. உண்டாகி அழியக்கூடிய உலகு கடவுளாக இருக்க முடியாது. இந்நிலையில் உலகத்தையும் கடவுளையும் ஒன்று படுத்திப் பேசுவதின் கருத்து என்ன என்பதைக் கவனிக்க வேண்டும்.

கடவுளையும் உலகத்தையும் ஒன்றுபடுத்திப் பேசுபவர்கள், கடவுளையும் உலகத்தை

யும் ஒரேவிதமான இயற்கையோடு ஒப்புக் கொள்ளவில்லை. கடவுள் அறிவு வடிவு உள்ளவன். உலகம், ஜடமானது, துக்க மயமானது. ஆனால் கடவுள் தன் இயற்கையைச் சிறிதும் குறைத்துக்கொள்ளாமல், ஜடமான இயற்கையோடு சேர்ந்து இருக்கிறான். இச் சேர்க்கையை அத்வைதிகள் அத்யாசமென்று கூறுகிறார்கள். மற்றவர்கள் கடவுள் உலகத்தில் கலந்து உள்ளான் என்று கூறுகிறார்கள். உலகத்திற்கு அப்பாலிருந்து உலகத்திற்குள் இருந்து வருகிறான் என்ற கொள்கையைத் தான், புருஷ சூக்தம் முதல் பாகமாக விளக்குகிறது. உலகம் முழுவதும் பரவி உள்ள கடவுள் அதோடு மட்டுமல்லாமல் மேலும் நிற்கிறான் என்றும் கூறுகிறது. உண்டாகி வளரக்கூடிய இவ்வுலகில் கடவுள் இருப்பதால்,உலகம் கடவுள் ஆனாலும், கடவுள் அதைவிட உயர்ந்தவனாக இருந்து வருகிறான் என்றும் கூறுகிறது. படைப்பதற்கு முன்னால் தனியாக இருந்தவன், தன்னுடைய படைப்பில் மறைந்து விடுகிறான் என்றும், அவனை அங்கு யாரும் கண்டு பிடிக்க முடியாது என்றும் அடிக்கடி வேதம் கூறுவது கவனிக்கத்தக்கது.

'விராட்' என்பது ஒரு புதிர் போன்ற வார்த்தை. நன்றாக விளங்குவது என்பது இதன் பொருள். விளங்காத பிரம்மத்தினிடத்திலிருந்து விளங்கும் உலகம்உண்டாவதாகச் சொல்லப்படுகிறது. இதன் முக்யமான நோக்கம், கண்ணுக்குத்தெரியும் உலகம் தானாகத் திடீரென்று உண்டாகவில்லை; அறிவிற்கு எட்டாத ஒரு இடத்திலிருந்து தான் உண்டாகிறது என்று கூறுகிறது. மறுபடியும் பிரபஞ்சத்தையும் பகவானையும் ஒன்று படுத்திப் பேசுகிறோம் என்ற ஐயமேற்பட, அதைத் தவிர்ப்பதற்காக அதற்கும் மேல் ஒரு புருஷன் வந்தான் என்று கூறப்படுகிறது.

இதுவரை கடவுளுக்கும் உலகத்திற்கும் பரஸ்பரம் உள்ள ஸம்பந்தத்தை விளக்கி வந்த புருஷ சூக்தம் இரண்டாம் பாகத்தில் வேறுவகையைக் கையாளுகிறது. கடவுள் உலகமாக ஆவதை ஒரு வேள்வியாக வர்ணிக்கிறது: வேள்வியும் ஸாதாரண வேள்வியில்லை, வெட்டு வேள்வி. இந்த வேள்வியைத் தேவர்கள் செய்கிறார்கள். இந்தத் தேவர்கள் வேறு யாருமில்லை. படைக்கும் சக்திகளே. இந்த வேள்வியில் தேவர்கள் கடவுளையே ஆகுதி பண்ணுகிறார்கள். அதிலிருந்து உலகம் உண்டாகிறது. வேள்வி என்பது இந்து மதத்தின் அடிப்படையாக அமைந்துள்ள ஒரு நற்காரியம். நம்முடையதான ஒரு திரவ்யத்தை அக்கினியில் ஓமம் செய்து அதனால் பயன்களை எதிர்பார்ப்பது வேள்வி என்பது. இந்த வேள்வி, தத்துவத்தில் தியாகம் என்ற அடிப்படையாக அமைந்துள்ளது. தியாகம் என்பது நம்முடைய பொருளைப் பயன் கருதாமல் நாம் கைவிடுவதே. தன்னுடைய அகங்காரம், மமகாரங்களை விட்டு அர்ப்பணம் செய்வதுதான் ஸாத்வீக தியாகம் என்பது. பிறருக்காகத் தன்னுடைய உயிரைக் கொடுத்தாலும், சரீரத்தை அழித்துக்கொண்டாலும், இதுவும் ஒரு தியாகம்தான். வேள்வி என்பது உலகத்தினுடைய எல்லா மக்களுடைய நன்மைக்காகவும் ஏற்பட்டது. அந்த நன்மை வேள்விகளில் பயன்படுத்தப்படும் திரவியங்களால் ஏற்படுகிறது. அந்தத் திரவியங்கள் தம் உருவை அழித்துக் கொண்டால் ஒழிய வேள்வி நிறைவேறாது. அக்கினியில் நெய்யை ஓமம் பண்ணுகிறோம். அந்த நெய் அக்கினியில் பட்டவுடனேயே தன் உருவை அழித்துக் கொண்டு விடுகிறது. அவ்விதமே அந்த அந்நம், ஸமித்து, ஆகியவைகளையும் ஓமம் செய்து, அவைகள் தம் உருவை அழித்துக் கொள்ளச் செய்கிறோம். வெட்டு வேள்விகளில் பிராணிகளையும் இம்ஸித்து, அவற்றினுடைய உறுப்புக்களை ஓமம் பண்ணுகிறார்கள். இங்கு உயிர் உள்ள பிராணி உலக நன்மைக்காகத் தன்னை அழித்துக் கொள்ளுகிறது என்பதை மனத்தில் கொள்ளுவோம். இது மகத்தான தியாகம்.

உலக வாழ்க்கையில் சிறிதாவது தியாகம் பண்ணத் தயாராக இல்லாவிட்டால், ஒரு நன்மையையும் அடைய முடியாது. கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ளத் தீக்குளிப்பதை நாம் பார்க்கிறோம். தீக்குளித்து மறைந்தவன், தான் செய்த காரியத்தால் என்ன நன்மை ஏற்பட்டது என்பதைத் தான் பார்க்காவிட்டாலும், உலகத்தார் பார்க்கிறார்கள். அதிலிருந்து மகத்தான விளைவுகள் ஏற்படுகின்றன,

அரசியல் தலைவர்கள், தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையைத் துறந்து தியாகம் செய்து, பொது மக்களின் நன்மையைக் குறித்துப் பாடுபடுகிறார்கள். அவர்களை நாம் கொண்டாடுகிறோம். குடும்ப வாழ்க்கையில் கூட, மணமாகாதவன் மணமான பிறகு தன் வாழ்க்கையில் சிறிது தியாகத்தைச் செய்தால் தான் மனைவியுடன் வாழ முடியும். ஆணும் பெண்ணுமாக உள்ளவர்கள், குழந்தையைப் பெற்ற பிறகு தங்களுடைய வாழ்க்கையில் சிறிது தியாகம் பண்ணத் தயாராக இருந்தால்தான், குழந்தை வாழ்ந்து வளர முடியும். இந்தத் தியாக புத்தியை வளர்த்துக் கொண்டவர்களைப் பெரியவர்களாகக் கொண்டாடுகிறோம். இந்தத் தியாக புத்தியை அடிப்படையாகக் கொண்டு தான் வெட்டு வேள்வி ஏற்பட்டுள்ளது.

உலக நன்மைக்காக ஒரு பிராணி தன் வாழ்நாளை அழித்துக் கொள்கிறது என்ற இந்தக் கருத்தைப் புருஷ சூக்தம் வெளியிடுவதைப் பார்க்கிறோம். உலகம் உண்டாகாத காலத்தில் கடவுள் ஒருவர் தான் இருந்து வருகிறார். படைக்கும் சக்திகள் இருந்து வருகின்றன. கடவுளின் படைப்பில், ஸம்பந்தப்படுகிற கடவுளின் வழியாக, உலகத்தை உண்டாக்கத் தேவர்கள் நினைக்கிறார்கள். கடவுள் தன் ஸ்வயரூபத்திலேயே இருந்தால் உலகம் உண்டாகாது. ஆகவே, அவர்கள் கடவுள் தன் உருவத்தை அழித்துக் கொள்ளச் செய்ய ஒரு யாகத்தைப் பண்ணினார்கள். அந்த யாகத்தில் கடவுள்தான், பலியிடப்படும் பிராணி. அவனைப் பலி கொடுத்து அவனுடைய உறுப்புக்களை ஓமம் பண்ணினார்கள். கடவுளின் ஸ்வயரூபம் அழிந்து விட்டது. வேள்வி முடிந்ததும் உலகம் உண்டாகி விட்டது. கடவுளிடமிருந்து உலகம் உண்டாயிற்று என்றும், கடவுள் தன்னுடைய உருவத்தை அழித்துக் கொண்டு உலகமாக ஆகிறான் என்றும், அடிப்படையான கருத்தை வேள்வி உருவத்தில் புருஷ சூக்தம் கூறுகிறது. அந்த வேள்வியிலிருந்து நாட்டில் பழகும் பிராணிகளும், காட்டில் வாழும் பிராணிகளும் உண்டாயின. வேதங்கள் உண்டாயின, குதிரை முதலானவைகள் உண்டாயின என்று, கடவுளின் படைப்பை வேள்வி உருவகத்தில், புருஷ சூக்தம் சொல்லுகிறது. இந்த வேள்வியில் காலத்தைப் பற்றின பிரஸ்தாபம் இருப்பது கவனிக்கத் தக்கது. கடவுள் உலகமாக மாறுவது ஒரு காலத்தில்தான் ஏற்படுவதனால், வேள்விக்கு வேண்டிய நெய் ஸமித்து, அங்கம், இவைகளாக ருதுக்களிருந்தன என்று சொல்லப்படுகிறது.

அதற்கு அடுத்தாற்போல், மனித உருவைக் கடவுள் முதலில் அடைகிறான் என்றும், அதிலிருந்து வஸ்துக்கள் உண்டாகின்றன என்றும் கூறப்படுகிறது. நான்கு வர்ணங்களும் முகம், கை, தொடை கால், இவைகளாகக் கூறப்படுவதும் கவனிக்கத் தக்கது. சந்திரன், சூரியன், இந்திரன், அக்கினி, முதலான தேவர்களின் உற்பத்தியும் சொல்லப்படுகிறது. இங்கு பகவானிடமிருந்து ருக் யஜுர் ஸாம வேதங்களும் உண்டாவதாகச்சொல்லப்படுகிறது. பிராமணன் முதலான ஜாதியைப் பற்றிப் புருஷ சூக்தம் சொல்வது மிகவும் கவனிக்கத்தக்கது. பலவிடங்களில் சொல்வதைப் போல், அந்த அந்த ஜாதி உண்டாவதாகச் சொல்லவில்லை. ஆனால் கடவுளுக்கு எது முகமாக இருந்தது, கை எதுவாக இருந்தது என்பது போன்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டு. பிராமணன் முதலான சாதிகள் முகம், கை, தொடை என்று சொல்லப்படுகிறது. இதுவும் ஒரு உருவகமாகவே நிற்பது கவனிக்கத்தக்கது.

புருஷ சூக்தத்தைப் பற்றி மேனாட்டு ஆராய்ச்சியாளரிடையே நெடுங்காலமாகக் கருத்துவேற்றுமை இருந்துவருகிறது. நான்கு சாதிகளைப் பற்றின குறிப்பு இருப்பதால், இது பிற்காலத்தியது என்று மாக்ஸ் முல்லர் போன்றவர்கள் கூறுகிறார்கள். ஆனால் மார்டின் ஹளக் போன்றவர்கள், புருஷ ஸூக்தம் மிக மிகப் புராதனமான மந்திரம் என்றும், புருஷ சூக்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு வட ஐரோப்பாக் கண்டங்களில் இன்னும் கதைகள் சொல்லப்படுகின்றன என்றும் கூறுகிறார்கள். புருஷ சூக்தம் உபநிஷதங்கள் அனைத்திற்கும் உரிய ஸாரமாக அமைந்து இருப்பதை யாரும் மறுக்க முடியாது. அதனால் அதனுடைய பெருமை தனிமையாகவே விளங்குகிறது.